REGISTERED AS A NEWSPAPER பக்கங்கள் 08

விலை ரூபா 6·00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஐப்பசி 18 | 04-11-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 259

## தொல்லைகளிலிருந்து பெண்களை விடுவிக்க விசேட பொலிஸ் பிரிவு

ஆண்களின் தொல்லைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்க சிறிலங்காவில் விசேட மகளிர் பொலிஸ் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கென பயிற்சி அளிக்கப்பட்ட பெண் பொலிசாரை உள்ளடக்கிய முதலாவது மகளிர் பொலிஸ் நிலையம் ஒன்று கல்கிசையில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. வேலைத் தளங்களிலும், வீதிகளிலும் ஆண்களின் இம்சைக்கு ஆளாகும் யுவதிகள் மற்றும் பெண்களின் நலன்களைக் கவனிப்பதற்கென பொலிஸ் நிலையங்கள் (8 ஆம் பக்கம் பார்க்க)

## சீனியின் விலை ஒரு ரூபாவால் குறைப்பு

சீனி, கருவாடு, மஞ்சள், கடுகு; செத்தல் மிளகாய் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக வாணிப உணவு அமைச்சர் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி சீனி ஒரு ரூபாயாலும் கருவாடு 40 ரூபாவாலும் மஞ்சள் 15 ரூபாவாலும் கடுகு செத்தல்மிளகாய் ஆகியவற்றின் விலைகள் 10

( 8 ஆம் பக்கம் பார்க்க )

# புதிய அரசாங்கத்தால் 530கோடி ரூபா ஆயுதக் கொள்வனவிற்கு ஒதுக்கீடு!

## ரஷ்ய ஹெலிகள் கொள்வனவு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பாதுகாப்பு செலவினங்களுக்காக மேலும் 530 கோடி ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இந் நிதி விமானங்கள் மற்றும் உலங்கு வானூர்திகள்கொள்வனவிற்குப் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த ஆண்டிற்கான பாதுகாப்புச் செலவினம் 2530 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது- இது சிறிலங்காவின் வரவு செலவுத் திட்டத்தில் 27 சதவீதமாகும்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று குறை நிரப்புப் பிரேரணை ஒன்றின்மூலம் இந்நிதி ஒதுக்கீடு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக நிதி அமைச்சின் செயலாளர் ஏ- எஸ்- ஜயவர்தனா தெரிவித்துள்ளார்- இந்நிதி ஒதுக்கீடு குறித்து காமினியின் கொலைக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்- இந்நிதி முப்படையினருக்கு வழங்கப்படவேண்டிய படி, யுத்தடாங்கிகள் மற்றும் யுத்தத்திற்குத் தேவையான விமானங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்படவுள்ளன-

இதே வேளை விமானப்படை நடவடிக்கைகளுக்குத் தேவையான எம்- ஐ· 18 ரக ரஷ்ய உலங்குவானூர்திகள் மூன்று விரைவில்கொள்வனவு செய்யப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் தகவல் தெரிவிக்கிறது இதற்கான அனுமதி புதிய அரசாங்கத்தால வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## குடியுரிமை வழங்கும் நடைமுறையில கனடா கடும் கட்டுப்பாடு

கனடாவின் புதிய குடிவரவுக் கட்டுப்பாடுகள் குறித்து மேற்குக்கரைப் பகுதியில் குடியேறியுள்ள ஆசிய மக்களிடையே கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது

கனடா கடந்த செவ்வாய் விடுத்த அறிவித்தலில் நாட்டுக்குள் குடியேற வருவோரின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கப் போவதாகவும் தொழிற்பயிற்சிபெற்றவர்கள் தொழில் முயற்சிகளில் முதலீடு செய்பவர்களுக்கு குடியுரிமையில் முன்னுரிமை அளிக்கப்போவதாகவும் அறிவித்திருந்தது

இந்த ஆண்டு 2 லட்சத்து 50 ஆயிரம்பேருக்குகுடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த கனேடிய அரசு இந்த எண்ணிக்கை 1995ஆம் ஆண்டில் 1லட்சத்து 90ஆயிரத்திலிருந்து 2லட்சத்து 15ஆயிரம் வரை குறைக்கப்படும் எனவும் தெரிவித்தது

ஏற்கனவே கனடா வந்து குடியேறியவர்கள் தமது குடும்பங்களை அங்கு அழைப்பதற்கும் கடும் நிபந்தனை விதிக்கப் போவதாக அறிவித்துள்ளது

## சிறிலங்கா கடற்படை சூடு; தமிழக மீனவர் ஒருவர் பலி

### நான்கு பேர் படுகாயம்; படகு சேதம்

(சென்னை)

கச்சதீவுக்கருகே தமிழக மீனவர் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டினால் மீனவர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் நால்வர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன் தினம் நடைபெற்றஇச்சம்பவத்தின்போது இறந்த மீனவரின் சடலத்தை காயமடைந்த ஏனைய மீனவர்கள் கரைக்குக் கொண்டு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது-இம்மீனவர்களது வலைகளும் வள்ளம் ஆகியனவும் சிறிலங்காகடற்படையினரால் சேதமாக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இச்சம்பவம் குறித்து தமி

## இராணுவத்தின் வேட்டிற்கு

## இரு கப்பல்கள் இன்று வரலாம்

கோமாரி கப்பல் ஒரு தொகுதி கோதுமை மாவுடனும் கபறணை கப்பல் தனியாரிற்கான பொருட்களுடனும் இன்று பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குமண கப்பலில் வடபகுதிக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கும் தனியாரிற்

## மேலும் 32கோடி 50லட். ரூபா பாதுகாப்பு அமைச்சு கோருகிறது

(கொழும்பு)

பாதுகாப்பு செலவினமாக மேலும் 32 கோடியே 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என பாதுகாப்பு அமைச்சு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது

சந்திரிகா அரசாங்கத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை 530 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டபின்னரே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

எனினும் மேற்படி மேலதிக நிதி ஒதுக்கீட்டிற்கான வேண்டுகோள் குறித்து கருத்துத் தெரிவிக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா மறுத்துள்ளார்

## சீன பக்க டாங்கிகளை பிருக்க

டுக்குள் குடியேற வருவோரின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கப் போவதாகவும்

வழங்கப்பட்டுள்ளதாக தெரி வித்த கனேடிய அரசு இந்த எண்ணிக்கை 1995ஆம் ஆண்

கப் போவதாக அறிவித்துள் ளது

பட்டதாக நிதி அமைச்சின் செயலாளர் ஏ.எஸ். ஜயவர் தனா தெரிவித்துள்ளார். இந் நிதி ஒதுக்கீடு குறித்து காமினி

படவேண்டிய படி, யுத்தடாங் கிகள் மற்றும் யுத்தத்திற்குத் தேவையான விமானங்கள்

படை நடவடிக்கைகளுக்குத் தேவையான எம். ஐ. 18 ரக ரஷ்சிய உலங்குவானூர்திகள்

அனுமதி புதிய அரசாங்கத்தால வழங்கப்பட்டுள்ளதாக வும் தெரியவருகிறது.

# சிறிலங்கா கடற்படை சூடு; தமிழக மீனவர் ஒருவர் பலி

(சென்னை)

கச்சதீவுக்கருகே தமிழக மீனவர் மீது சிறிலங்கா கடற் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டினால் மீன வர் ஒருவர் கொல்லப்பட்ட துடன் நால்வர் படுகாயம

## நான்கு பேர் படுகாயம்; படகு சேதம்

டைந்தனர்.

நேற்று முன் தினம் நடை பெற்றஇச்சம்பவத்தின்போது இறந்த மீனவரின் சடலத்தை காயமடைந்த ஏனைய மீன வர்கள் கரைக்குக் கொண்டு சென்றதாக தெரிவிக்கப்படு கிறது-இம்மீனவர்களது வலை களும் வள்ளம் ஆகியனவும் சிறிலங்காகடற்படையினரால் சேதமாக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இச்சம்பவம் குறித்து தமி ழக பொலிசார் வழக்கு ஒன் றைப் பதிவு செய்துள்ளதாக இந்திய வானொலி தெரிவித் தது

# இராணுவத்தின் வேட்டிற்கு பொதுமகன் பலி

மட்டக்களப்பு மாவட்டத் தில் ஆண்டாங்குள பிரதே சத்தின் குருவிக்கல் என்னு மிடத்தில் வைத்து பொது மக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக் கிப் பிரயோகம் மேற்கொண் டதில் ஒரு பொதுமகன் கொல்லப்பட்டார். ஒருவர் காயமடைந்தார்.

சுமியங்கண்டலடி வாகரை யைச் சேர்ந்த நாலு பிள் ளைகளின் தந்தையான அமர சிங்கம் (வயது 40) என்ப வரே கொலலப்பட்டவரா வார். இதேவேளை துப் பாக்கிப் பிரயோகம் மேற் கொண்ட இராணுவத்தினர் பத்து வீடுகளையும் தீ வைத்து எரித்துள்ளனர்.

# இரு கப்பல்கள் இன்று வரலாம்

கோமாரி கப்பல் ஒரு தொகுதி கோதுமை மாவுட னும் கபறணை கப்பல் தனி யாரிற்கான பொருட்களுட னும் இன்று பருத்தித் துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குமண கப்பலில் வடபகுதிக் குத் தேவையான விதை உரு ளைக்கிழங்கும் தனியாரிற் கான பொருட்களும் ஏற்றப் படுவதாக செயலக வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

(இ தி)

அரச சார்பற்ற நிறுவனங்கள்

# பிரதிநிதிகள் குழுவொன்று நாளை யாழ். வருகிறது

[யாழ்ப்பாணம்]

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிக ராலயத்தைச்சேர்ந்த இரண்டு முக்கிய பிரதிநிதிகளும் கொழு ம்பு அரச சார்பற்ற நிறுவனங் களின் குழுவொன்றும் நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் குழுவினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பலொன்றிலேயே திருகோ ணமலையில்இருந்து பருத்தித் துறைக்கு வந்து சேரவுள்ள னர் என அகதிகளுக்கான ஐ. நா. யாழ்வதிவிடப் பிரதி நிதி தெரிவித்தார்.

மி. செப்னா, பி. லொறி லிர ஆகிய இரு ஐ.நா. பிரதி நிதிகளே நாளை இங்குவந்து சேரவுள்ளவர்களாவர்.

இவர்கள் இங்குள்ள நிலை மைகளை நேரில் அவதானித் தும் விடுதலைப்புலிகள் பிரதி நிதிகளைச் சந்தித்து உரை யாடுவதுடன் திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

யாழ். போதனா வைத்தியசாலையில்

# ஒக்டோபர் மாதம் மட்டும் 32 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் கடந்த ஒக்டோ பர் மாதம் மட்டும் முப்பத்தி ரெண்டாயிரத்து நூற்றி தொண்ணூற்றாறு பேர் சிகிச் சைக்கென அனுமதிக்கப்பட் டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

இதில் 27058 பேர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். 5138 பேர் வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை களைப் பெற்றும் ஒருபகு தியினர் தொடர்ந்து சிகிச் சைக்குட்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது

அத்துடன் தற்சமயம் மழை காலம் ஆரம்பித்துள்ள மையை அடுத்து பெரும் எண்ணிக்கையான நோயா

(08 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலைக்கண்காணிக்க இந்திய அதிகாரிகள் குழு

(சென்னை)

சிறிலங்காவில் நடைபெற வுள்ள ஜனாதிபதித் தேர் தலைக் கண்காணிக்க இந்தி யாவிலிருந்து முன்னாள் மூத்த அரச அதிகாரிகள் குழு ஒன்று வரவுளது.

சிறிலங்காவில் ஜனாதி பதித் தேர்தல் எதிர் வரும் ஒன்பதாம் திகதி நடைபெற வுள்ளது இத்தேர்தலை கண் காணிக்க வெளிநாட்டுக் குழு ஒன்றை அழைப்பது எனவும் பிரதமர் சந்திரிகா குமார துங்கா ஏற்கனவே அறிவித்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# மேலும் 32கோடி 50லட். ரூபா பாதுகாப்பு அமைச்சு கோருகிறது

(கொழும்பு)

பாதுகாப்பு செலவினமாக மேலும் 32 கோடியே 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக் கீடு செய்யப்படவேண்டும் என பாதுகாப்பு அமைச்சு அரசாங்கத்திடம் வேண்டு கோள் விடுத்துள்ளது

சந்திரிகா அரசாங்கத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை 530 கோடி ரூபா நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டபின்னரே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

எனினும் மேற்படி மேல திக நிதி ஒதுக்கீட்டிற்கான வேண்டுகோள் குறித்து கருத்துத் தெரிவிக்க பாது காப்பு அமைச்சின் செயல ளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா மறுத்துள்ளார்

# சீன யுத்த டாங்கிகளை திருத்த சீன உதவியுடன் திருத்தத்தளம்

(கொழும்பு)

சீனாவிலிருந்து பெறப்பட்டு பழுதடைந்த நிலையில் இரு க்கும் யுத்த டாங்கிகளையும் வேறு ஆயுத தளபாடங்க ளையும் இலங்கையில் வைத் தே திருத்துவதற்கு சீன இராணுவ நிபுணர்களின் உத வியுடன் இராணுவ தளபாட திருத்த தளம் ஒன்றை அமை க்க அரசாங்கம் கொள்கைய ளவில் தீர்மானித்துள்ளது.

இது திருகோணமலையில் அல்லது காலியில் அமைக்கப் படலாம் எனவும் தெரிய வருகிறது.

சீனாவிலிருந்து பெறப் பட்ட பெருந்தொகையான டாங்கிகளும், இராணுவ தள பாடங்களும் சிறிலங்கா இரா ணுவத்தினரின் பாவனையி லிருப்பது குறிப்பிடத்தக்கது.

இத்திருத்த வேலைகளுக்கான உதிரிப்பாகங்கள் சீனாவிலிரு ந்து அந்நாட்டு நிபுணர்க ளால் எடுத்து வரப் படும் எனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக கொழும்பிலிரு ந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத் திருத்த தளம் திரு கோணமலையில் அல்லது காலியிலுள்ள பூசாவில் அமைக்கப்படலாமென தெரிய வருகின்றது, பூசாவி லுள்ள கைதிகள் தடுப்பு முகாம் தற்போது மூடுவத ற்கு முடிவெடுக்கப்பட்டுள்ள தால் இந்த தடுப்பு முகாம் அமைந்துள்ள பகுதியில் இத் திருத்த தளம்அமையலாமென மேலும் தெரிய வருகின்றது.

# அரசியற்தலைவர்களுக்கு மிரட்டல் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

அரசியல் தலைவர்கள் சில ருக்கு கொலைப் பயமுறுத்தல் கள் விடுக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து அவர்களுக்கு புதிய முறையில் கூடுதல் பாது காப்பு வழங்க அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக அமைச்சர வைப் பேச்சாளரான தர்ம சிறி சேனநாயக்கா தெரிவித் துள்ளார்

பிரதமர் சந்திரிகா குமார துங்கா, முன்னாள் பிரதம ரும் எதிர்க்கட்சித் தலைவரு மான ரணில் விக்கிரமசிங்கா, ஐதேக ஜனாதிபதி வேட் பாளர் சிறிமா திசாநாயக்கா ஆகியோருக்கே பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட் டுள்ளன.

இதேவேளை, அரசியல் தலைவர்களை பாதுகாப்பதற் காக இதுவரை வழங்கி வந்த பாதுகாப்புமுறைகள் தோல் வியைக் கண்டுள்ளதை தொடர்ந்து புதிய முறையி லான பாதுகாபபு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வ த்த தெரிவிததுள்ளார்

சகலருக்கும் எழுத்தறிவூட்டல்

# யாழ். கல்வித்திணைக்களம் 1,08,000 ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

சகலருக்கும் எழுத்தறிவூட் டல் என்னும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலு ள்ள எழுத்தறிவற்றவர்களு க்கு கற்பிப்பதற்காக யாழ். மாவட்ட கல்வித் திணைக் களம் ஒரு இலட்சத்து எண் ணாயிரம் ரூபாவை ஒதுக்கி யுள்ளது.

இரண்டாயிரமாம் ஆண் டில் இலங்கையில் யாரும் எழுத்தறிவற்று இருக்கக் கூடாது என்ற திட்டத்திற் கமையவே யாழ். மாவட் டத்திலும் இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத் திட்டத்திற்கு அமை

( 8 ஆம் பக்கம் பார்க்க )

# ஒஸியின் மூளைப்பகுதியில் இரத்தம் உறைந்துள்ளது

கிராண்பாஸ் குண்டுவெடிப் பில் படுகாயமடைந்து கொழு ம்பு பெரியாஸ்பத்திரி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்க ப்பட்டிருக்கும் ஒஸிஅபே குண சேகர எம்.பிக்கு சிகிச்சையளி க்கவென வெளிநாட்டிலிருந்து சத்திரசிகிச்சை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுளளனர்.

ஒஸிக்கு தலையில் மூன்று சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவரின் மூளைப்பகுதியில் இரத்தம் உறைந்திருக்கிறது என்று டாக்டர்கள் தெரிவித் தனர். அவருக்கு செயற்கை சுவாசமே அளிக்கப்பட்டு வரு கிறது எனவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

# படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமை யான நேரத்திற்கு நடை. பெறுமென அரசியற் துறையினர் அறிவித்துள் ளனர்.

கொழும்பு விடுதிகளில்

# வடபகுதியினருக்கு மேலதிக கட்டுப்பாடுகள்

(கொழும்பு)

கொழும்பில் விடுதிகளில் தங்கும் வடபகுதி பயணிகளின் தேசிய அடையாள அட்டைகளின் போட்டோஸ்ரட் பிரதி களை பெற்று வைத்திருக்குமாறு கொழும்பு பொலிசார் விடுதி உரிமையாளர்களுக்கு கட்டளை பிறப்பித்துள்ளதாக அங்கி ருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேபோல், விடுதிகளில் தங்குவோர் பற்றிய விபரங் களையும் உடனடியாக பெறத்தக்கவகையில் உரிமையாளர் கள் வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது

## வரி விளம்பரம்

### இன்று (0.-11-94) வியாழ மாற்றம்

வாக்கியப்படி இன்றும் திருக்கணிதப்படி 11-11-94 இலும் வியாழ பகவான் துலா ராசியிலிருந்து விருச்சிகராசிக்கு மாற்றமடைந்து 1 வருடம் வரை சஞ்சரிப்பார் வியாழமாற்றம் ரூபா 10/- விற்பனையாகின்றது, சோபிதா, யாழ்ப்பாணம் (நூலாசிரியர்-சதியா) (9951)

### வியாழமாற்றம்

இன்று தொடக்கம் ஒரு வருடத்திற்கு உங்கள் தலைவிதியை அறிய 'விண்ணில் வியாழ மாற்றம்: மண்ணில் உங்கள் யோகபலன் எங்கும் விற்பனையாகிறது விரைவில் எதிர்பாருங்கள் '1995 உங்களுக்கு எப்படி?' சோதிடர் V. A: சிவராசா (வேலணை) 152B அரசடி றோட், கந்தர் மடம் (9974)

### நீமியா உரம் நாயன்மார்க்கட்டில்

பயிருக்கு ஊட்டம் அளிப்பது நீமியா உரம்: பயிரைப் பூச்சிகள் பீடைகளில் இருந்து பாதுகாப்பது நீமியா உரம்: விவசாயிகள் வசதி கருதி நாயன்மார்க்கட்டில், செம்மணி வீதி 310-ம்இலக்கத்தில் மக்கள் நலன்காக்கும் பிரிவிலும் விற்பனையாகிறது. ''மில்க்வைற்'' (சி-16943)

### றோணியோபிரதி செய்தல்

100பேப்பர் இரண்டு பக்கம் தெளிவாக பிரதி செய்வதற்கு 30 ரூபா மட்டும் அறவிடப்படுகிறது. ரைப்பிங் 8/-அறிவகம் புத்தகசாலை 374, மணிக்கூட்டுவீதி (வெலிங்டன் சந்திக்கருகாமை) யாழ்ப்பாணம். (9978)

### திருமண அழைப்பிதழ்

5-11-94அன்று செல்வன் செல்வேஸ்வரனுக்கும் செல்வி ரகிதரணிக்கும் காலை 11 மணியளவில் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் நடைபெறவிருந்த திருமணம் தவிர்க்க முடியாத காரணத்தால் நல்லை ஆதீனத்தில் அதே சுபவேளையில் நடைபெறும்: க.வைரவநாதனும் துணைவியாரும் Dr செ. செல்வத்தம்பி

## காணவில்லை

இல-35, செல்லர் வீதி நல்லூரில் வசிக்கும் நடராசா சாந்தபவன் (நாரந்தனை வடக்கு) கடந்த ஒரு வாரமாக காணவில்லை வயது 35 இவரைக்கண்டவர்கள் கீழ்க் காணும் முகவரியில் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

மணிக்குரல் விளம்பரசேவை
பஸ் நிலையம் யாழ்ப்பாணம்
(9973)

## நீங்காத நினைவுகளில் ஆண்டுகள் ஏழு



சின்னத்தம்பி
பாலகிருஸ்ணன்
(சதீஸ்)

மலர்வு:
23.07.1967


உதிர்வு:
22.11,1987

அன்பு மகனே!
அருமைத் தம்பியே!!
நெஞ்சில் நிறைந்த எம்மினிய சதீசே!!!
ஞாயிறென ஒளிர்ந்திருந்தாய்
திங்களைப்போல் திகழ்ந்திருந்தாய்
செவ் வாயால் சிவந்த வார்த்தை
சொன்னதை நாம் கேட்டறியோம்
பொங்கி எழும் கடலைப்போல்
பொழிந்திருந்தாய் பாசமதை
உன் பாசக் கடலதனில்
நாம் நீந்தித் திளைக்கையிலே
தன் பாசக் கயிறெறிந்து
தன்னடியில் சேர்த்திறைவன்
எம் நெஞ்சில் இரத்தமதை
உறைய வைப்பார் என்றறியோம்
ஆண்டவனின் பாதம் சென்று
ஆண்டேழு சென்றதுவோ
நேற்றுப்போல் உன் நினைவு
நெஞ்சத்தில் கனக்குதையா
வஞ்சமில்லா உன் முகத்து
வதனம் எம்மை வாட்டுதையா;

அன்னாரின் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, மருமக்கள்,
அண்ணன்மார், அக்காமார்,
அத்தான்மார், அண்ணிமார்
மற்றும் உற்றார், உறவினர்கள்

நாவற்குழி சந்தி.
கைதடி.
(9972)

## 7 ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு

## சேவை நலம் பாராட்டு விழா



அதிபர்
திரு.வேலுப்பிள்ளை
மகேஸ்வரன்
(இரத்தினதாரகை, வதிரி)


1994-11-04-ல் தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து தமது 33 வருட ஆசிரிய - அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெறும் இவரின் சேவையைப் பாராட்டி யா/கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்தினர் விழா எடுக்கின்றனர்.

யா-புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் ஆசிரிய சேவையை ஆரம்பித்த இவர் தொடர்ந்து யா-தேவரையாளி இந்துக் கல்லூரியில் கடமையாற்றியவேளை விளையாட்டுத் துறைக்கு அளப்பரிய சேவை செய்தவர்.

1975-ம் ஆண்டு அதிபராகப் பதவி உயர்வு பெற்று முழங்காவில் ம. வி. யா-அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் ஆகியவற்றில் கடமையாற்றி கடந்த 12 வருடங்கள் யா-கொற்றாவத்தை அ. மி. வித்தியாலயத்தில் கடமையாற்றி, அதன் இன்றைய வளர்ச்சிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்.

தலைசிறந்த அதிபரும், நல்ல ஆங்கில ஆசிரியரும், பாராட்டற்கரிய பண்பாளருமான இவரை பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் ஆகிய நாம் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம். (9949)

## 4ம்-ஆண்டு நினைவஞ்சலி



## நினைவு கூருகின்றோம்...

### 04. 11. 94

1988-ம் ஆண்டு பச்சனூர் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**காவிராஜா**

யாழ்-இணுவில் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்,

**கனகசபை தனபாலசிங்கம்** (காங்கேசன்துறை)

1990-ம் ஆண்டு மாவிட்டபுரம், தச்சன்காட்டு சிறிலங்கா இராணுவ மினிமுகாம் தாக்குதலில் விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**ரொபேக்கா** (வனிதா பொன்னையா - தம்பலகாமம்-பளை)

**பபித்தா** (பாலசாந்தினி பாலசிங்கம் - குப்பிளான் தெற்கு, ஏழாலை-யாழ்)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.மறவன்** (சிங்கராசா சிறிகாந்தரூபன் - முல்லைத்தீவு)

திருமலை - நெடுங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது வீரச்சாவெய்திய,

**லெப்.கனகு** (தியாகராசா கோணேஸ்வரன் - மேன்காமம், கிளிவெட்டி-திருமலை)

**இலட்சுமணன்** (தில்லையம்பலம் சிவராசா-சங்குவேலி - மூதூர் - திருமலை)

**கணேஸ்** (டேவிட்சில்வா விக்கினேஸ்வரன் - தம்பலகமம்-திருமலை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10641)

## ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18-04-1938

மறைவு
26-10-1992

8/-அறிவகம் புத்தகசாலை 374, மணிக்கூட்டுவீதி (வெலிங்டன் சந்திக்கருகாமை) யாழ்ப்பாணம்.

(9978)

## திருமண அழைப்பிதழ்

5-11-94 அன்று செல்வன் செல்வேஸ்வரனுக்கும் செல்வி ரகிதரணிக்கும் காலை 11 மணியளவில் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் நடைபெறவிருந்த திருமணம் தவிர்க்க முடியாத காரணத்தால் நல்லை ஆதீனத்தில் அதே சுபவேளையில் நடைபெறும்: க. வைரவநாதனும் துணைவியாரும் Dr செ. செல்வத்தம்பியும் துணைவியாரும் (9966)

## மணற்காடு

போர்ச்சூழலில் உளத்திற்கு தேவைப்படும் ஓய்வுக்கும் மகிழ்ச்சியான மனப்பாங்கிற்கும் மணற்காடு வாய்ப்பைத் தந்திருக்கின்றது.

உயர்ந்து வளர்ந்த பசுமை மரங்களும் கடற்கரையும் தென்றலாக மேனி தொட்டு வரும் காற்றும் அப்பகுதியை எல்லோரும் நாடச் செய்திருக்கின்றது

இயற்கை ரீதியான தாக்கங்கள் தவிர்க்கப்பட்டு வரும் இப்பூமி, இன்னமும் பசுமை செழிக்கும்போது, விடுதலைப் போராட்ட வாழ்வில் செய்யப்பட்ட தேச நிர்மாணப் பணியில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.


நேற்றுப்போல் உன் நினைவு
நெஞ்சத்தில் கனக்குதையா
வஞ்சமில்லா உன் முகத்து
வதனம் எம்மை வாட்டுதையா!

அன்னாரின் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, மருமக்கள்,
அண்ணன்மார், அக்காமார்,
அத்தான்மார், அண்ணிமார்
மற்றும் உற்றார், உறவினர்கள்

நாவற்குழி சந்தி.
கைதடி.

(9972)

## 7ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
14. 01. 1925

உதிர்வு
23. 10. 1987

திதி: 04. 11. 1994
பிரதமை

### அமரர் வல்லிபுரம் மாணிக்கம்

ஆண்டுகள் ஏழு கழிந்தன
ஆறாத்துயரில் வருந்துகின்றோம்
அரக்கர் செயலை எண்ணி
அனுதினமும் அழுகின்றோம்

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள் பேரப்பிள்ளைகள்

14, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

[9979]


## போட்டோ அல்பம் இனாம்

★ கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்.

● கொம்யூட்டர் றபர் சீல் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)

★ லயின், காவ்ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)

● புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY) மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!


## (:) கொழும்பு கலைக்கூடம் (:)

(கொழும்பு ஸ்ரூடியோ)

55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.

தொழில் நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

(சி-10642)

### 2-ம் லெப்டினன்ட் சினன்

(சற்குரு சதீஸ்)

தாயின் மடியில் 6-2-1975 | தாயகமடியில் 19-10-1990

திதி:-4-11-1994 (வெள்ளிக்கிழமை)

நீர்வைமுத்து பெற்றெடுத்த கண்ணா சதீசே
ஆண்டு நாலு ஆனாலும்
எங்கள் கரங்கள் இன்றும் உன்படுக்கையில் தேடுதே

-குடும்பத்தினர்

சதீஸ் வீதி,
நீர்வேலி வடக்கு
நீர்வேலி.

(9970)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
4-10-69

உதிர்வு
6-10-94

### செல்வச்சிவம் (பண்டா) அருட்சிவம்

நாளை சனிக்கிழமை 05.11.94 மதிதொனி கரவெட்டியில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரிக்காடு
வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்

(9956)

## ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18-04-1938

மறைவு
26-10-1992

### திருமதி இரத்தினம்மா தம்பிராஜா

அன்பின் இருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின்இருப்பிடமாய் வாழ்ந்து எமக்குவழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே இரண்டென்ன ஈராயிரம் ஆண்டுகள் தான் ஓடி மறைந்தாலும் நம் மனத்தை விட்டு நீங்காது நின் நினைவுகள், நாம் உள்ள மட்டும்.


தங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டி நிற்கும்,

78/6 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(9967)

மகன், மகள், மருமகன்
பேரப்பிள்ளைகள்.

## 31ம் நாள்நினைவலைகள்



மலர்வு
12-10 1953

உதிர்வு
5-10-1994

### அமரர்
### திரு. ஆழ்வார்ப்பிள்ளை இரத்தினம்

அன்பின் சிகரமாய் பாசத்தின் சுடரொளியாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பண்பின் உறைவிடமாய்
விளங்கிய எமது அன்புதெய்வமே

இந்நாளில் உமது ஆத்மாசாந்தி அடைய வேண்டி இறைவனை பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் மரணச் செய்திகேட்டு எமது துயர் துடைத்து பலவழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிறுப்பிட்டி. மேற்கு
நீர்வேலி

(9976)

உமது பிரிவால் வாடும்
குடும்பத்தினரும்
சகோதரர்களும்

# தாம் வீசிய அமைதி வலைக்குள் தாமே சிக்கிய அரபாத்தும் றபினும்

என்றும்போலவேஇன்றும் மத்தியகிழக்கு கொந்தளிக்கின்றது; குமுறுகின்றது. பல்வேறு அரசியல் இராசதந்திர செயற்பாடுகள் அங்கே அரங்கேறுகின்றன. அவரவர் நலன் பேணும் அமைதி உடன்பாடுகள் எட்டப்படுகின்றன. இப்போது மொரக்கோவின் தலைநகரான சசபிளாங்காவில் மத்திய கிழக்கு- வட ஆபிரிக்கப் பகுதிகளின் பொருண்மிய மேம்பாடு தொடர்பான 60 நாடுகள் பங்குபற்றும் மாநாடொன்று நடைபெறுகின்றது. வரலாற்றில் முதல் தடவையாக ஏனைய அரபு நாடுகளோடு உறவாடும் நண்பனாக இசுரேலிய பிரதமரான யிட்சாக் றபின் இதில் பங்குபற்றுகின்றார். சில தினங்கட்கு முன் பில்கிளின்டன் இப்பகுதிக்கு வருகைதந்தார். தனது அடுத்த அமெரிக்க சனாதிபதி தேர்தல் வெற்றிக்கு அவர் மலைபோல நம்பியிருக்கும் மத்திய கிழக்கு அமைதி உடன்பாடுகளில் இரண்டாவது யோர்தானுக்கும் இசுரேலுக்குமிடையில் கைச்சாத்தாவதை ஆசீர்வதித்தார். பின்னர் சிரியா சென்று இசுரேலுக்கும் சிரியாவுக்குமிடையில் அடுத்த உடன்பாடு எட்டப்படுவதற்கு தம்மாலானவற்றை செய்ய முயன்றார். இதேவேளை இவ்வருட நோபல் அமைதிப்பரிசு அரபாத்திற்கும் பிரதமர் றபின் அவரது வெளிநாட்டமைச்சர் சிமோன் பெரசுக்கும்கூட்டாக வழங்கப்போவதாக அறிவிப்பு வேறு வெளியாகியுள்ளது. அதேசமயம் என்றுமில்லாதவாறு நோபல் பரிசுக்குழுவின் உறுப்பினரொருவர் அரபாத்திற்கு அமைதிப் பரிசு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரது கரங்கள் இரத்தக்கறை படிந்தவை எனக் கூறி வேறு பரபரப்பை ஏற்படுத்தினார். [ஆனால் 1978ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல்பரிசு எகிப்திய சனாதிபதி அன்வர் சதாத்திற்கும் மெனாச்செம் பெகினுக்கும் வழங்கப்பட்டபோது பெகினின் கைகளில் எத்தனை பாலத்தீனியரைக் கொன்ற இரத்தக்கறை படிந்திருந்தது பற்றி அப்போது எவரும் கேள்வி எழுப்பவில்லை] ஆனால் இவையெல்லாம் ஒரு பக்கக்கதை. இன்னொரு பக்கக்கதை?

## அமைதித் திரையின் பின்னே

இப்பக்கக் கதை மிகப் பயங்கரமானது; அமைதித் திரைக்குப் பின்னே உண்மையில் என்ன இருக்கிறது என்பதை

றிலே 5-ம் இலக்கமிட்ட பயணிகள் பேருந்தினுள்ளே 10 கிலோ ரினன்ரி வெடிப் பொருளை காவிய வண்ணம் பயணித்த மேற்குக்கரை பகுதியைச் சேர்ந்த கமாஸ் இயக்கப் போராளி ஒருவர் காலை மணி 8.55 ஆகியபொழுது தனது பணியை முடித்தார். ரெல்அவிவ் நகரமே என்றுமே கண்டிராத காட்சி; பேருந்து சிதைந்து உருமாறியது. இறந்த 22 பேரின் உடலங்கள் சுக்குநூறாயின. செய்தி அறிந்து இலண்டன்பயணத்தை இடையில் விட்டு வந்த பிரதமர் 'இனி யூதரும் பாலத்தீனியரும் கலந்து வாழ முடியாது' என அலறினார். பெருத்த அவமானப்பட்டு மூக்குடைபட்டுப் போய்விட்டார் றபின் ஏனென்றால் இதே ஒக்டோபர் 12-ம் திகதி நடந்த இன்னொரு சம்பவமும் பாரிய அதிர்ச்சியை இசுரேல் எங்கும் பரப்பியிருந்தது மத்திய இசுரேல் பகுதியிலிருந்து இசுரேலிய இராணுவ வீரனொருவனை கடத்திச் சென்ற கமாஸ் அமைப்பு இசுரேலிய சிறையில் இருக்கும் வயது முதிர்ந்த நோய்வாய்ப்பட்டிருக்கும் தமது ஆன்மீகத் தலைவர் சேக் அகமது யாசினையும் இன்னும் 200 பாலத்தீனிய, லெபனானிய அரசியல் கைதிகளையும் மாற்றாக விடுவிக்குமாறு கோரியது. இம்முறை கமாஸ் இயக்க செயற்பாடுகள் மிக வித்தியாசமானதாக அமைந்தன. கடந்த 5 வருடத்திற்குள் ஒன்பது இசுரேலிய வீரரை கமாஸ் கடத்திய போதும் அவர்களை மறைத்து வைப்பதில் சிக்கல் காரணமாக அவர்களை விரைவிலேயே கொன்றது. ஆனால் இம்முறையோ சிறைப்பிடிக்கப்பட்ட இசுரேலிய வீரன் தன்னை விடுவிக்குமாறு கெஞ்சும் வகையிலமைந்த வீடியோவொன்றை வெளியிட்டதோடு 5 நாட்கள் வரை மறைத்தும் வைத்திருந்தது. இம்முறை கமாஸின் தந்திரம் வேலை செய்தது. கைதான போர் வீரனை இசுரேலின் கட்டுப்பாட்டுப் பகுதியான மேற்குக்கரையிலே மறைத்து விட்டு அவ் வீரன் தொடர்பான வீடியோவை காசாப் பகுதியிலே வெளியிட்டமையே அது. இதனால் றபின் அரபாத்தை கடும்

திருப்பப்பட்டதை உணர்ந்த பின் மேற்குக் கரை நகரொன்றிலே மறைத்து வைக்கப்பட்ட இசுரேலிய இராணுவ வீரனை மீட்க எடுத்த முயற்சி தோல்வியிலேயேமுடிந்தது உயிரற்ற அவனது பிணத்தை மட்டுமே மீட்க முடிந்தது முதல் தடவையாக கமாஸ்தரப்பால் பெருத்த அவமானத்தைறபின் அடைந்தார். இவ்வாறாக இப்போது அடிக்கடி கமாஸ் தரப்பின் தாக்குதல்கள் அதிகரிப்பதோடு அதன் தீவிரமும் கூடிவிட்டது.

## கமாஸ் இயக்கம் வளர்கிறது

இப்போது கமாஸ் இயக்கம் தவிர்க்கமுடியாத ஒரு சக்தியாகிவிட்டது. கமாஸ் இயக்க வளர்ச்சி அதன் தாக்குதல்கள் மூலம் இப்போது நிரூபிக்கப்படுகிறது. இசுரேலிய பகுதிகளில் சிறுசிறு குழுக்களாக உருமாறி மறைந்து தாக்கும் நுட்பம் அவர்களைக் குறைத்து மதிப்பிட முடியாத நிலையை இசுரேலிய தரப்பிற்கு தோற்றுவித்துள்ளது. இப்படியானதன்மைவாய்ந்த ஒரு அமைப்பை தாமென்றுமே சந்தித்தது கிடையாது என்றே இசுரேலிய தரப்பே இப்போ ஒத்துக் கொள்கிறது சில காலம் முன்னர்தான் கமாஸ் இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட 12 தற்கொலைத் தாக்குதல்கள் பயனற்றுப் போயின ஆனால் இப்போது அவ்வாறில்லை. இப்போது எழுந்துள்ள பாரிய அச்சம் என்னவென்றால் கைதேர்ந்த போராளிகளாக மாறிவரும் கமாஸின் அடுத்த இலக்குகள் எது என்பது குறித்தே அமைகின்றது. கமாஸ் இயக்கத்தோடு தொடர்புடையோர் இவர்களின்அடுத்த இலக்குகள் வெளிநாட்டார் மீது குறிப்பாக அமெரிக்கர் மீதாகலாம் என ஊகிக்கின்றனர். அத்தோடு அரபாத்தின் முக்கியமான உயர் அதிகாரிகளாகவும் அமையலாம் என்றும் கூறுகின்றனர். கமாஸ் இயக்கத்தோடு அரபாத்தை மோதவிட்டு வேடிக்கை பார்க்க எண்ணிய றபினுக்கே இப்போது கமாஸ் இயக்கம் பெருத்த அடிகளைக் கொடுத்து வருகின்றது. எனவே கமாஸ்

காப்பு எதிர்ப்பு போராட்ட எழுச்சியான இன்ரிபாதாவோடுதான் கமாஸின் தோற்றம் உருப்பெற்றது. தொடக்கத்தில் சேக் அகமது யாசின் என்பவரது மதம் சார்ந்த சமூகநல அமைப்பின் கிளையாகவே கமாஸ்தோன்றியது. தொடக்கத்தில் தீவிரவாதத் தன்மை கொண்ட மத நம்பிக்கையோடு கமாஸ் வளர்வதைக்கண்டும்காணாமலே இசுரேலிய தரப்பினர்இருந்தனர். ஏனெனில் அரபாத்தின் பாலத்தீனிய விடுதலைஇயக்கத்திற்கு மாற்றாக தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கமாஸ் வளரட்டும் எனஎண்ணினர் ஆனால் 1989 இன்பின் கதைமாறியது இக்கட்டத்திலே இசுரேலிய தரப்பினர் கமாஸ் இயக்க ஆன்மீகத் தலைவரான அகமது யாசினை கைது செய்தனர். இதன் பின்னே கமாஸ் மேலும் தீவிரத் தன்மையும் துரித செயற்பாடுகளும் கொண்ட இளைஞர்களைதன்னுள் உள்வாங்கியது பல்வேறு மேற்குலக நாடுகளில் வாழும்

பாலகுமாரன்

ஆதரவாளர், சவுதி, ஈரான் போன்றவை தொடக்கத்தில் நிதி உதவி அளித்தன. யோர்தானிலும் பின்னர் ஈரானிலும் ஆயுதப் பயிற்சிகளை கமாஸ் பெற்றது. இப்போது பிரதான உதவிகள் அளிக்கும் நாடாக ஈரான் விளங்குகின்றது பாலத்தீனிய சமூகத்தின் பல தரப்பிலிருந்தும் இப்போது கமாஸ் இயக்கத்திற்கு உறுப்பினர் சேர்க்கப்படுகின்றனர் 1993 செப்டெம்பர் இசுரேல்-பாலத்தீன உடன்பாட்டின் பின்னர் இதுவரை 90 பேருக்கு மேல் கமாஸ் இயக்கத்தால் கொல்லப்பட்டு விட்டனர் 'பிறர்எண்ணுவதுபோல்இன்று கமாஸ் அமைப்பு இல்லை. பாலத்தினிய ஏழை மக்களினதும் மட்டுமல்ல அதன் அறிவுசீவிகளினதும் ஆதரவு இவர்கட்குண்டு' என மத்திய கிழக்கு ஆய்வாளரொருவர் குறிப்பிடுகின்றார். எனவே இதுவரை காலமும் உலகிலே மிக நவீனமான புலனாய்வு வசதிகளை,

உட்பட அனைவருமே கமாஸை கட்டுப்படுத்துமாறு அரபாத்தை தூண்டிய வண்ணமே உள்ளனர்-

## என்ன செய்யப் போகின்றார் அரபாத்?

இத்தகையதொரு சூழ்நிலையிலே அரபாத்தின் நிலை மிகுந்த இக்கட்டுக்குள் சிக்கிவிட்டது. 27 வருடத்தின் பின் தனதுதாயக மண்ணைமிதித்த அரபாத்இப்போதுசுடுமணலில் கால் வைத்தார் போல் பதறுகின்றார். அவர் கடந்த மே மாதம் காசா, யெரிக்கோ பகுதியின் மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி பொறுப்பை ஏற்றபோது கமாஸ் இயக்கத்தோடு மோதலை தவிர்த்தது மட்டுமன்றி அவர்களோடு நல்லிணக்கம் ஒன்றையுமே உருவாக்க முயன்றார். அதேவேளை காசாப்பகுதியின் பொருண்மிய மேம்பாட்டை உயர்த்த உலகம் உதவும் என்று எதிர்பார்த்தார். ஆனால் இன்று

இவை எல்லாம் சரிவராமலே போய்விட்டன. இன்றுகாசாப் பகுதி மக்கள் பெரும் பகுதி வேலையற்றுப் மிகுதிப்பேர் இசுரேல் பகுதிகட்கு சென்று அங்கு விவசாயம், கட்டிடத் துறைகளில் பணிபுரிந்தே வயிற்றைக் கழுவி வருகின்றனர். இவ்வாறு சராசரி நாள்தோறும் 70,000 பாலத்தீனியர் இசுரேல் பகுதிகட்கு சென்று உழைத்து வருகின்றனர். எனவே இவர்களிடையே கமாஸ் இயக்க செல்வாக்கை குறைப்பது என்றால் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த பொருண்மிய மேம்பாடு காணவேண்டும். பாலத்தீனிய தாயகத்தின் உயர் மையமான மேற்குக்கரைப் பகுதியையும் அவர் இசுரேல் தரப்போடு பேசி மட்டுப்பட்ட தன்னாட்சி நிலைக்குள் கொண்டு வர வேண்டும். பலத்தீனத்தின் தலை நகர் எனக் கூறிக் கொள்ளப்படும் யெருசலேத்தைதிரும்பப் பெறவேண்டும் யூதக் குடியேற்றங்களை அக

ட்கு தெரிந்ததே. எனவே இப்போது காசாப் பகுதியை மையமாக வைத்து இயங்கும் கமாஸ் அமைப்போடு மோதமுற்பட்டால் மக்கள்ஆதரவை இழக்க நேரிடும் என்பதோடு அமைதி உடன்பாட்டின் பயன் உள்நாட்டு யுத்தம் என்றாகிவிடும் எனவே அரபாத் இப்போது யாரோடு அமைதிஉடன்பாடு செய்யப்போகிறார்? எம்முடனா? அல்லது கமாஸ் அமைப்புடனா? என இக்கட்டான கேள்வியை இசுரேல் எழுப்புகின்றது அரபாத் மெல்ல மெல்ல இசுரேலிய தரப்பின் பிடிக்குள் சிக்குகிறார் என்ற எண்ணம் பரவலாக பாலத்தீனிய மக்கள் மனதிலே வளர்வதாக கூறப்படுகின்றது. பாலத்தீனியம் பற்றிய ஆய்வாளர் கருத்தும் இதுவாகவே உள்ளது.

## அமைதியின் அனாதைகள்

இதற்குப்பிரதானகாரணம் 1948-ம் ஆண்டிலிருந்தே இசுரேலின் ஆக்கிரமிப்பால் தாயகம் இழந்து லெபனான் போன்ற இடங்களிலே இன்னமும் ஏதிலிகளாக சிதறி வாழும் பாலத்தீனிய மக்களின் எதிர்காலம் இன்னமும் இருள் சூழ்ந்ததாக இருப்பதே இசுரேலில் அமைதி ஏற்பட்டதாக கூறப்படுவதன் பயனை இவர்கள் எவ்வகையிலும் அடையவில்லை லெபனானில் மட்டும் 1948-ம் ஆண்டு இசுரேல் உருவாக்கப்பட்டபோது நிலமிழந்த மக்கள் 3 இலட்சத்திற்கு மேற்பட்டோரும் அவர்களதுசந்ததிகளும் அகதி தங்ககங்களிலே இன்றுவரை மிக மோசமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர் இவ்வாறாக மொத்தம் 30 இலட்சம் பேர்வரை உலகெங்கும் பரவி இருக்கக் கூடும் என நம்பப்படுகின்றது.

தொடக்கத்தில் அரபாத்தின் அல்பத்தா இயக்கத்திற்கு போராளிகள் இத்தகைய மக்கள் மத்தியிலிருந்தே சேர்ந்தனர். இன்று தமது பிள்ளைகளையும் இழந்தபின் அரபாத் தம்மை கைவிட்டுவிட்டார் என்கிற எண்ணமே இவர்களிடம் மிஞ்சியிருக்கின்றது. யோர்தானில் மட்டும் இத்த

இப்பாலத்தீன மக்கள் லெபனானில் ஈரான் ஆதரவோடு இயங்கும் 'கிஸ் புல்லா' அமைப்பில் இணைகின்றனர். இன்று பாலத்தீனிய - இசுரேல் உடன்பாட்டிற்கு கமாஸ் மட்டுமன்றி கிஸ்புல்லா அமைப்பும் கடும் எதிர்ப்புந்தெரிவிப்பதுடன்இசுரேல் மீதுதாக்குதல் நடாத்தி வருகின்றனர். 1967-ம் ஆண்டு போரினால் இடம் பெயர்ந்த மக்கள்பற்றி அமைதியுடன்பாடு குறிப்பிடுகின்றது. எனவே தம்மை இப்போது இப்பாலத்தீனிய மக்கள் ''அமைதிஉடன் பாட்டின் அனாதைகள்'' என அழைக்கத் தொடங்குகின்றனர்.

எனவே தான் இப்போது அரபாத் மட்டுமல்ல இசுரேல் பிரதமர் நிலையும் திரிசங்கு நிலையாகி விட்டது. அரபாத் கமாஸ் இயக்கத்தோடு நட்பு பேணுகின்றார், இரகசியமான உறவு கொண்டுள்ளார் என்று இசுரவேலும் இசுரவேலின் கையாள் அதன் கருவி என பாலத்தீனியரும் அரபாத்தை மாறி மாறி குற்றம் சாட்டுகின்றனர். அதே வேளை மேலோட்டமான சில அதிகாரங்களை கொடுத்துவிட்டு அமைதிப் போர்வைக்குள்பாலத்தீனியர் தமக்குள் மோதுவதை எதிர்பார்த்த றபினும் கமாஸ் அமைப்பின் அதிகரித்த தீவிரமான தாக்குதல்களால் அதிர்ந்து போயுள்ளார் கமாஸ் இயக்கத்தை கட்டுப்படுத்த தவறிவிட்டார் என சாட்டுக் கூறி அமைதி உடன்பாட்டின் சில ஏற்பாடுகளை நிறைவேற்றாமல் தள்ளிப்போடும்போதும்கமாஸ்முனைப்புடன்வளர்கின்றது. உடன்பாட்டிலுள்ள அதிகாரங்களையும் மேற்குக்கரைப் பகுதியையும் முற்றாக அரபாத்திடம் ஒப்படைக்கும் போதும் தடுப்பார் எவரும் இல்லாமல் கமாஸ் வளர்ச்சி காணப்போகின்றது. இப்போது என்ன செய்வது? ஒரு வழிப்பாதையின் முடிவினை நோக்கி இவ்வருட நோபல் அமைதிப் பரிசும் பெற்ற இருவரும் நகர்கின்றனர். பாதையின் முடிவில் என்ன நடக்கப்போகின்றது? அது வரலாறு சொல்லும் செய்தியாகும்.

சனாதிபதி அன்வா சதாத்திற்கும் மெனாச்செம் பெகினுக்கும் வழங்கப்பட்டபோது பெகினின் கைகளில் எத்தனை பாலத்தீனியரைக் கொன்ற இரத்தக்கறை படிந்திருந்தது பற்றி அப்போது எவரும் கேள்வி எழுப்பவில்லை] ஆனால் இவையெல்லாம் ஒரு பக்கக்கதை. இன்னொரு பக்கக்கதை?

### அமைதித் திரையின் பின்னே

இப்பக்கக் கதை மிகப் பயங்கரமானது; அமைதித் திரைக்குப் பின்னே உண்மையில் என்ன இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக்குகின்றது. அக்டோபர் மாதம் பத்தொன்பதாம் திகதி யோர்தானோடு உடன்பாடு செய்த மகிழ்ச்சியில் பிரதமர் றபின் இலண்டன் சென்றுவிட்டார்; ரெல் அவிவ் நகரின் மிகப் பரபரப்பான காலை நேரம்; அந்நகரின் மிக உயர்தரமான கடைத் தெருப் பகுதி ஒன்

மறைத்து வைப்பதில் சிக்கல் காரணமாக அவர்களை விரைவிலேயே கொன்றது. ஆனால் இம்முறையோ சிறைப்பிடிக்கப்பட்ட இசுரேலிய வீரன் தன்னை விடுவிக்குமாறு கெஞ்சும் வகையிலமைந்த வீடியோவொன்றை வெளியிட்டதோடு 5 நாட்கள் வரை மறைத்தும் வைத்திருந்தது. இம்முறை கமாஸின் தந்திரம் வேலை செய்தது. கைதான போர் வீரனை இசுரேலின் கட்டுப்பாட்டுப் பகுதியான மேற்குக்கரையிலே மறைத்து விட்டு அவ்வீரன் தொடர்பான வீடியோவை காசாப் பகுதியிலே வெளியிட்டமையே அது. இதனால் றபின் அரபாத்தை சடும் காட்டமான வார்த்தைகளால் எச்சரித்து கைப்பற்றப்பட்ட இசுரேலிய வீரனை விடுவிக்க வேண்டியது அரபாத்தின் பொறுப்பு என்று கூறினார். ஏனென்றால் காசாப்பகுதியின் நிருவாகம் அரபாத்தின் காவல்துறையின் பொறுப்பிலே இருந்தது. ஆனால் தம் தவறாக திசை

என்னவென்றால் கைதேர்ந்த போராளிகளாக மாறிவரும் கமாஸின் அடுத்த இலக்குகள் எது என்பது குறித்தே அமைகின்றது. கமாஸ் இயக்கத்தோடு தொடர்புடையோர் இவர்களின் அடுத்த இலக்குகள் வெளிநாட்டார் மீது குறிப்பாக] அமெரிக்கர் மீதாகலாம் என ஊகிக்கின்றனர். அத்தோடு அரபாத்தின் முக்கியமான உயர் அதிகாரிகளாகவும் அமையலாம் என்றும் கூறுகின்றனர். கமாஸ் இயக்கத்தோடு அரபாத்தை மோத விட்டு வேடிக்கை பார்க்க எண்ணிய றபினுக்கே இப்போது கமாஸ் இயக்கம் பெருத்த அடிகளைக் கொடுத்து வருகின்றது. எனவே கமாஸ் இயக்கப் பின்னணி என்னவென்கிற கேள்வி இங்கே எழுகின்றது.

இசுரேலியரால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரை காசாப் பகுதிகளில் குறிப்பாக காசாப்பகுதியிலே முகிழ்ந்த பாலத்தீனிய மக்களின் தற்

விளங்குகின்றது பாலத்தீனிய சமூகத்தின் பல தரப்பிலிருந்தும் இப்போது கமாஸ் இயக்கத்திற்கு உறுப்பினர் சேர்க்கப்படுகின்றனர் 1993 செப்டெம்பர் இசுரேல்-பாலத்தீன உடன்பாட்டின் பின்னர் இது வரை 90 பேருக்கு மேல் கமாஸ் இயக்கத்தால் கொல்லப்பட்டு விட்டனர் 'பிறர்எண்ணுவதுபோல்இன்று கமாஸ் அமைப்பு இல்லை. பாலத்தீனிய ஏழை மக்களினதும் மட்டுமல்ல அதன் அறிவுசீவிகளினதும் ஆதரவு இவர்கட்குண்டு' என மத்திய கிழக்கு ஆய்வாளரொருவர் குறிப்பிடுகின்றார். எனவே இதுவரை காலமும் உலகிலே மிக நவீனமான புலனாய்வு வசதிகளை, ஆளணி, படை வசதிகள் எல்லாமே கொண்டிருந்தும் காசாப் பகுதியை மையமாக வைத்து இயங்கிய கமாசை இசுரேலியரால் அடக்க முடியாத நிலையில் புதிதாக அரபாத்தால் எப்படி முடியும் என்கிற கேள்வி எழுகின்றது. இருந்த போதும் பில்கிளின்டன்

இவ்வாறு சராசரி நாளொன்றும் 70,000 பாலத்தீனியர் இசுரேல் பகுதிகட்கு சென்று உழைத்து வருகின்றனர். எனவே இவர்களிடையே கமாஸ் இயக்க செல்வாக்கை குறைப்பது என்றால் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த பொருண்மிய மேம்பாடு காணவேண்டும். பாலத்தீனிய தாயகத்தின் உயர் மையமான மேற்குக்கரைப் பகுதியையும் அவர் இசுரேல் தரப்போடு பேசி மட்டுப்பட்ட தன்னாட்சி நிலைக்குள் கொண்டு வர வேண்டும். பலத்தீனத்தின் தலை நகர் எனக் கூறிக் கொள்ளப்படும் யெருசலேத்தை திரும்பப் பெறவேண்டும் யூதக் குடியேற்றங்களை அகற்ற வேண்டும் 1948ம் ஆண்டிலிருந்தே அகதிகளாகிவிட்ட மக்கள் திரும்ப வழிவகுக்க வேண்டும். இவையெல்லாம் 5 வருட கால பேச்சுவார்த்தைக் காலகட்டத்திற்குள்ளே எட்டப்படும் என்பது இசுரேலை புரியாதோர் பேச்சு என்பது பாலத்தீனிய மக்க

அவர்களது சந்ததிகளும் அகதி தங்ககங்களிலே இன்றுவரை மிக மோசமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர் இவ்வாறாக மொத்தம் 30 இலட்சம் பேர்வரை உலகெங்கும் பரவி இருக்கக் கூடும் என நம்பப்படுகின்றது.

தொடக்கத்தில் அரபாத்தின் அல்பத்தா இயக்கத்திற்கு போராளிகள் இத்தகைய மக்கள் மத்தியிலிருந்தே சேர்ந்தனர். இன்று தமது பிள்ளைகளையும் இழந்தபின் அரபாத் தம்மை கைவிட்டுவிட்டார் என்கிற எண்ணமே இவர்களிடம் மிஞ்சியிருக்கின்றது. யோர்தானில் மட்டும் இத்தகைய 10 இலட்சம் பாலத்தீனிய மக்கள் வாக்களிக்கவும் கடவுச் சீட்டுக்களை வைத்திருக்கவும் உரித்தளிக்கப்பட்டுளனர். சிரியா, லெபனான் போன்ற நாடுகளில் வாழும் பாலத்தீனியர்க்கு எவ்வித இத்தகைய உரிமைகள் கிடையாது இதன்பலன் கோபம்கொண்ட

தும்கமாஸ்முனைப்புடன்வளர்கின்றது. உடன்பாட்டிலுள்ள அதிகாரங்களையும் மேற்குக்கரைப் பகுதியையும் முற்றாக அரபாத்திடம் ஒப்படைக்கும் போதும் தடுப்பார் எவரும் இல்லாமல் கமாஸ் வளர்ச்சி காணப்போகின்றது. இப்போது என்ன செய்வது? ஒரு வழிப்பாதையின் முடிவினை நோக்கி இவ்வருட நோபல் அமைதிப் பரிசும் பெற்ற இருவரும் நகர்கின்றனர். பாதையின் முடிவில் என்ன நடக்கப்போகின்றது? அது வரலாறு சொல்லும் செய்தியாகும். அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்காமல் அன்றாடப் பிரச்சினைகளையும் தீர்க்கமுடியாது என்பதே அச் செய்தியாகவிருக்கும். ஏனென்றால், எம் எல்லோர்க்கும் வேண்டியது நிலம் அல்லவா

---

# 'அண்ணா' சி. ஐ. ஏயின் ஏஜென்ட்; சேஷன் கிளப்பியுள்ள புதிய சர்ச்சை

அன்புக்கு மூன்று எழுத்து
அறிவுக்கு மூன்று எழுத்து
அறிவார்ந்தோர் இடையில் எழும்
காதலுக்கு மூன்று எழுத்து
காதல் விளைக்கின்ற
களம் மூன்று எழுத்து
களம் சென்று காணும்
வெற்றிக்கு மூன்று எழுத்து
அந்த வெற்றிக்கு நம்மை ஊக்குவிக்கும்
அண்ணா மூன்று எழுத்து.

பேரறிஞர் அண்ணா எனப் பொதுவாக அறியப்படும் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் சி. என். அண்ணாதுரை 1968ல் மறைந்த போது மு. கருணாநிதி நிகழ்த்திய இரங்கலுரையில் ஒரு பகுதி இதுவாகும்.

பூவிதழின் மென்மையிலும் மென்மையான புனித உள்ளம்.

அன்பு உள்ளம்அரவணைக்கும் அன்னை உள்ளம் என தன் இரங்கலுரையைத் தொடங்கிய மு. கருணாநிதி ஆட்சியைத் தொடர்ந்து நடத்த "இதயத்தை தந்து விடு அண்ணா" என்ற வேண்டுகோளுடன் தமது உரையை நிறைவு செய்திருந்தார் அண்ணா இதயத்தை கொடுத்தாரோ என்னவோ மு. கருணாநிதியிடம் தமிழக ஆட்சி சென்றது. தொடர்ந்து பேரறிஞர் அண்ணாவினால் இதயக்கனிஎனஅழைக்கப்பட்ட எம். ஜீ. இராமச்சந்திரன் முதல்வரானார். 1968ல் மறைந்தது முதல் இன்று வரை "அண்ணாவின் நாமம் வாழ்க'என்ற சுலோகம்தான் தொடர்ந்து தமிழகத்தில் ஆட்சி நடத்துகின்றது. இவ்வாறு தமிழகத்தின் அரசியலில் உந்து சக்தியாகவும் ஊக்க சக்தியாகவும் திகழும் பேரறிஞர் அண்ணாவின் பெயர் இப்போது வேறு மூன்று எழுத்துக்களுடன் தொடர்பு படுத்தப்பட்டு சர்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மத்திய புலனாய்வு கழகம் எனப்படும் சி. ஐ. ஏ. என்ற மூன்று எழுத்து அமைப்புடன் அண்ணாவின் பெயர் தொடர்பு படுத்தப்பட்டிருப்பதேசர்ச்சைகளுக்கு மூலகாரணம்.

### சர்ச்சைகளின் மூலகாரணம்

இந்தியாவின் அரசியலரங்கில் சர்ச்சைக்கு உரியவராகவும் சக்திமிக்கவராகவும் இருந்து கொண்டு அதிரடி அறிவிப்புக்களை அவ்வப்போது அள்ளி வீசுபவர் டி- என்- சேஷன் தேர்தல் ஆணையாளர் என்ற உயர்ந்த பதவியை வகிக்கும் டி- என்- சேஷனின் வாழ்க்கை வரலாறு கோவிந்தன் குட்டி என்பவரால் புத்தகமாக எழுதப்பட்டுள்ளது. இந்தியாவின் முன்னாள் குடிரசுத் தலைவர் ஆர்- வெங்கட்ராமன் எழுதிய மைபிரடென்சியல்இயர்ஸ்(MyPresidential years) என்ற நூலுக்குபின்னர் மிகுந்த சர்சையைகோவிந்தன் குட்டி எழுதிய சேஷனின் வாழ்க்கை வரலாறு ஏற்படுத்தி இருக்கின்றது இவ்வாறு சர்ச்சை கிளம்புவதற்கு முக்கிய காரணம் பேரறிஞர் அண்ணா பற்றிய குறிப்புக்கள்.

1965-ல் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு போராட்டம் மூண்டெழுவதற்கு அமெரிக்க சி ஐ.ஏ ஆக்கமும் ஊக்கமும் அளித்தது எனவும், இப் போராட்டதிதை முன்னெடுத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்கள், குறிப்பாக சி. என் அண்ணாதுரை போன்றோர் சி. ஐ. ஏயின் கைப்பொம்மைகளாக செயற்பட்டனர் என்பதும் இந்நூலில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது இது தான் தமிழகத்தில்உணர்ச்சிப் பெருக்கை தட்டிவிட்டுள்ளது.

அண்ணாவின் மீதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீதும் சேஷன் எந்த அடிப்படையில் இக் குற்றச்சாட்டை சுமத்தி இருக்கிறார் என்பது தெளிவானதாக இல்லை என்னும் தி. மு. க வின் இப்போதையதலைவர் மு கருணாநிதி முதல் தி மு.க மற்றும்,அ! இ. அ. தி. மு. க,வை. கோபாலசாமியின் ம தி மு.க. உட்பட பல்வேறு கட்சிகளும் சேஷனின் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் இப் பகுதி குறித்து கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளன. வை. கோபாலசாமி தலைமையிலான ம. தி மு.க புத்தக எரிப்பை மேற்கொண்டது. கறுப்பு நாள் கொண்டாடப் போவதாக தி.முக எச்சரித்தது சேஷனின் வாழ்க்கை வரலாறு வெளியிடப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று அ.இ.அதி.மு.க வழக்குப்போட்டது.

### அண்ணாவும் பெரியாரும்

பேரறிஞர் அண்ணா அமெரிக்க சி.ஐ ஏயின் கைப்பாவையாக செயற்பட்டாரா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பது இப்போது எவ்வகையிலும் சாத்தியப்படப் போவதில்லை என்பது தெளிவு. ஆனால் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் மூண்ட பெரும் தீயின் காரணங்கள்- தீக்கனலை மூட்டிய பெருந்தலைவர்களில் ஒருவரான அண்ணாவின் மறைவுக்கு 26 ஆண்டுகளின் பின்னால் இப்போது அலசப்படுவதுதான் குறிப்பிடப்பட வேண்டியது.

நீதிக்கட்சி என்ற நெடிய மதில் சுவருக்குள்ளே பணச்சாதியின் நலன்கள் மட்டுமே பேணப்படுகின்றது எனக் குற்றம் சாட்டி அக் கட்சியிலிருந்து வெளியேறியவர் ஈ வே. ராமச மி நாயக்கர் எனப்படும் ஈ.வெ.ரா. பெரியார் இந்தியாவின் ஒருமைப்பாடு என்பதற்கு பதிலாக திராவிட நாடு என்ற முழக்கத்தை முன்மொழிந்தவர் அவர், மொழிவழி மாநிலங்கள் வகுக்கப்படாதிருந்த இந்திய சுதந்திரத்தின் பின்னான காலத்தில் தமிழர்கள், ஆந்திரர்கள், கர்நாடகத்தவர், கேரளத்தவர் என திராவிட மொழிக் குடும்பத்தவர்கள் அனைவரையும் ஒருங்கிணைந்ததாக திராவிட நாடு கோரிக்கையை முன் வைத்த பெரியார் இடது சாரிக் கொள்கைகளின்பால் நாட்டம் கொண்டவர். இடதுசாரி சிந்தனைகளின் மூலவர்களான மார்க்கம் எங்கெல்லாம் எழுதி வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை மா. வே. சிங்காரவேலர் மூலம் முதல் முறையாக தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் பெரியார். சமூகத்தில் வாழும் அடக்கப்பட்ட- ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்த பெரியாரின் பாசறையில் வளர்ந்தவர் பேரறிஞர் அண்ணா அதுமட்டுமல்ல தந்தை பெரியார் என்றே எப்பொழுதும் அழைத்து இறுதிவரை அவரையே தலைவராகவும் கருதிவந்தவர்

எனினும், "கடவுள் இல்லை; கடவுள் இல்லை கடவுள் இலலவே இல்லை" என்று முழங்கிய பெரியாருக்குப் பதிலாக "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்று சமய சமரசத்தை வலியுறுத்தியவர் அண்ணா. பார்ப்பனர்களை முதல் எதிரியாக வர்ணித்த பெரியாரின் கொள்கையிலிருந்துவிலகி பார்ப்பனீயம்தான் திராவிடனுக்கு எதிரானது என்பதை தெளிவுபடுத்தியவர் அண்ணா. தேர்தல்கள் எதிலும் பங்கு பற்றாமல் சமூக சீர்திருத்த இயக்கத்தை கட்டி வளர்க்க வேண்டும் என்ற பெரியாரின் சித்தாந்தத்திற்கு முரணாக ஓட்டு முறையால் தான் ஆட்சிமாறவேண்டும் எனக் கூறிவந்தவர் அண்ணா.

### இளையவன்

பெரியாருக்கும், அண்ணாவுக்கும் இடையே இத்தகைய முரண்பாடுகள் பின்னர் வெளித்தெரிந்த போதும்கூட ஆங்கிலேயர் இந்தியாவைவிட்டு வெளியேறிய நாளை கறுப்பு தினமாக கடைப்பிடிக்க வேண்டும் என்ற பெரியாரின் அறிவிப்புடன் தான் அண்ணா முதன் முறையாக முரண்பட்டிருந்தார். ஆங்கிலேயர் ஆதிக்கம் அகன்ற நாளை இந்திய சுதந்திர நாள்-மகிழ்ச்சிக்கு உரிய நாள் என அண்ணா முரசறைந்தார்.

1962-ல் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான போர் நடந்துகொண்டிருந்தபோது இந்திய ஒருமைப்பாட்டிற்கு ஆதரவாகவும், திராவிட நாடு கோரிக்கையை கைவிடுவதாகவும் பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டிருந்தார். இதற்குப்பின்னர் தான்

(7 ஆம் பக்கம் பார்க்க)

### பி. எஸ், எல். வி - டி. 2

# இந்திய விண்வெளித் தொழிநுட்ப வளர்ச்சியில் ஓர் மைல்கல்

சைபீரிய நாட்டுப் பறவைகள் தங்கிச் செல்லும் புகலிடமான அந்தக் கடற்கரையோர கிராமத்திலிருந்து சென்ற மாதம் 15ஆந் திகதி சிவப்பும் மஞ்சளும் கலந்த புகையை கிளப்பிய வண்ணம் ரொக்கட் ஒன்று வானை நோக்கி சீறிப் பறந்தது. பி. எஸ். எல். வி- டி. 2 (polar Satellite Launch Vehicle) என்ற இந்த ரொக்கட் கொண்டு சென்ற தொலையுணர்வு செயற்கை கோள்ஐ. ஆர். எஸ்- p 2இன் மூலம் இந்திய விண்வெளி ஆராய்வின் வளர்ச்சி இன்னுமொரு பாதையையும் தொட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோவின் (Indian Space Research Organisation) இந்தவெற்றி பலவகையிலும் முக்கியத்துவம் பெற்றதாக அமைந்துள்ளது இதுபோன்ற ஆயிரம் கிலோகிராம் எடைகொண்ட தொலையுணர்வு செயற்கை கோளை வெற்றிகரமாக ஏவிய நாடுகளான ரஷ்யா, அமெரிக்கா, சீனா என்ற வரிசையில் இந்தியாவும் சேர்ந்து கொண்டுள்ளது, அமெரிக்காவின் டோகர் டெல்ட்டா போல் சீனவின் லோங்மார்ச் போல், இந்தியாவின் ஐ ஆர் எஸ் - P.2வும் தன் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது-

இந்திய விண்வெளித்துறை ஆராய்ச்சிப் பிரிவின்வளர்ச்சி, மிகப் பெரும்பான்மையாக அதனது சுயதொழில்நுட்ப திறனில் தங்கியுள்ளமை மீண்டும் இதன் மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளது. உள்ளூர்தொழில் நுட்ப வளர்ச்சியின் படிக்கற்கள் இந்திய விண்வெளித் துறை சார் ஆராய்ச்சிகளுக்கு பலமான அடித்தளம் ஒன்றை இட்டுள்ளன. பாதுகாப்பு தொடர்பான ஏவுகணைகளின் உற்பத்தி தொட்டு, தொலை உணர்வு செயற்கைக் கோள் வரையிலான முயற்சிகளுக்கு பரந்தளவில் தடைகள் எதிர்நோக்கப்பட்டு வந்தும் பிஎஸ் எல் வியின் பறப்பு இந்திய விண்வெளித் துறைசார் ஆராய்ச்சிகளுக்கு ஓர் தற்துணிவையும் தந்திருக்கின்றது-

கிரையோஜெனிக் இயந்திர தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்க ரஷ்யா தயாராக இருந்த போதும் இந்திய விண்வெளித்துறையின் வளர்ச்சியின் பால் அமெரிக்கா கொண்டிருந்த அச்சம் இந்தியாவிற்கான ரஷ்ய விற்பனையைத் தடை செய்தது கிரையோஜெனிக் இயந்திர தொழிநுட்பத்தை இந்தியாவுக்கு ரஷ்யா வழங்கும் பட்சத்தில் ரஷ்யாவுக்கெதிரான முயற்சியாக பொருளாதார உதவிகளை நிறுத்தப்போவதாக அமெரிக்கா பயமுறுத்தியது இங்கு கவனிக்கத் தக்கது: இவ்வளவு தூரம் அமெரிக்கா அஞ்சுவதற்குக் காரணம்என்ன? ஒரு புறத்தில் விண்வெளியில் அமெரிக்காவின் ஆதிபத்தியம் இந்தியாவால் சிதைக்கப்படுவதை தடுக்க அமெரிக்கா எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இது கருதப்படுகின்றது.

ஆனால் ரஷ்யாவிலிருந்து கிரையோஜெனிக் இயந்திர தொழிநுட்பம் பெறப்படாமலே இந்தியா தனது சொந்த முயற்சியில் ஜி எஸ் எல் வி (Geostationary Satellite Launch Vehicle) ரொக்கட்டை எதிர்வரும் 97-98 காலப் பகுதிக்குள் விண்வெளிக்கு செலுத்தியே தீரும் என இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் தலைவரான கஸ்தூரிரங்கன் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது! ஸ்ரீ ஹரிகோட்டாவிலிருந்து பி எஸ் எல்வியின் பறப்பிற்கு பின்னர் அங்கு நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு அறிவித்துள்ளார் இவ் அறிவிப்பானது பி. எஸ் எல்வியின் வெற்றி இந்திய விண்வெளித்துறை ஆராய்ச்சியில் பெற்றுள்ள முக்கியத்துவத்தைஎடுத்துக்காட்டுவதாக அமைகின்றது

இதுவரை காலமும் இந்தியா தயாரித்த பெருமளவிலான தொலை உணர்வு செயற்கை கோள்கள் விண்வெளித்துறையில் முன்னேறிய வேறுநாடுகளின் தளங்களிலிருந்தே ஏவப்பட்டுவந்தது, 1969 இல் இந்திய விண்வெளி ஆய்வு மையம் ஆரம்பிக்கப்பட்ட பின் முதலாவது செயற்கைக் கோளான ஆர்யப்பட்டாசோவியத் யூனியன் மூலமே 1975 இல் விண்வெளியில் செலுத்தப்பட்டது இதன் தொடராக பாஸ்கரா-1 பாஸ்கரா- 2 இன்சாட்- 1பி, ஐஆர்எஸ்1 ஏ, இன்சாட்- 1டி, ஐஆர் எஸ் 1பி இன்சாட் 2பி என்பனரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து செலுத்தப்பட்டன

எனினும் 1980 இல் இந்தியாவின் முதல் ரொக்கட்டான எஸ்எல்வி.3 ஸ்ரீஹரிகோட்டா தளத்திலிருந்து1980இல்செலுத்தப்பட்ட பின் செயற்கைக் கோள்களை காவிச் சென்று விண்வெளியில் விடக்கூடிய ரொக்கட்களின் தொழில் நுட்பம் பெருமளவில் வளர்ச்சி பெறத் தொடங்கியது: இதன் வழியாக 1983-ல் எஸ் எல் வி-3 ரொக்கட், ரோகிணி - 2 செயற்கை கோளுடன்ஏவப்பட்டது இந்த வளர்ச்சியின் உச்சப் பேறாக ஆயிரத்துக்கு அண்

**ரகுராம்**

மித்த கிலோகிராம் எடை கொண்ட ஐ ஆர் எஸ் -$P_2$ செயற்கைக்கோள் இன்று பி எஸ் எல் வி - டி2 ரொக்கட் மூலம் விண்வெளியில் நிறுத்தப்பட்டுள்ளது, முற்றுமுழுதான இந்தியத் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஓர் இந்தியத் தளத்திலிருந்து ஏவப்பட்ட ரொக்கட் ஒன்றின் பயணமாக இது அமைகின்றது.

இந்த பறப்புக்கு முன்னர் சென்ற ஆண்டு செப்டெம்பர் 20-ம் திகதியன்று பி எஸ் எல் வி - டி1 இன் பறப்பு முயற்சியொன்று தோல்வியில் முடிவடைந்திருந்தது. இப்போது வெற்றிகரமாக அனுப்பப்பட்ட பி எஸ் எல் வி - டி2 இனை ஒத்த அமைப்பை இது கொண்டிருந்தாலும் தொழில் நுட்ப கோளாறுகள் காரணமாக இதுவங்காக்கடலில் விழுந்தது இந்த தோல்விக்கான குறைபாடுகள் பூரணமாக காணப்பட்ட நிலையில் பி எஸ் எல் வி - டி2 ஏற்கனவே திட்டமிட்டபாதையில்சென்று ஐ ஆர் எஸ் - P2 வை 98.6 பாகையில் நிறுத்தியது. பூமியிலிருந்து 825 கிலோமீற்றர் தொலைவில் 17 நிமிட பறப்பின் பின் இது நிகழ்ந்தது

இதனைவிட ஒரே ஆண்டில் இரண்டு றொக்கட்டுக்களை வெறும் ஐந்து மாத இடைவெளியில் இந்திய விண்வெளி ஆய்வு மையம் இந்த ஆண்டு ஏவியுள்ளது கடந்த மே மாதம் 4-ம் திகதி ஏ எஸ் எல் வி - டி4 ரொக்கட்டும் சென்ற மாதம் 15-ம் திகதி வெற்றிக்கரப் பயணத்தை தந்த பிஎஸ்எல் வி- டி2 ரெக்கட்டும் ஏவப்பட்டமையானது குறுகிய காலத்தில்மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றகரமான செயற்பாடுகளாகும்

இரண்டாயிரம் பொறியியலாளர்களும் விஞ்ஞானிகளும் இணைந்து செயற்படும் ஸ்ரீஹரிகோட்டாவில், மேற்கொண்ட பிஎஸ்எல்வி - டி 2 ரொக்கட் பறப்புத்திட்டத்தில் 150 பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் ஒத்துழைப்பும் பெறப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. பன்னிரண்டு ஆண்டுகளாக இத்திட்டம் ஆராயப்பட்டு வந்ததாக ஆய்வு மையத்தின் திட்ட இயக்குனரான மாதவன் நாயர் செய்தியாளர் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்-

பி எஸ் எல் வி - டி 2 ரொக்கட் நான்கு தளங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது 44 மீற்றர் (கிட்டத்தட்ட 15 மாடிகள் உயரமானது) கொண்ட இந்த ரொக்கட் தொன் கணக்கில் 283 தொன் எடையைக் கொண்டிருந்தது. ரொக்கட்டோடு இணைக்கப்பட்டிருந்த ஐ ஆர் எஸ் - P 2 செயற்கைக்கோளில் மிகத்துல்லியமான ஸ்கானர் சாதனம் ஒன்றும், கமரா ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது இதனைவிட 510W மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூரியகல அடுக்குகளையும் இச் செயற்கைக் கோள் கொண்டுள்ளது.

பி எஸ் எல் வி - டி 2 கொண்டிருக்கும் நான்கு தளங்களும் சீரான முறையில் அமைக்கப்பட்டிருந்தன- முதலாவது தளத்தில் அதீத வெப்பத்தையும் தாங்கக்கூடிய எஃகாலான செலுத்தி அமைக்கப்பட்டுள்ளது மணிக்கு 6840 கிலோமீற்றர்வேகத்தில் செலுத்தக்கூடியதாக இதன் உந்துவிசை இருந்தது இரண்டாவது தளத்தில் திரவ எரிபொருள் மூலம் ரொக்கட்டின் வேகத்தை இருமடங்காக்கும்மோட்டர் அமைக்கப்பட்டிருந்தது இந்த தளத்தில் பொருத்தப்பட்டிருந்த அதிநவீன கம்யூட்டர் ரொக்கட்டின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தக்கூடியவகையிலும் தொலை உணர்வு செயற்கைக் கோள் விடுவிக்கப்படும் நேரத்தை தீர்மானிக்கும் வகையிலும் அமைக்கப்பட்டிருந்ததுமூன்றாவதுதளத்தில்திட எரிபொருள் இயக்கும் மோட்டாரும் நான்காவது தளத்தில் செயற்கைக்கோள் பிரிந்து செல்லும் வகையில் ரொக்கட்டின் மூக்குப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்தது.

இச்செயற்கைக் கோள் ஐ ஆர் எஸ் - p2, விவசாயஆராய்ச்சியிலும் புவியியல் ஆராய்விலும், வனவளங்கள், சூழல் பாதுகாப்பு, புயல், வெள்ள அபாயம் அறிவதிலும் ஈடுபடும் என தெரிவிக்கப்படுகிறது

இதனைவிட சர்வதேச தொலைத் தொடர்புக்கு இந்தியாவின் நிலையைஉயரிய வளர்ச்சிக்கு இது கொண்டு வந்திருப்பதாக விண்வெளியியல் ஆராய்வாளர் கூறுகின்றனர்.

இவை எல்லாவற்றையும் ஒதுக்கித் தள்ளுவது போல் மேற்கூறியசெயற்கைகோளை கொண்டு செல்ல பாவிக்கப்படும் பி. எஸ். எல். வி. ரக ரொக்கட்டுகள் படிமுறை வளர்ச்சியில் ஐந்து தொன் எடையுள்ள நியூக்கிளியர் ஆயுதத்தால் பூமியின் எந்தப் பாகத்தையும் தாக்கக்கூடிய வாய்ப்பும் இருப்பதாக கூறப்படுகின்றது. இந்தநிலையில் அமெரிக்காவும் ஏனையவளர்ச்சி பெற்ற நாடுகளும் இந்தியாவின் விண்வெளித் தொழிநுட்பத்தின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சுவதில் தவறிருப்பதாக தெரியவில்லை.

> **இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் பன்னிரண்டு கால ஆராய்ச்சியின் சாதனையை பதினேழு நிமிடங்களில் பார்த்து பிரமித்து போனேன்.**
>
> இந்தியாவின் ஏவுகணை தொழிநுட்பத் தந்தை டாக்டர் ஏ. பி. ஜே. அப்துல்கலாம்

# மீண்டும் தொண்டாவின் குத்துக்கரணம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அரசியலில் மீண்டுமொரு முறை குத்துக்கரணம் அடித்துள்ளார் இதன் மூலம் அவர் தொடர்ந்து மலையக மக்களின் காவலனாக இருக்கப் போவதாகவும் இதற்காகவே தமக்குக் கிடைத்த அமைச்சர் பதவியை பயன்படுத்தப் போவதாகவும் மீண்டும் தொடர்பு சாதனங்கள்

பட்ட சூழ்நிலை ஏற்பட்டது எனினும் தொண்டமான் சட்சிப் பிளவைக் கூட பொருட்

னும் தம் போக்கை மாற்றிக் கொள்வதில் ஆர்வமாகவே இருந்தார் எனினும் கூட்டணி

பேச்சுக்களை நடாத்தினர் இதனை மேலும் வலுவூட்டும் நோக்குடன் செயற்தும மத்

# மணற்காடு; மாற்றம் காணுகிறது

கால்கள் சுடுமணலில் புதையுண்டு நடக்க ஆரம்பித்தால், ஒதுங்குவதற்கு இடம் இருக்காது அதுவும் மத்தியான வெயிலில் இதற்குள் நுழைந்தால், நிச்சயம் நரகத்தை ஒரு முறை எட்டிப்பார்த்த உணர்வு கிடைக்கும். பாலை வனத்தை நாங்கள் காண

வடமராட்சி மண்ணின் ஒரு கோடியில் காணப்படும் மணற்காடு பெயருக்கேற்றவாறு மணல் காடுபோல் சூழ்ந்திருந்த இந்த இடத்தில் இன்று சவுக்கு, சஞ்சீவி, தென்னை என மரங்கள் செழித்து வளர்க்கப்படுகின்றன.

சில இடங்களில் முப்பது

மணற்காடு, இன்று பல வகையிலும் முக்கியத்துவம் பெற்று வருகின்றது? மரநடுகை தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டதன்பின், சூழல் பாதுகாப்பின் ஒரு புறமாக நன்மை தரும் அதேவேளை பொருண்மிய ரீதியாகவும் மணற்காடு முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

இந்திய விண்வெளித்துறை ஆராய்ச்சிப் பிரிவின்வளர்ச்சி, மிகப் பெரும்பான்மையாக

கிரையோஜெனிக் இயந்திர தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்க ரஷ்யா தயா

வதை தடுக்க அமெரிக்கா எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இது கரு

கோளான ஆர்யப்பட்டாசோவியத் யூனியன் மூலமே 1975 இல் விண்வெளியில் செலுத்

குறைபாடுகள் பூரணமாக காணப்பட்ட நிலையில் பி எஸ் எல் வி - டி2 ஏற்கனவே

பி எஸ் எல் வி - டி. 2 கொண்டிருக்கும் நான்கு தளங்களும் சீரான முறையில் அமை

நுட்பத்தின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சுவதில் தவறிருப்பதாக தெரியவில்லை.

# மீண்டும் தொண்டாவின் குத்துக்கரணம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செளமிய மூர்த்தி தொண்டமான் அரசியலில் மீண்டுமொரு முறை குத்துக்கரணம் அடித்துள்ளார் இதன் மூலம் அவர் தொடர்ந்து மலையக மக்களின் காவலனாக இருக்கப் போவதாகவும் இதற்காகவே தமக்குக் கிடைத்த அமைச்சர் பதவியை பயன்படுத்தப் போவதாகவும் மீண்டும் தொடர்பு சாதனங்கள் ஊடாக மார்பு தட்டிக் கொள்கின்றார். இந் நிலையில் இதுவரை மிக நீண்ட வருடம் அமைச்சராக இருந்தும் இவர் என்ன செய்தார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்,

பொது ஜன ஐக்கிய முன்னணி பொது தேர்தல் வெற்றிக்கு பின்னர் இவர் சந்திரிகா ஆட்சியுடன்இணைவார் என்று பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது ஒன்றாக இருந்த போதும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் ஏற்பட்ட மாற்றம் அவரின் இணைப்பை தடுத்து வந்தது அதாவது ஐ.தே.கவிற்கும் இ. தொ. காவிற்கும் இடையிலான உறவை விட காமினி-தொண்டமான்இடையிலான உறவு பலமிக்கதாகவும் இருவரின் அரசியலும் ஒரே பின்னணியின் அடிப்படையிலே ஒன்றை ஒன்று தழுவியதாகவே இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த அரசியலின் வடிவை உடைத்துக்கொண்டு அல்லது முறித்துக்கொண்டு செயற்படும் தைரியமும் துணிவும் தொண்டமானிடம் இருக்கவில்லை என்றே கூற வேண்டும்- தொண்டமான் எவ்வளவு தான் கொக்கரித்தாலும் காமினி முன்னிலையில் ஓர் பெட்டிப் பாம்பாக அடங்கிவிடும் தன்மையே இதுவரை காலமும் அவர் கொண்டிருந்தார். அதாவது தொண்டமானும் காமினியும் வேறுவேறு கட்சியில் பெயரளவில இருந்தாலும் அவர்களின் நடவடிக்கைகள் குறிப்பிட்ட ஒரு கொள்கையை பிரதிபலித்துக் கொண்டே இருந்தன-

மத்திய மாகாண சபை ஆட்சி தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டதைத் தொடர்ந்து இலங்கை தொழிலாளர் காங்கிரசின் முதலாவதாக பிளவுபட்ட சூழ்நிலை ஏற்பட்டது எனினும் தொண்டமான் சட்சிப் பிளவைக் கூட பொருட்படுத்தாது காமினியின் திட்டத்திற்கு தனது முழுமையான ஆதரவை வழங்கினார் மத்திய மாகாண சபையில் அங்கம் வகித்த இ தொ.கா உறுப்பினரில் பெரும்பான்மையோரும் பொதுச் செயலாளரும் எம். எஸ். செல்லச்சாமியும் உடன்படாத நிலையில் காமினிக்குஒத்துழைப்பைநல்குவதிலே மிகவும் பிடிவாதமாக இருந்து செயல்பட்டார்,

> மலையகத்தில் தன்னை மீறிய ஒரு சக்தி உருவாவதை தொண்டமான் எவ் விதத்திலும் தடுக்கவே பார்த்தார் -அதன் ஒரு வழியாகவே சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தில் அமைச்சராக பொறுப்பேற்ற அரசியல் குத்துக்கரணம் அமைந்துள்ளது

அதாவது மத்திய மாகாண சபையில் முதல்அமைச்சருக்கு எதிராக அன்று காமினி பிரதிநிதித்துவம் செய்த ஜனநாயக ஐக்கிய முன்னணி அரசாங்கம் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையானது இ. தொகாவை பிளவுபடுத்தியது இந்நடவடிக்கை இ தொகாவை பிளவுபடுத்தியது மட்டுமே செய்தது தவிர வேறு ஒன்றையும் சாதிக்கவில்லை

காமினி திசாநாயக்கா மீண்டும் ஐதேகவில் இணைந்ததைத் தொடர்ந்து இதொகா-ஐதேக உறவு சுமுகமாகியது ஆனால் எம்எஸ் செல்லச்சாமியும் அவரது சகாக்களும் அரசியல் பலிக்கடாக்களாக்கப்பட்டு இதொகாவில் இருந்து வெளியேற்றப்பட்டனர் ஐதேக சந்தர்ப்பத்தை பார்த்து இவர்கள் நிலை தொடர்பாக தனது கதவை இறுகப்பூட்டிக் கொண்டது பொதுத் தேர்தலில் ஐதேக தோற்றுப் போய் ஆட்சி கையாறியதும் அடுத்து தொண்டமானும் தம் போக்கை மாற்றிக் கொள்வதில் ஆர்வமாகவே இருந்தார் எனினும் கூட்டணி உறவை திடீரென்றுமுறித்துக் கொள்வதில் சில சங்கடங்கள் இருந்ததை அவர் உணர்ந்து கொண்டவராகவே இருந்தார் இதில் மலையக மக்களின் தனிப்பெரும் தலைவராக தன்னைக் காட்டிக் கொள்ளும் தொண்டமான்மட்டும் அன்றி இ தொகா சார்பில் தேர்தலில் வெற்றி பெற்ற ஐவரும் வேறு சில சக்திகளும் மலையகத்தின் சார்பில் பாராளுமன்றத்தில் இடம் பெற்றிருப்பது இவற்றில் முக்கியமானது எனவே தன்விருப்பிற்கேற்ப ஐதேகவுடனான உறவைத் துண்டிப்பதும் பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் உறவை வளர்ப்பதும் அவருக்கு இலகுவானதாக இருக்கவில்லை

## நிமலராஜன்

இதனாலேயே தொண்டமான் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது முடிவை இயலுமானவரைபின்போட்டு வந்தார் இதிலும் ஐதேகவின்வேட்பாளராககாமினி திசாநாயக்கா அறிவிக்கப்பட்டதும் தொண்டமானின் சங்கடங்கள் மேலும் பலமடங்கு அதிகரித்தது இதனைச்சமாளிப்பதற்காக ஆறு அம்ச கோரிக்கைஒன்றை தயாரித்து இரு பிரதான கட்சிகளுடனும் பேச்சுக்களை நடாத்தினர் இதனை மேலும் வலுவூட்டும் நோக்குடன் செயற்குழு மத்திய குழு பொதுக்குழு என்ற

குழுக்களின் பெயரில் இதனை விடுத்தார். இவை தமதுமுடிவெடுக்கும்நிலையை தாமதப்படுத்த உதவுமென திட்டமிட்டு மேற்கொண்ட வேளை, சகல அதிகாரத்தையும் தன் வசப்படுத்தி தானே முடிவை எடுக்கும் அதிகாரத்தையும் பெற்றுக் கொண்டார்- இதன் பின்னர் நடுநிலைமை என்ற பதத்தை தனதுஅரசியலில் அரங்கேற்றி சாதுரியமாக நடந்து கொண்டதாக எண்ணினார்.

மலையகத்தில் இருக்கின்ற தொழிற்சங்கங்கள் பலவும் வேறு மலையக அமைப்புகளும் திருமதி சந்திரிகா குமாரதுங்காவை ஜனாதிபதி தேர்தலில் ஆதரிக்கப் போவதாக அறிவித்துவிட்டதும் தொண்டமானின்இந்த நிலைப்பாட்டுக்கு ஒரு காரணம் என்றே கூறமுடியும்-

இவ்வாறான நிலையில் தொண்டமான் சிக்கி தவிர்க்கும் போது ஐதேக ஜனாதிபதி வேட்பாளர் காமினிதிசாநாயக்காவின் திடீர் மறைவு அவர் தனது முடிவை இலகுவாக, அதாவது சந்திரிகா பக்கம் எடுக்ககூடிய நிலையை ஏற்படுத்தியது இதற்கு அமையவே தொண்டமானுக்கு தற்காலிக உல்லாசபயணத்துறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டது தொண்டமான் மீண்டும் அமைச்சரானார் இது அவருக்குக் கிடைத்த தனிப்பட்ட இலாபமாக இருந்தாலும் அவரது அரசியல் குத்துக்கரணத்தை மீண்டும்ஒருமுறை வெளிக்காட்டியதாகவே அமைந்துவிட்டதுகுறிப்பிடத்தக்கது

# மணற்காடு; மாற்றம் காணுகிறது

'கால்கள் சுடுமணலில் புதையுண்டு நடக்க ஆரம்பித்தால், ஒதுங்குவதற்கு இடம் இருக்காது அதுவும் மத்தியான வெயிலில் இதற்குள் நுழைந்தால், நிச்சயம் நரகத்தை ஒரு முறை எட்டிப் பார்த்த உணர்வு கிடைக்கும். பாலைவனத்தை நாங்கள் காணாவிட்டாலும் இதைப் பார்த்தே அது எட்படி இருக்கும் என்று தெரியலாம் போலிருக்கும்'' முகத்தின் சுருக்கங்கள் தெரிய தன் அனுபவத்தை கூறிக் கொண்டு போகிறார். அந்த முதியவர் ''இவ்வளவு காலத்துக்கு பிறகு இந்த மண்ணில் இப்படி பசுமை நிச்சயமா நான் எதிர்பார்க்கையில்லை'' அவரது முகத்தில் வியப்பு அப்பட்டமாக தெரிகின்றது.

> மணற்காடு, பயனற்றுக் கிடந்த பூமி இன்று பல வகையிலும் பயனுடையதாய் மாற்றம் கண்டு வருகின்றது- போராட்ட வாழ்வில் செய்யப்பட்ட தேச நிர்மாணப் பணியில் இது குறிப்பிடத்தக்க இடத்தை பெற வாய்ப்புண்டு.

ஆம் குடாநாட்டின் ஓர் குட்டிப் பாலைவனம் இன்று சோலைவனமாகி வருகிறது. கடற்கரையுடன் கூடிய கண்ணுக்கெட்டும் தூரம் வரை மணற்திட்டும், ஆங்காங்கு பொட்டல் காடுகளாகவும் இருந்த இப்பூமியில் சோளக் காற்றின் கொடூரம் சொல்ல முடியாததாக இருக்கும்.

வீசும் காற்றில் ஒருவர் நிமிர்ந்து நின்றால் அவரது உடலின் ஒவ்வொரு பகுதியும் மணலால் குளிப்பாட்டப்பட்டிருக்கும். மண்ணால் மழை பெய்யும் அந்த பிரதேசம் இன்று ஓர் சுற்றுலாத் தலமாகும் வகையில் மாறியிருக்கிறது.

இது ஒரு மிகப் பெரிய மாற்றம் மனிதன் இயற்கையை அடக்கி தனக்கேற்றவாறு இசைவாக்க முடியும் என்பது எமது மண்ணில் நிரூபணமாகியிருக்கிறது- இந்தப் பகுதிக்கு அண்மையில் சென்றிருந்தபோது இது நிதர்சனமாகத் தெரிந்தது.

வடமராட்சி மண்ணின் ஒரு கோடியில் காணப்படும் மணற்காடு பெயருக்கேற்றவாறு மணல் காடுபோல் சூழ்ந்திருந்த இந்த இடத்தில் இன்று சவுக்கு, சஞ்சீவி, தென்னை என மரங்கள் செழித்து வளர்க்கப்படுகின்றன.

சில இடங்களில் முப்பது அடி வரை உயர்ந்திருக்கும் பசிய மரங்கள் வெயிலுக்கு கண்களுக்கு குளிர்ச்சியாக தெரிந்தன தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பகுதியினரின் கவனிப்பில் பசுமையின் செழிப்பு தெரிந்தது.

இம் மணற்காட்டுப் பகுதி சுமார் 25,000 ஏக்கர் பரப்பைக் கொண்டுள்ளது.

1992ஆம் ஆண்டில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பகுதியினராலும் கடற்புலிகளாலும் மரம் நடுகைத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டது. பல்வேறு பொது அமைப்புக்களின் உதவியோடு 92-93-ம் ஆண்டுப் பகுதியில் 45 ஏக்கரில் சவுக்குநடுகைசெய்யப்பட்டது அதேகாலப்பகுதியில் பத்து ஏக்கரில்தென்னங் கன்றுகளும் நடப்பட்டன,

76-ம் ஆண்டில் சவுக்கு மர நடுகைத் திட்டமொன்று இப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் 92-ம் ஆண்டிலிருந்தே இது தீவிரமாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக கூறப்படுகின்றது.

இத்திட்டத்தின் விரிவாக்கமாக இந்த ஆண்டில் 200 ஏக்கரில் சவுக்கு மரக் கன்றுகளும் 50 ஏக்கரில் தென்னங் கன்றுகளும் நடப்பட்டுள்ளன மொத்தமாக இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் மரங்களைக் கொண்டதாக இப்பகுதியின் திட்டம் விளங்குகின்றது.

மணற்காடு, இன்று பல வகையிலும் முக்கியத்துவம் பெற்று வருகின்றது; மரநடுகை தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டதன்பின், சூழல் பாதுகாப்பின் ஒரு புறமாக நன்மை தரும் அதேவேளை பொருண்மிய ரீதியாகவும் மணற்காடு முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

தனியே தரிசாக கிடந்த இந்த மண், இன்று பசுமை பூணப்பட்டிருப்பது சூழல் பாதுகாப்பிற்கு கிடைத்த ஓர் வெற்றியாகும்- குடாநாட்டின் மழைவளம் தொடர்ந்து பேணப்படவேண்டுமாயின் காடு வளர்ப்பு துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதன் தாற்பரியம் உணரப்பட்டுள்ள இவ் வேளையில் மணற்காடு ஓர், முன்மாதிரியாக திகழ்கின்றது

இன்னொரு வகையில் குடாநாட்டின் விறகுத் தேவைக்காக, கண்டபடி மரங்கள் வெட்டப்பட்டு அழிக்கப்பட்டு வந்த நிலை மாற்றப்பட்டு விறகுத் தேவையை பூர்த்தி செய்யும் அதே சமயம் வீணான வளவிரயம்

## பா. பார்த்திபன்

தடுக்கப்படும் ஓர் உதாரண நிலைக்கு மணற்காடு மாற்றம் கண்டுள்ளது.

தெரிந்து களைதலின் மூலம் விறகுத் தேவையின் குறிப்பிடத்தக்க பகுதி நிரப்பப்படுகின்றது- மரங்களுக்கிடையில் அமைய வேண்டிய இடைவெளிகள், வளர்ச்சி போன்றவற்றின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்படுகின்றது.

இராணுவ அனர்த்தங்களினால் மக்கள் செல்லும் சுற்றுலா மையங்கள் ஆக்கிரமிப்புக்குள்ளாகி விட்ட இன்றைய காலகட்டத்தில் மணற்காட்டிற்கு செல்லும் வீதியில் புழுதி பறக்கச் செல்லும் பஸ்வண்டிகளும் சைக்கிள்களும் மக்கள மணற்காட்டை ஓர் சுற்றுலாத் தலமாக அங்கீகரித்திருப்பதையும் காட்டுகின்றன-

(2ஆம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

# மௌனமாய் ஒரு வேதனை..

நடராசா இராமநாதன்

தன் வீட்டிலிருந்து ஒருமணித்தியாலமாக சைக்கிள் ஓடிய முருகானந்தன் இடது கைப் பக்கமாகச் சைக்கிளைத் திருப்பி அந்த நீண்ட கடற்கரை வீதியில் ஏறி சுமார் முந்நூறு யார் வரை சென்றபின் சைக்கிளின்வேகத்தைக் குறைத்தபடி வீதிக்கும்கடற்கரைக்கும்இடையேயுள்ளகட்டடங்களை நோக்கினான்.

''செல்வராசாவந்து நிற்கச் சொன்ன இடம் இது தான். அவனைச்சந்தித்து வீதியோசு நாடகப்பிரதி ஒண்டு வாங்க வேணும்'' தன் மனதுக்குள் சொல்லிக் கொண்டே அருகில் நிற்கும் பாரிய கிளைகள் பரப்பிய பூவரச மரத்தின் கீழ் சைக்கிளைச் சற்று முன்பக்கமாகச்சரித்து'பாரில்' சாதுவாக அமர்ந்தவாறு நின்றான்

கடற்காற்று இதமாக வீசிக் கொண்டிருந்தது 'சேட்'டின் மேல்தெறிகள் இரண்டையும் கழற்றிவிட்டான் .மேலும் சுகமாக இருந்தது கைக்கடிகாரம் ஒன்பது ஐம்பதைக் காட்டியது. பத்து மணிக்கு வந்து கூட்டிச்செல்வதாகவும் அது வரை அங்கு நிற்கும் படியும் செல்வராசா சொன்னதை மீட்டுப் பார்த்தான் முருகானந்தன்,

விமானக் குண்டு வீச்சாலும் ஷெல், பீரங்கித் தாக்குதல்களினாலும்இடிந்தநிலையில்உள்ள கட்டடங்கள் ஸ்ரீலங்கா அரசின் கோரத்தனத்தை நினையூட்டின அக்கட்டடங்களின் அருகே பல ஓலைக்கொட்டில்கள் எழுந்து நிற்கின்றன.

அண்மையில் ஒட்டப்பட்ட மாவீரர்களின் திருவுருவப் படங்கள் சிவப்பு மையால் எழுதப்பட்ட போராட்ட உணர்வுச் சுலோகங்கள் போராளி ஒருவரின் நினைவஞ்சலிப் பிரசுரங்கள்,விளையாட்டுப்போட்டி நாடக விளம்பரங்கள் என்பன அங்கிருந்த பழைய சுவர்களில் நிலைத்திருந்தன.

அருகில் இருந்த வாசிகசாலை வாசலில் ஒரு பத்திரிகையை இருவர் வாசித்தபடி இருந்தனர். சந்தையில் சந்தடி மெல்ல மெல்ல அதிகரித்தது' மீன்பிடி வலைகளைச் சுமந்தபடி சிலர்செல்ல, சில சிறுவர்கள் 'போளை'யடித்து விளையாடுகின்றனர். அகன்று விரிந்த கடலில் தூரத்தே பாய் விரித்தபடி மீன்பிடிவள்ளங்கள் சில தூர இடைவெளியில் வருகின்றன.

முருகானந்தன் சைக்கிளை 'ஸ்ராண்டில்' நிறுத்திவிட்டு பூவரசமரத்தின் கீழ் வாங்கு மாதிரி அமைந்துள்ள சீமெந்து ஆசனத்தில் அமர்ந்தான் 'சில்'லிட்டு குளிர்ந்தது அந்த ஆசனம்.

'மரண அறிவித்தல்' சொல்...

பத்து மணி பத்து நிமிடங்களைக் காட்டியது.

'ம்... செல்வராசா வரமாட்டானோ... சரியாப் பத்து மணிக்கு வாறன் எண்டவன்... அவன் சொன்ன குறிப்பின்படி அவன்ர வீட்ட போகலாந்தான் உந்த ஒழுங்கையளுக்க தன்ர வீட்டைக் கண்டு பிடிக்கிறது கஷ்ரம் என்று சொன்னவன் செல்வராசா... நான் ஒரு பாதையால போக அவன் வேற பாதையால வந்தால்... அது ரெண்டு பேருக்கும் கஷ்ரம்... இதில நிப்பம் எப்பிடியெண்டாலும வருவான் தான...' மனதுள் எண்ணியபடியேமீண்டும் கடற்கரையை நோக்கினான் முருகானந்தன்

'கண்ணா...' 'டேய் கண்ணா...'

'கண்ணா...' டேய் கண்ணா...'

சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் தன் இரண்டு கைகளையும் கடலை நோக்கி நீட்டியவாறு பலமாகக் கத்தியபடியே கடல் நீருக்குள்சிறிது தூரம் ஓடிச் செல்கிறார். கடலலைகள் கரையேறி அவர் கால்களை நனைத்து இப்பால் வந்து அழிந்தன. அந்த மனிதரின் குரலில் கனதி கலந்த சோகம் இழையோடியது. மீண்டும் இரு தடவைகள் அவ்வாறே சப்தமிட்டவர் கடல்நீரைக் கைகளால் அள்ளித் தன் மேனியெங்கும் நனைக்கிறார். கடலைவிட்டு வெளியேறியவர் சிப்பிகளால் சிறுசங்குகளால் தான் கட்டிய மாலையை தன் கழுத்தில் சூடிக்கொள்கிறார். ஏதோ ஒருவகை ஆட்டம் ஆடுகின்றார். தன் கழுத்தில் சூடிய மாலையைக் கழற்றிக் கடலினுள் எறிகின்றார், சோகம்

ண்டிருந்தான் முருகானந்தன் ஆனால் அங்குள்ள யாரும் 'அந்த மனிதரின்' செயல்களைப் பெரிதுபடுத்திப் பார்ப்பதாக அவனால் கண்டுகொள்ள முடியவில்லை.

'இவர் ஏதோ மனநோயாளி போலக் கிடக்கு...'

தன்னுள் அநுதாபப்பட்டான் முருகானந்தன். போளைஅடித்த சிறுவர்களை இப்பொழுது காணவில்லை வெய்யில் சுட்டெரித்தது. கடற்காற்றின் தண்மை

மெல்ல மெல்லக் குறைந்தது.

நேரம் பத்து முப்பதுக்கு மேல ஆகிவிட்டது. முருகானந்தன் எதிர்பார்த்த செல்வராசாவைக் காணவில்லை.

போளை அடித்த சிறுவர்கள் அம் மனநோயாளி மனிதருடன் சேட்டைவிட்டதனால் அச்சிறுவர்களை அவர் கலைத்துக் கொண்டோடுகிறார்...

சிறுவர்களின் இச்செயலை எண்ணி மனதுக்குள் புளுங்கினான் முருகானந்தன் ஓடிய சிறுவர்களில் ஒருவன் கால் தடுக்கி வீழ்ந்துவிட்டான் வீழ்ந்த சிறுவனை 'அந்தமனிதர்' பிடித்து விட்டார் ஏனைய சிறுவர்கள் சற்றுமுன்னே ஓடி பின்பு நின்று பார்க்கின்றனர் மனநோயாளியான அந்தமனிதர்... அதுவும் கோபாவேசமாக சிறுவர்களைக் கலைத்தவர்......... என்ன செய்வாரோ...... 'போட் வருகுது' ...... போட் வருகுது...... 'கடல்ல போட் வருகுது......' சிறுவர்கள் எல்லோரும் ஒருமித்தபடி பலமாகக் கத்தினர் 'அந்த மனிதரின்' கைப்பிடி தளர்ந்தது மெது மெதுவாகக் கடலை நோக்கிப் பார்வையைச் செலுத்தியபடி கடலை நோக்கி

அது தன்பாட்டில திரியட்டும் நீங்க போங்கோ' அங்கு வந்த முதியவர் ஒருவர் சிறுவர்களை ஏசிக் கலைக்கிறார்.

இது இங்கு வழமையான நிலைபோலக்கிடக்கு...... எண்ணிக்கொண்டேபெருமூச்சொன்றை விடுகிறான் முருகானந்தன்.

கடலலைகள் வந்து கரையில் மோதுகின்றன

அவனருகில் 'சைக்கிள்' ஒன்றுவந்து நிற்கிறது. நண்பன்செல்வராசாதான் 'என்ன மைச்சான் வந்துகனநேரமோ ...... சைக்கிள் காத்துப்போய் ஒட்டக்குடுத்தாப்போல சுணங்கிப்போச்சு' செல்வராசா தாமதத்திற்கான காரணம் சொன்னான். ஆனால் முருகானந்தனின் மனமோ இன்னமும்அந்த மனிதரிலேயே நிலைத்திருந்தது ''என்ன மைச்சான் ஏதும் பிரச்சினையோ...... ஒருமாதிரி நிற்கிறாய்......'' செல்வராசா கேட்டான்

''ஏன் அந்தாள்...... இப்பிடி... ''வார்த்தையை முடிக்காமல் 'அந்த மனிதரை சுட்டிக் காட்டினான் முருகானந்தன்

ஓ இதயோசிக்கிறாய் வா வன் சொல்றன்... கதைத்துக்கொண்டு போவம் என்பது போல தன்சைக்கிளை எடுத்தான் செல்வராசா

இருவருமாக றோட்டுக்கு வந்து சைக்கிள்களில் ஏறி ஓடத்தொடங்கினார்கள்

'ஆரந்தாள்...ஏனிப்படி...?'

''அது... இராசலிங்கம் பாவம்...! ஏன் உன்னோடையும் ஏதும் சேட்டைவிட்டவரோ... ம்...ச... நல்ல மனுசன் ராப்பா இப்படியாப் போச்சு...

சைக்கிள்கள் ஒழுங்கைகளுக்குள்திரும்பித் திரும்பிப் போய்க்கொண்டிருந்தன ..

''சீச்சி என்டோட ஒரு பிரச்சினையும் இல்லை அதில நிண்ட சின்னப் பெடியள் தான் ..''

செல்வராசாவின் சைக்கிள் நின்றது அவன்ர வீடு தான் படலையைத் திறந்து உள்ளே போனான்- முருகானந்தனும் பின் தொடர்ந்தான்-

வீட்டு முற்றத்தில் பதுங்கு குழி ஒன்று திறந்தபடி ஓலையால் வேயப்பட்டிருந்தது- 'சைக்கிளை' நிறுத்திவிட்டு உள்ளே போய் கதிரையில் அமர்ந்து கொண்டார்கள். சைக்கிள் ஓடி நின்றதால் உடலெல்லாம் வியர்ந்தது- கடற்காற்று இப்போ வீசவில்லை. மேசையில் இருந்த பத்திரிகை ஒன்றை எடுத்து

தாள்... ஏன் இப்படி...?,மீண்டும் கேட்டான்-

''அதுபெரிய கதைமச்சான் அவருக்கிருந்தஒரேஒருபெடியனையும் தொழிலுக்கு எண்டு அனுப்பினவர் பெடியன் போய்க் கொண்டிருந்த போட்டுக்கு நேவி அடிச்சு ஆளிண்ட நிலைப்பாடு தெரியாது அவரோட போனாக்கள்தான் வந்து சொல்ல இதைக் கேள்விப்பட்ட தொடக்கம் ஆள் இப்படித்தான்''செல்வராசா கூறினான்.''

'பாவம்'... முருகானந்தனுக்குஅதுதான் கூற முடிந்தது.

'பெடியனை காணாமல் போன கொஞ்ச நாளிலே பெண்சாதியும் செத்துப் போச்சுதுகாசிருந்தும்என்ன...' செல்வராசா தொடர்ந்தான்

சம்பவங்களின் பாதிப்பு மௌனத்தை தந்தது-

'இப்படி எத்தின சனமோ... இந்த நான் வெளிகிடப் போறன் தாரெண்டு சொன்ன நாடகக்கொப்பியைத்தெியாத்தா என்றான் முருகானந்தன்.''

செல்வராசவிடம் நாடகப் பிரதியை வாங்கிக்கொண்டு மீண்டும் கடற்கரைப் பாதையால் முருகானந்தன் சைக்கிளை மிதித்தான்

பூவரசமரம், பாலர் பாடசாலை கழிந்துகொண்டிருந்ததுஎங்க ஆளைக் காணயில... சுற்றுமுற்றும்பார்த்தபடிசைக்கிளை ஓட்டினான்

பூவரச மரத்தின் பின்புறமாக, கைகளில் பொதிஒன்றை வைத்தபடி அந்த மனிதர் சைக்கிளை மெதுவாக்கி ஐயா... என்றான் முருகானந்தன்

அவரது கண்களில் புதுமலர்ச்சி தம்பி ...தம்பி... என்றபடி ஓடிவந்தார் சுற்றுமுற்றும் பார்த்தவர் குரலை மெதுவாக்கி... கடல்ல குளிர்காத்தெல்லே அடிக்குது பாவம் கண்ணனுக்கு குளிரப்போகுது உந்தா, உந்தக் கரையிலஇருக்கிற போட்டில ஏறிப்போய் குடுத்து விடுறியோ ராசா... செய்யடா தம்பி செய்யடா... என்றார்

முருகானந்தனின் உடல் ஒருமுறை சிலிர்த்து அடங்கியது முன்னாலிருந்த அந்த மனிதரின் ஒடுங்கியகண்களும் துடித்துக் கொண்டிருந்த உதடுகளும் அவனது நெஞ்சைப் பிசைந்தன.

அந்த மனிதரின் கையைப் பற்றினான், குடுக்கிறன், கட்டாயம் குடுக்கிறன் என்றான் முருகானந்தன்.

அவரது கண்களில் சந்தோஷம் முருகானந்தனின் கன்னத்தை தடவி விட்டு திரும்பி

# இலக்கு

இந்த முன்னிருட்டு பொழுதில்
அம்மா என்ன செய்வாள்?
இலுப்பையடி வைரவருக்கு
விளக்கு வைத்து
''என்ரை குஞ்சை காப்பாற்று''
இறைஞ்சிக் கொண்டிருப்பாள்.

ஐயா
பகலெல்லாம் தோட்டத்தில்
மாய்ந்த களைப்பில்
முற்றத்திலமர்ந்து நாளைய
பொழுதின் மூன்று வேளைகளை
நகர்த்துவதை யோசிப்பார்.

அக்கா இரவுச்சாப்பாட்டிற்கு
அடுப்படியில் ஏதேனும்
ஆக்கிக் கொண்டிருப்பாள்
நெற்றியில் புரளும் ஓரிரண்டு
நரைகளை ஒதுக்கியபடி,
எரியும் நெருப்பை
உறுத்துப் பார்த்தபடி,
எனக்கென்ன சாகும் மட்டும்
தம்பிமார் உழைத்துத்தருவார்கள்
சமாதானப்படுவாள்.

ராசனும் வாணியும்
புத்தகமும் கையுமாய் குப்பி
விளக்கொளியில் தூங்கி வழிவார்கள்.

ஆச்சிக்கு குரல்பூரும்
''சிவாதான் நினைக்கிறான்''
அள்ளிய புட்டை
வாயில் போடாமல்
கசியும் விழிகளால்
இருட்டைத் துழாவுவாள்.

மச்சாள் ரதி ......
இப்போது இதென்ன நினைவுகள்
நேரமாயிற்றே
சக்கை வண்டியில் தாவியேறிட
சக்கரங்கள் உருளத் தொடங்க
இப்போது
இலக்கு மட்டுமே தெளிவாகத்
தெரிந்தது.

இ. யதார்த்தன்

## வெளிச்ச வாழ்விற்காக..::

மனதில் முகங்கள்
மொய்க்கும்.....
தியாகத்தின் செய்திகள்

சாலை வாசலில் ஒரு பத்திரிகையை இருவர் வாசித்தபடி இருந்தனர். சந்தையில் சந்தடி மெல்ல மெல்ல அதிகரித்தது' மீன்பிடி வலைகளைச் சுமந்தபடி சிலர்செல்ல, சில சிறுவர்கள் 'போளை'யடித்து விளையாடுகின்றனர். அகன்று விரிந்த கடலில் தூரத்தே பாய் விரித்தபடி மீன்பிடிவள்ளங்கள் சில தூர இடைவெளியில் வருகின்றன.

முருகானந்தன் சைக்கிளை 'ஸ்ராண்டில்' நிறுத்திவிட்டு பூவரசமரத்தின் கீழ் வாங்கு மாதிரி அமைந்துள்ள சீமெந்து ஆசனத்தில் அமர்ந்தான் 'சில்'லிட்டு குளிர்ந்தது அந்த ஆசனம்.

'மரண அறிவித்தல்' சொல்லும் வாகனம் ஒன்று யாரோ ஒருவரின் இவ்வுலக வாழ்வின் பிரிவுச்செய்தியை ஒலிபெருக்கியில் அறிவித்து விட்டுப் போகிறது.

மீண்டும் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்; நேரம்

யபடியே கடல் நீருக்குள்சிறிது தூரம் ஓடிச் செல்கிறார். கடலலைகள் கரையேறி அவர் கால்களை நனைத்து இப்பால் வந்து அழிந்தன. அந்த மனிதரின் குரலில் கனதி கலந்த சோகம் இழையோடியது. மீண்டும் இரு தடவைகள் அவ்வாறே சப்தமிட்டவர் கடல்நீரைக் கைகளால் அள்ளித் தன் மேனியெங்கும் நனைக்கிறார். கடலைவிட்டு வெளியேறியவர் சிப்பிகளால் சிறுசங்குகளால் தான் கட்டிய மாலையை தன் கழுத்தில் சூடிக்கொள்கிறார். ஏதோ ஒருவகை ஆட்டம் ஆடுகின்றார். தன் கழுத்தில் சூடிய மாலையைக் கழற்றிக் கடலினுள் எறிகின்றார், சோகம் தொனிக்க மீண்டும் 'கண்ணா...' கண்ணா...' என்று கத்துகின்றார்.

கடல் இரைந்தவாறு அலை அடிக்கின்றது; ஆச்சரியத்தோடு 'அந்த மனிதரின்' அச்செயல்களைப் பார்த்துக்கொ

ன்ற முருகானந்தன் ஓடிய சிறுவர்களில் ஒருவன் கால் தடுக்கி வீழ்ந்துவிட்டான் வீழ்ந்த சிறுவனை 'அந்தமனிதர்' பிடித்து விட்டார் ஏனைய சிறுவர்கள் சற்றுமுன்னே ஓடி பின்பு நின்று பார்க்கின்றனர்

மனநோயாளியான அந்தமனிதர்... அதுவும் கோபாவேசமாக சிறுவர்களைக் கலைத்தவர்......... என்ன செய்வாரோ...... 'போட் வருகுது' ...... போட் வருகுது...... 'கடல்ல போட் வருகுது......' சிறுவர்கள் எல்லோரும் ஒருமித்தபடி பலமாகக் கத்தினர் 'அந்த மனிதரின்' கைப்பிடி தளர்ந்தது மெது மெது வாகக்கடலை நோக்கிப் பார்வையைச் செலுத்தியபடி கடலை நோக்கி ஓடுகிறார். வீழ்ந்த சிறுவன் எழுந்து ஏனையோருடன் சேர்ந்து கொண்டான். எல்லோரும் கைகொட்டி சிரிக்கின்றார்கள்.

'ஏனடா அந்த மனுசனோட சேட்டைவிடுகிறியல பாவம்...

க்கொண்டிருந்தன..

''சீச்சீ என்டோட ஒரு பிரச்சினையும் இல்லை அதில நிண்ட சின்னப் பெடியள் தான்..''

செல்வராசாவின் சைக்கிள் நின்றது அவன்ர வீடு தான் படலையைத் திறந்து உள்ளே போனான்- முருகானந்தனும் பின் தொடர்ந்தான்-

வீட்டு முற்றத்தில் பதுங்கு குழி ஒன்று திறந்தபடி ஓலையால் வேயப்பட்டிருந்தது- 'சைக்கிளை' நிறுத்திவிட்டு உள்ளே போய் கதிரையில அமர்ந்து கொண்டார்கள். சைக்கிள் ஓடி நின்றதால் உடலெல்லாம் வியர்ந்தது- கடற்காற்று இப்போ வீசவில்லை. மேசையில் இருந்த பத்திரிகை ஒன்றை எடுத்து விசிறியாகப் பாவித்த முருகானந்தனுக்கு சற்று இதமாக இருந்தது- நண்பனின் மனைவி தேநீர் கொடுத்தாள் கடற்கரைச்சம்பவம் மீண்டும் கடலலைபோல் வந்தது முருகானந்தனுக்கு 'ஆரந்

கிற போட்டில ஏறிப்போய் குடுத்து விடுறியோ ராசா... செய்யடா தம்பி செய்யடா... என்றார்

முருகானந்தனின் உடல் ஒருமுறை சிலிர்த்து அடங்கியது முன்னாலிருந்த அந்த மனிதரின் ஒடுங்கியகண்களும் துடித்துக் கொண்டிருந்த உதடுகளும் அவனது நெஞ்சைப் பிசைந்தன.

அந்த மனிதரின் கையைப் பற்றினான், குடுக்கிறன், கட்டாயம் குடுக்கிறன் என்றான் முருகானந்தன்.

அவரது கண்களில் சந்தோஷம் முருகானந்தனின் கன்னத்தை தடவி விட்டு திருப்பி நடக்கத் தொடங்கினான்.

அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்தவனின், உடலில் பட்ட கடற்காற்று நெஞ்சைக் குளிர் கொண்டு அழுத்துவது போலிருந்தது.

இப்போது இ[illegible]ன் நினைவுகள்
நேரமாயிற்றே
சக்கை வண்டியில் தாவியேறிட
சக்கரங்கள் உருளத் தொடங்க
இப்போது
இலக்கு மட்டுமே தெளிவாகத்
தெரிந்தது.

இ. யதார்த்தன்

## வெளிச்ச வாழ்விற்காக..::

மனதில் முகங்கள்
மொய்க்கும்.....
தியாகத்தின் செய்திகள்
சொல்லும்
ஆம் மாவீரர்கள்.....
வெளிச்ச வாழ்விற்காக
புயலாகப் புறப்பட்டவர்கள்

- கோகுலன்

# கே.ஆர். டேவிட்டின் ஒரு பிடி மண்

## ஒரு பார்வை

ஈழத்தில் மிகக் காத்திரமான போராட்ட இலக்கியங்கள் மலர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த வகையான இலக்கியங்கள் இந்த மண்ணின் ஜீவத்துடிப்பை மிக யதார்த்தமாகபதிவு செய்கின்றன.

கதைகள், கவிதைகள் என இலக்கியத்தின் சகல வடிவங்களும் அற்புதமாக கையாளப்படுகின்றன. இந்த வகையில் கே, ஆர். டேவிட்டின் 'ஒரு பிடி மண்' என்ற சிறுகதைத் தொகுப்பு மீரா வெளியீட்டின் 25 ஆவது வெளியீடாக வந்துள்ளது. தயாவின் நவீன ஓவியம் வர்ணத்தில் முகப்பட்டையை அலங்கரிக்கிறது;

1986 ஆம் ஆண்டிற்குப்பின் படைக்கப்பட்ட கதைகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன;

முற்றிலும் தேசிய இனப் பிரச்சினை சார்ந்த கதைகள் என்று இவற்றைச் சொல்ல முடியும். இவற்றில் எரிமலைகள், சரித்திரம் திரும்பும், ஒரு பிடி மண், சிணுங்கி, மெழுகுவர்த்தி, குருத்துக்கள், தாகம் ஆகிய கதைகள் மிக அழகாக எமது போராட்ட வாழ்வையும், அதன் உச்ச பரிமாணத்தையும் எடுத்தியம்புகின்றன.

'எண்ணக் கரு சிதைகிறது'

உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடிப் புகலிடம் தேடும் மனிதர்களின் கதை: தந்தை, மகன்.

மகன் ஒரு சிறுவன். அவன் வீட்டில் விட்டு வந்த நாயை நினைக்கிறான் தந்தையிடம் கேட்கிறான்.

நாய்களில்லை அவங்களுக்கு கோபமில்லை;

மகன் சந்தோஷப்படுகிறான்; ஆனால் மனிதரில் ஏன் அவர்களுக்கு கோபம் என யோசிக்கிறான். தந்தையால் இதை புரிய வைக்க முடியவில்லை;

தாம் புகலிடம் தேடிய இடத்தில் தமது கண்களுக்கு முன்னாலேயே அவர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு ஒரு நாய் உயிர்விடும் அவலத்துடன் கதை முடிகிறது.

தமிழ் மண்ணில் நாய்களின் உயிருக்குக் கூட உத்தரவாத மற்ற நிலையை ஆசிரியர் சித்திரித்துள்ளார்;

'எரிமலைகள்'

ஆசிரியர் பாடம் கற்பிக்கும் போது மாணவர்கள் அப்பாடத்தில் லயிக்காமல் இருப்பதும். ஆசிரியர் அந்த மாணவர்களின் அக்கறையின்மையை எண்ணிச் சிந்திப்பதும் இறுதியில் மர்மமுடிச்சு ஒன்று அவிழ்க்கப்படுவதும்-

நெஞ்சில் பேரிடி.

செய்முறைப்பாடம். உயிர் எலியின் உடலை வெட்டி, பிளந்து மனிதனின் உள்ளுறுப்புகளின் வடிவத்துடன் ஒப்பிட்டுக் காட்ட ஆசிரியர் முனையும் போது

அந்த மாணவர்கள் உயிருடன் பிளக்கப்பட்ட மனிதர்களையே பார்த்திருக்கின்ற செய்தி பெற்றோரை --- உறவினர்களை --- இது தான் தமிழன் மீதான கொடுமை இதயத்தை நொறுக்கிவிடும் அவலம் எரிமலைகள் உருவாகின்றன.

'சரித்திரம் திரும்பும்'

தமிழனை வாழ்க்கையின் பங்காளியாக்கிக் கொண்ட சிங்களப் பெண்ணின் கதை ஒருதவறுதலான சம்பவத்திற்காக சிங்களப்பகுதியில் தன் தம்பியால் தமிழ்ப்பெரியவர் படும் வேதனை...

இது அவள் தமிழ் பகுதிக்கு வந்த பின்னர் மனதில் அடிக்கடி ஞாபகங்களாக எழும் இங்கு இராணுவம் தமிழர் உயிர்களை குடித்தநிலையில்-

தமிழ் மக்கள் ஓடி ஒளிக்கும் போது அந்த சிங்களப் பெண்ணையும்குழந்தையுடன் அழைத்துக் கொண்டு ஓடி பாதுகாப்பு தேடுகின்றனர்.

இரு வேறுபட்ட மக்களின் மனப்பான்மை நன்குசித்திரிக்கப்பட்டுள்ளது.

'ஒரு பிடி மண்'

இராணுவம் கிராமத்திற்குள் புகுந்த போது, வீட்டார் எடுத்தவை. நகைகளும் பணமும் தான். ஆனால் மகள் எடுத்தது ஒரு பிடி மண்.

இடம் பெயர்ந்து சென்று வேறொரு வீட்டில் தஞ்சமடைந்த பின்னர் நிகழும் சம்பவம் அற்புதமாக விவரிக்கப்பட்டுள்ளது.

சுவாமி படத்திற்கு பின்னால் பொதிகட்டி வைக்கப்பட்ட ஒரு பிடி மண்ணை ஒரு நாள் காண வில்லை மண் மீதான பற்று மிக யதார்த்தமாக எந்தவித மிகைப்பாடும் இல்லாமல் சொல்லப்பட்டுள்ளது-

'சிணுங்கி'

பாரதக்கதையை சமகால போராட்டத்துடன் ஒப்பிட்டு பதிலே இக்கதையின் சிறப்பு

அர்ச்சுனன் அதர்மம் நிறைந்த ஆட்சியை வெல்வதற்கு 'பாசுபதம்' என்ற ஆயுதத்தை சிவனிடம் கேட்டான்.

கால்கள் சூம்பியுள்ள மாணவன் கடவுளிடம் என்ன கேட்

> **'எரிமலைகள் கதையிலிருந்து'**
>
> மனித உடலின் உள்ளுறுப்புக்களை விளக்குவதற்காக ஆசிரியர் எலியின் உடலை வெட்டி உள்ளுறுப்புக்களை விளக்கினார்!..!
>
> ஆனால் மாணவர்களோ அக்கறையின்றி நின்றனர்...!
>
> அதற்கான காரணத்தை ஆசிரியர் விசாரித்தபோது...மனிதனால்வெட்டிப் பிளக்கப்பட்ட எத்தனையோ மனிதர்களின் உடல் உறுப்புக்களைத் தாம் பார்த்து விட்டதாக மாணவர்கள் கூறினார்கள்.

பாடம் நடாத்தும் ஆசிரியர் பான் கேட்கும் கேள்விக்கு- ஊனமடைந்த மாணவனின் 'வீரச்சாவடைந்த போராளிகளை திரும்பவும் தா' என்று கேட்பேன்.

விடுதலைக்கான போராட்டத்தில் அனைத்து உள்ளங்களும் கலந்திருக்கின்ற தன்மை இங்கு வெளிப்படுகின்றது)

'மெழுகுவர்த்தி'

அவர்கள் நால்வரும்போராளிகள். குழுத்லைவன் காயமடைகிறான், தூக்கியும் செல்ல முடியாது. சுற்றிவளைத்து இராணுவம்.

அந்தப் போராளி தன்னைச் சுட்டுக் கொன்று விட்டு சக போராளிகளை தப்பிச் செல்லச் சொல்கிறான்.

எப்படி முடியும்?

சக போராளி 'நண்பன்' குழுத்தலைவன் இறுதியில் அவன் கட்டளை நிறைவேற்றப்படுகிறது. இது தியாகத்தின் உச்சம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் யதார்த்த நிகழ்வு கலாபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வவுனியா திலீபன்**

'குருத்துக்கள்'

ஒரு முதியவரின் பார்வையில் தற்கால சிறுவர்களின் சிந்தனைகளும். செயற்பாடுகளும் பதிவாகின்றன

'புலிகள்- ஆமி- அடிபாடு' இது தான் அவர்களின் விளையாட்டு

'எங்களுக்கு புலிகளாய் வரத்தான் விருப்பம். ஆமிக்காரனாய் வந்தால் ஆயுதங்களை எறிய வேணும் பயந்தோட வேணும் சூடு வாங்க வேணும் அடி வாங்க வேணும்

முதியவருக்குஆச்சரியம். ஆர்வம் விளையாட்டுக்கும் கூட அவர்கள் பயந்தோட விரும்பவில்லை அடிக்கத்தான் விரும்புகிறார்கள் என ஆசிரியரின் கூற்றாக வருவது எமது சந்ததியினரின் மன உறுதிக்கு உதாரணம் என்றே சொல்ல வேண்டும்

'தாகம்'

வேவு பார்க்கச் சென்ற போராளி எதிரி முகாம் பகுதியில் இராணுவத்தின் சூட்டிற்கு காயமடைந்து தபபிவர முடியாத நிலையில் எதிரிகளின் உயிர்களை அழிப்பதுடன் தன் சாவை எதிர்கொள்ள துணியும் கதை

''தனது உடல் எதிரியின் கைக்கும் கிடைக்கக் கூடாது. எதிரியை அழிப்பதன் மூலமே தன் சாவு நிகழ வேண்டும்'

போராளியின் மனவுணர்வுகள் இக்கதையில் நன்கு பதிவாகியுள்ளன தேசிய விடுதலைப் போராட்டத்தின் மகத்துவம் இதில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

'பலமான சிந்தனைகள்' என்ற கதையும் குறிப்பிடத்தக்கது நூலாசிரியரின் அனுபவங்கள் கலைத் தன்மையுடன் இலக்கிய சிருஷ்டிப்புகளாக்கப்பட்டுள்ளன. அதனால் தான் ஆசிரியர் இருள் கதைகளில் 'அனுபவங்கள் பிசாவதில்லை' எனக் குறிப்டுகின்றார் போலும்.

இந்த நூலின் ஐந்தாவது கதையிலிருந்து இறுதிக்கதை வரை நூலாசிரியர் சிறுகதை வடிவத்தினூடாக அலட்டலற்ற நடையாலும் உள்ளடக்கத்தாலும் திடீர் பாய்ச்சலை வெளிப்படுத்தி நிற்கின்றார்க

நவீன இலக்கியத்தின் உச்சத்தை எமது ஈழத்து இலக்கியம் தொடும் என்ற நம்பிக்கையை இந்த நூலின் சில கதைகள் மெய்ப்பித்துக்காட்டுகின்றன.

# கிளி / பளை மத்திய கல்லூரி

# சிறப்பு மலர் - 04-11-1994

## பளைப் பிரதேச அலுவலரின் வாழ்த்துரை

ஆலிலையில் பள்ளி கொள்ளும் காத்தற்கடவுளாம் மாயவனின் பச்சிலைப் பள்ளியிலே நடு நாயகமாகத் தலை நிமிர்ந்து நிற்கும் பளை மகாவித்தியாலயம் தனது செயலால் மக்களின் அபிமானத்தால் திணைக்களத்தின் அநுசரணையால் பளை மத்திய கல்லூரியாகத் தரம் உயர்த்தப் பட்டுள்ளது. இரட்டைக்கேணி அம்பாள் ஆலய ஈசானத் திசையிலே புதுப் பொலிவுடன் நிற்கும் தகுதியும் ஆற்றலும் வாய்ந்த கல்லூரியை வாழ்த்துவதிலே பெருமை அடைகிறேன்.

மாடு கட்டிப் போரடித்தால் செந்நெல் மாளாதென்று
ஆனை கட்டிப் போரடிக்கும் அழகான நம் மாவட்டத்தில் கல்லூரியாகத் தன்தரத்தினை உயர்த்தும் தகுதி இக்கல்லூரிக்கு உண்டு. நம் மாவட்டத்தின் பெயரை கலைத்துறையிலும், மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் முதல் முதல் பல்கலைக்கழகங்களில் பொறிப்பித்த பெருமை இக்கல்லூரிக்குத் தனித்துவமான உரிமையாகும். இப்பின்னணியின் நிலைப்பாட்டை நன்குணர்ந்து. நம் மாவட்டத்தின் கல்விப் பயிரை உரமிட்டு வளர்த்து. நம் பிரதேசக் கல்வித் தடைகளை உடைத்தெறியும் துணிவும் ஆற்றலும் தகுதியும் மிக்க கல்விப்பணிப்பாளர்.

''ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்''

எனும் பாரதியின் கனவுகளை நனவாக்கும் வகையில் இக்கல்லூரி அந்தஸ்தைப் பெற்றுத் தந்துள்ளார். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளும் பணிப்பாளரது நோக்கை உணர்ந்து,

''ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்'' எனும் வள்ளுவன் வாய் மொழியைச் சாதனையிற் காட்டும் பொறுப்பு இக்கல்லூரி மாணவர், ஆசிரியர், அதிபர், பெற்றோர், சமுதாய நலத்துறையினர் யாவரதும் பொறுப்பாகும் இப்பொறுப்புணர்வை செயல்வடிவாக்கும் ஆற்றலும் பண்பும் வாய்ந்தவர்கள் நம் ஆசிரியர்களும் மாணவர்களும் என்பதில் அவர்களுடன் நானும் பெருமை அடைகிறேன்-

வாழ்க நம் கல்லூரி - வளர்க நம் மாணவர்.

ப. அரியரத்தினம்
(முன்னைநாள் ஆசிரியர், அதிபர்)
பிரதேசக் கல்வி அலுவலர்,
பளை.

## அதிபர்கள் வரிசையில்

1) திரு. மா. பீதாம்பரம்
2) திரு. எஸ். ஜோசெப்
3) திரு. எம். அந்தோனிப்பிள்ளை
4) திரு. வி. செல்லையா
5) திரு. சி. இராஜநாயகம்
6) திரு. ரி. கனகரத்தினம்
7) திரு. எஸ். சிவசுந்தரம்
8) திரு. சி. தியாகராசா
9) திரு. கே. மாணிக்கவாசகர்
10) திரு. ஏ. எஸ். பாலரத்தினம்
11) திரு. சி. நடராசா
12) திரு. கே. பரஞ்சோதி
13) திரு. அ. பொ. செல்லையா
14) திரு, ப. அரியரத்தினம்
15) திரு. சு. புண்ணியசீலன்

## கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

பளை மகாவித்தியாலயம் மத்திய கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்டதையிட்டு வெளியிடப்படும் மலரில் ஆசிச்செய்தி வழங்குவதற்கு எனக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்,

1961ம் ஆண்டுக்கு முன்பு சமய நிறுவனங்களும் கல்விச் சபைகளும் பல உயர்ந்த கல்வித் தரமும் பண்பாட்டுப் பாரம்பரியமும் சிறந்த ஒழுக்க நெறியும் கொண்ட பாடசாலைகளை நிர்வகித்து நடத்தின. இவை கல்லூரிகள் எனப் பெயர் பெற்று விளங்கின. யாழ்ப்பாணத்தில் உள்ள புகழ் பெற்ற கல்லூரிகளான புனித யோன் கல்லூரி, காட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி என்பன இத்தகைய கல்லூரிகளுள் சிலவாகும்.

1961ஆம் ஆண்டு பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் பாடசாலைகள் மத்திய மகாவித்தியாலயம், மகாவித்தியாலயம், கனிஸ்ட வித்தியாலயம், வித்தியாலயம் எனத் தரம் பிரித்துப் பெயரிடப்பட்டன. தற்போது அவை 1 ஏ பி 1 சி தரம் II, தரம் III பாடசாலைகள் என வகுக்கப்படுகின்றன. இத்தரங்கள் பாடசாலையில் உள்ள வகுப்புக்களின் நிலையைக் குறிப்பனவேயன்றி வேறு அல்ல.

யாழ்ப்பாண மாவட்டத்தில் புகழ் பெற்ற கல்லூரிகள் பல உள்ள போதும் கிளிநொச்சி மாவட்டத்தில் கல்லூரிகள் என்ற பெயருடன் கல்வி நிலையங்கள் ஒன்றுமே இல்லாத குறை மாணவர்கள் மனதில் பெரும் உளப்பாதிப்பை ஏற்படுத்துவதை நான் உணர்ந்தேன். எனவே கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு 1 ஏ. பி பாடசாலைகள் கல்லூரிகளாக மாற்றப் பட்டுள்ளன - தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இவற்றுள் கிளிநொச்சி மகாவித்தியாலயமும், பளை மகாவித்தியாலயமும் முறையே கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகவும், பளை மத்திய கல்லூரியாகவும் பெயரிடப்பட்டுள்ளன.

இந்த வகையிலே மத்திய கல்லூரி என்ற பெயரைக் கொண்ட இக் கல்வி நிறுவனம் தனது பெயருக்கு ஏற்ப உயர்ந்த கல்வித் தரத்தையும் சிறந்த ஒழுக்கமுடைய மாணவர்களையும் அம்மாணவர்களிடையே இக் கல்லூரிகது எனச் சிறந்த பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் கொண்டதாக வளர்ச்சியடைந்து பளைப் பிரதேச மாணவர் சமூகத்திற்கு கல்வித் தொண்டாற்ற வேண்டுமென விரும்புகிறேன்.

கல்வியாளர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு இணங்க இக்கல்லூரி சிறப்புற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிக்க வேண்டி வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

சி. கமலநாதன்
மாவட்டக் கல்விப்பணிப்பாளர்
கிளிநொச்சி.

## எங்கள் அன்னை

1953 தை மாதம் 5-ம் நாள் பச்சிலைப் பள்ளி வாழ் மக்களின் பொன்னான திருநாள். தத்தம் இல்லங்களில் மங்களம் ஏற்பட்டு விட்டது போன்ற புத்துணர்ச்சி அறியாமை எனும் இருளை அகற்ற - அன்னசத்திரம் ஆயிரம் வைத்தலிலும் ஆலயம் பதினாயிரம் நாட்டலிலும், மேலான புண்ணிய கைங்கரியமான கல்விக் கூடம் பளை மண்ணில் பளை ஆங்கில அரசினர் பாடசாலையாக ஆரம்பித்தது. திரு மா. பீதாம்பரம் அவர்களை அதிபராகக் கொண்டு சிறு குழந்தை சிறுகை நீட்டி குறுகுறுவென நடந்து காகிதத்தைப் பிடிப்பது போன்று இன்று பளை மத்திய கல்லூரியாகத் தலை நிமிர்ந்து நிற்கின்றது. இந் 41 வருட காலத்தில் ஆளுமை மிக்க அதிபர்களையும் ஆற்றல் மிக்க நல்லாசான்களையும் அவர்கள் வழிநடத்தலில் பண்பும், முயற்சியும் கொண்ட மாணவர்களையும் தன்னகத்தே கொண்டு கல்லூரியாக மிளிர்ந்து நிற்கின்றது. இப்பிரதேசத்தில் கல்வியின் எழுச்சிக்கும், சமுதாய உயர்ச்சிக்கும் அரும் பணி புரிந்த இக் கல்லூரிக்கு, கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பல்கலைக் கழக கலை, மருத்துவ, பொறியியல் துறைகளுக்கு முதல் முதலாக மாணவர்களை அனுப்பிய பெருமையும் உண்டு.

கல்லூரி நிலை எய்துவதற்கு அயராது உழைத்து வழி சமைத்தவர்கள் பலர் எமது கல்லூரியுடன்

## பாடசாலை அபிவிருத்திச் சபை, பளை மத்திய கல்லூரி, பளை

பளை மத்திய கல்லூரி விழாவையிட்டு இந்த ஆசிச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்;

பளைப் பிரதேசத்தில் உயர்ந்து நிற்கும் மத்திய கல்லூரி பல மருத்துவர்களையும் பொறியியலாளர்களையும் பல பட்டதாரிகளையும் உருவாக்கி உள்ளமை பாராட்டப்படக்கூடியது. இக்கல்விமான்களை உருவாக்கி இப்பாடசாலையின் உயர்ச்சிக்கு காலாய் இருந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக;

ப. அரியரத்தினம்
(முன்னைநாள் ஆசிரியர், அதிபர்)
பிரதேசக் கல்வி அலுவலர்,
பளை;

15) திரு. சு. புண்ணியசீலன்

கின்றேன்.

சி. கமலநாதன்
மாவட்டக் கல்விப்பணிப்பாளர்
கிளிநொச்சி.

## எங்கள் அன்னை

1953 தை மாதம் 5-ம் நாள் பச்சிலைப் பள்ளி வாழ் மக்களின் பொன்னான திருநாள். தத்தம் இல்லங்களில் மங்களம் ஏற்பட்டு விட்டது போன்ற புத்துணர்ச்சி அறியாமை எனும் இருளை அகற்ற - அன்னசத்திரம் ஆயிரம் வைத்தலிலும் ஆலயம் பதினாயிரம் நாட்டலிலும், மேலான புண்ணிய கைங்கரியமான கல்விக் கூடம் பளை மண்ணில் பளை ஆங்கில அரசினர் பாடசாலையாக ஆரம்பித்தது. திரு மா. பீதாம்பரம் அவர்களை அதிபராகக் கொண்டு சிறு குழந்தை சிறுகை நீட்டி குறுகுறுவென நடந்து காகிதையைப் பிடிப்பது போன்று இன்று பளை மத்திய கல்லூரியாகத் தலை நிமிர்ந்து நிற்கின்றது. இந் 41 வருட காலத்தில் ஆளுமை மிக்க அதிபர்களையும் ஆற்றல் மிக்க நல்லாசான்களையும் அவர்கள் வழிநடத்தலில் பண்பும், முயற்சியும் கொண்ட மாணவர்களையும் தன்னகத்தே கொண்டு கல்லூரியாக மிளிர்ந்து நிற்கின்றது; இப்பிரதேசத்தில் கல்வியின் எழுச்சிக்கும், சமுதாய உயர்ச்சிக்கும் அரும் பணி புரிந்த இக்கல்லூரிக்கு, கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பல்கலைக் கழக கலை, மருத்துவ, பொறியியல் துறைகளுக்கு முதல் முதலாக மாணவர்களை அனுப்பிய பெருமையும் உண்டு.

கல்லூரி நிலை எய்துவதற்கு அயராது உழைத்து வழி சமைத்தவர்கள் பலர் எமது கல்லூரியுடன் நீண்டகாலம் ஆழ்ந்த தொடர்பு கொண்டவராக கல்லூரி வளர்ச்சிக்கு அரும்பணி புரிபவர் எமது மாவட்டக் [கல்விப் பணிப்பாளர் திருவாளர் சி. கமலநாதன் அவர்கள், கல்லூரியின் பல நிலைகளில் ஏற்றத்திற்கு உழைப்பவர் எமது கோட்ட கல்வி அதிகாரி திருவாளர் ப. அரியரத்தினம் அவர்கள்; இவர்களுடன் கடந்த 41 வருடங்களாக வாழையடி வாழையென வந்து பெரும் தொண்டாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெரியோர்கள், பெற்றோர்கள். நலன் விரும்பிகள், யாவரது மகிழ்விலும் பெருமையோடு பங்கு கொள்கின்றோம். இவ் வேளையில் எமது கல்லூரியை திறம்பட வழி நடத்திச் செல்கின்ற அதிபர், ஆசிரியர்கள், மற்றும் யாபேருக்கும் தொடர்ந்து செயலாற்றுவதற்கு வேண்டிய அனைத்தையும் அருள இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ் குடா நாட்டின் நுழைவாயிலில் தென்னையும், பனையும் நிமிர்ந்து நிற்கும் திருநாட்டில் உயர்ந்து நிற்கும் பளை மத்திய கல்லூரி மென்மேலும் பொலிவு பெற்று புகழ்பெற கல்லூரியின் புதல்வர்களாகிய நாம் வாழ்த்துகின்றோம்;

த. தவராசா
செயலாளர், பழைய மாணவர் சங்கம், பளை மத்திய கல்லூரி, பளை.

## பாடசாலை அபிவிருத்திச் சபை, பளை மத்திய கல்லூரி, பளை

பளை மத்திய கல்லூரி விழாவையிட்டு இந்த ஆசிச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்;

பளைப் பிரதேசத்தில் உயர்ந்து நிற்கும் மத்திய கல்லூரி பல மருத்துவர்களையும் பொறியியலாளர்களையும் பல பட்டதாரிகளையும் உருவாக்கி உள்ளமை பாராட்டப்படக்கூடியது. இக்கல்விமான்களை உருவாக்கி இப்பாடசாலையின் உயர்ச்சிக்கு காலாய் இருந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக;

பளை மத்திய கல்லூரியாக தரம் உயர்வதற்கு வழிசமைத்த கல்விப் பணிப்பாளர் கோட்ட அலுவலர், அதிபர் ஆசிரியர்கள் ஆகியோருக்கும் எமது நன்றிகள், இக்கல்லூரி கல்வித்துறையில் மட்டுமன்றி ஏனைய அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று உயர்ச்சி கண்டு கிளிநொச்சி மாவட்டத்திலே உயர்ந்த ஒரு கல்லூரியாக விளங்கிட மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்;

திருமதி ரா. இராமலிங்கம்
செயலாளர்;
பாடசாலை அபிவிருத்திச் சபை,
பளை மத்திய கல்லூரி,

## பாடசாலை வளர்ச்சியில் ஓர் மைல்கல்

தென்னந் தோப்புக்களும் வயல் நிலங்களும் தோட்டநிலங்களும் நிறைந்த பச்சிலைப் பள்ளி பிரதேசத்தின் நடுநாயகமாக விளங்குவது பளைப் பிரதேசம் ஆகும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் இதனைச் சூழவுள்ள பிரதேசங்களான கிளாலி, முகமாலை, புலோப்பளை. அல்லிப்பளை ஆகிய இடங்களில் கிறிஸ்தவ பாடசாலைகள் அமைக்கப்பட்ட போது இந்துக்கள் அதிகமாக வாழும் இப் பிரதேசத்தில் ஓர் சைவப் பாடசாலையை அமைத்திட வேண்டும் என எண்ணம் கொண்ட பெரியோர்களின் முயற்சியினாலும் அப்போதைய இப் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வே. குமாரசாமி அவர்களின் அனுசரணையாலும் இப்பாடசாலை அமைக்கப்பட்டு 5-01-1953 இல் அப்போதைய பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவல அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலைக்குரிய நிலத்தினை தம்பாப்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்கள் அன்பளிப்பாக வழங்கி உதவினார்.

பளை ஆங்கில அரசினர் பாடசாலை என்ற பெயரில் 76 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் முதலாவது அதிபராக திரு. மா. பீதாம்பரம் அவர்கள் பணிபுரிந்தார். இவரது அயரா முயற்சியால் 1956ம் ஆண்டில் முதன் முதலாக சிரேஷ்ட தராதரப் பத்திர (S.S.C) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் அதிபர்கள் வரிசையில் 1960ம் ஆண்டு இப் பாடசாலை அதிபர் பொறுப்பினை ஏற்று திரு. வி. செல்லையா அவர்கள் அரும்பணியாற்றினார். இவரது காலத்தில் பாடசாலையின் மாணவர்தொகை வேகமாக அதிகரித்ததுடன் விஞ்ஞான ஆய்வுகூடம், நெசவு ஆய்வு கூடம், மரவேலை ஆய்வு கூடம் என்பன அமைக்கப்பட்டதுடன் 1962ம் ஆண்டு மகாவித்தியாலயமாகவும் தரமுயர்வு பெற்றது.

முதன் முதலாக 1962-ம் ஆண்டில் (S S C) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 6 மாணவர்கள் பூரண சித்தி பெற்று இப் பாடசாலையின் பெருமையை நிலை நிறுத்தினார்கள். இவ் வளர்ச்சி மேலும் உருப்பெற்றமையால் 1977-ம் ஆண்டு க. பொ. த உயர் தர கலைப்பிரிவு ஆரம்பிப்பதற்கு வழிசமைத்தது.

1978-ம் ஆண்டு இப் பாடசாலையின் அதிபர் V. K. பரஞ்சோதி பொறுப்பினை ஏற்றதன் பின் இவ்வித்தியாலயம் மேலும் பல வளங்களைப் பெற்றதுடன் இந்து ஆலயம் ஒன்றும் அமைக்கப்பட்டு கல்லூரி வளம் பெறத் தொடங்கியது ஆசிரியர் இன்மையால் இயங்காதிருந்த மரவேலைப் பகுதி இயங்கத் தொடங்கி இதனால் இப்பிரதேசம் பல நன்மைகளையும் பெற்றது;

இவரைத் தொடர்ந்து 1980-ம் ஆண்டு திரு, அ- பொ- செல்லையா அவர்கள் மகாவித்தியாலயத்தில் அதிபர் பதவி ஏற்றார்; இவரது காலத்தில் இவ் வித்தியாலயம் பன்முகப்பட்ட வளர்ச்சியை எய்தத் தொடங்கியது. இக்காலத்திலேயே கிளிநொச்சி தொகுதியில் இருந்து முதன் முதலாக இரு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு கலைத் துறைக்கு தெரிவாகி எல்லோராலும் போற்றப்பட்டதுடன் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் ரொக்கப்பணமாகரூ 1000 வழங்கப்பட்டு பாராட்டும் பெற்றார்கள் அன்று முதல் இம் மகாவித்தியாலயம் கிளிநொச்சி மாவட்டத்திலேயே முதன்மைப் பாடசாலையாக விளங்கியது 1985-ம் ஆண்டு கொத்தணிப் பாடசாலை அமைப்பு முறை வந்த பொழுது இப்பிரதேசத்தின் மூலாதாரப் பாடசாலையாக இது விளங்கி ஏனைய அயற்பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் பேருதவி புரிந்து வந்தது.

1983-ம் ஆண்டில் க. பொ. த. உயர்தர தரத்தில் முதன் முறையாக வர்த்தகத் துறை ஆரம்பிக்கப்பட்டு முதன் முறையிலேயே இரு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டமை இவ் வித்தியாலய வளர்ச்சியின் இன்னோர் படிக்கல்லாகும். 1984-ம் ஆண்டு கிளிநொச்சிப் பிரதேசம் தனி மாவட்டம் ஆன பொழுது பச்சிலைப் பள்ளி பிரதேசமும் இதனுடன் இணைக்கப்பட்டமையால் இப் பிரதேச மாணவர்கள் அதிகளவில் பல்கலைக்கழகம் புகும் வாய்ப்புக்களைப் பெற்று உயர்வடைந்தனர், இதே ஆண்டு க. பொ. த. (உ. த) விஞ்ஞான பிரிவு முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் முதன் முதலாக மருத்துவபீடத்திற்கு மாணவர்களை அனுப்பிய பெருமை இம் மகாவித்தியாலயத்தையே சாரும் இதே போன்று 1987 இல் கணிதத்துறை ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்து முதல் பொறியியலாளரை உருவாக்கிய பெருமையும் இப் பாடசாலையையே சேரும். இக்காலம் பளை மகாவித்தியாலயத்துக்கு மட்டுமல்ல, பளைப்பிரதேச கல்வி வரலாற்றிலேயே ஒரு பொற்காலம் ஆகும் மேலும் இக்காலத்திலேயே நூலக மண்டபமும் ஏனைய 3 மண்டபங்களும் உருவாக்கப்பட்டு பாடசாலை மேலும் மிளிர்ந்தது தொடர்ந்து1990-ம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளால் பாடசாலை நடத்த முடியாது இருந்த சூழ்நிலையில் 1991-ம் ஆண்டு எமது தற்போதைய பிரதேச கோட்டக் கல்வி அதிகாரி திருவாளர் ப அரியரட்ணம் அவர்கள் கொத்தணி அதிபராக பதவி ஏற்றார் குறுகிய காலத்துக்கு அதிபராக இருந்த போதிலும் இப்பாடசாலையையும் இப்பிரதேசக்கல்வியையும் வளர்ப்பதில் மிகவும் அக்கறைஉடையவராகஇருந்தமையாலும்மிகவும்வெற்றிகரமாக நடாத்தி கிளிநொச்சி கல்விப்பணிமனைக்கு உதவிக் கல்விப் பணிப்பாளராக உயர்வு பெற்று 1992-ம் ஆண்டு சென்றார். இவர் எமது பாடசாலை வளர்ச்சியில் இன்றும் கரிசனையுடன் செயற்பட்டு வருவதுடன், இவ் வித்தியாலயம் கல்லூரியாக தரம் உயர்வதற்கும் அயராது பாடுபட்டு வந்துள்ளார்.

இன்றைய சூழ்நிலையில் அரச உதவிகள், வளங்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் தளபாடப் பற்றாக்குறை, வகுப்பறை, மண்டபப் பற்றாக்குறை, ஆராதனை மண்டபம் இன்மை பொருத்தமற்ற விளையாட்டு மைதானம் ஆசிரியரின் போக்குவரத்து கஷ்டங்கள், ஆசிரியர் தங்குமிட வசதியின்மை போன்ற சிக்கல்கள் மத்தியிலும் இப்பாடசாலை கல்லூரியாகத் தரமுயர்வது கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

நீண்ட காலமாக இப் பிரதேசத்தின் விஞ்ஞானக் கல்வி அதிகாரியாகவும், பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் தற்பொழுது மாவட்ட கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றிவரும் திருவாளர் சி. கமலநாதன் அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் கல்லூரிகள் இல்லை என்ற குறையை நீக்கி பொருத்தமான நான்கு பாடசாலைகள் கல்லூரியாகத் தரம் உயர்த்திய பெருமையும்அவரையே சாரும். எமது கல்லூரியின் தேவைகளை உடனுக்குடன் அறிந்து செயல் வடிவில் நிறைவேற்றித்தரும் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களு கோட்டக்கல்வி அலுவலர் அவர்களும், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு ஆசி கூறுவது இரட்டிப்பு மகிழ்வினைத் தருகிறது;

திரு. க. புண்ணியசீலன்
அதிபர்
பளை மத்திய கல்லூரி
பளை

(சி-10639)

# சிறிலங்காவில் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் களம் இடையில் வந்த காட்சி மாற்றம் முடிவையும் மாற்றுமா?

சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் ஐந்தே தினங்கள் மட்டுமே இருப்பினும் கூட 'தேர்தல் சூடு' இன்னமும் ஏறியதாகத் தெரியவில்லை. சில சமயம் எதுவித 'சூடற்ற' நிலையிலேயே தேர்தல் நடந்து முடிந்து விடலாம் போன்றும் தெரிகிறது.

இம் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் ஐ. தே. கவின் பொதுத்தேர்தல் தோல்வியுடனேயே, ஓர் பரபரப்பற்ற நிலையிலேயே நடந்து முடிந்து விடலாம் என்றே கருதப்பட்டது. ஆயினும் காமினிதிசாநாயக்கா ஐ. தே. கவின் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றுவதில் வெற்றி கண்டதும், ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நிறுத்தப் பட்டமையும் தேர்தலை ஓரளவு



'சூடாக்கியது' என்றேகொள்ளலாம் ஆயினும் காமினி திசாநாயக்கா கூட தனது வெற்றியில் நம்பிக்கை கொண்டவராக இருக்கவில்லை என்றே அரசியல் விமர்சகர்களும், அவரைச் சந்தித்த பத்திரிகையாளர்களும் மதிப்பீடு செய்திருந்தார்கள்;

இந்நிலையில், கடந்த மாதம் 24ஆம்திகதி காமினி திசாநாயக்கா கொல்லப்பட்டதென்பது ஜனாதிபதித் தேர்தலின் அரசியற் சூழ் நிலையை அடியோடு மாற்றியதெனலாம் இக் குண்டுவெடிப்பானது ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரை அழித்தது மட்டுமல்ல. அரசியற்கட்சிகள்ஏற்கனவேவகுத்துக் கொண்ட தேர்தல் யுக்திகள், தந்திரங்கள் என்பனவற்றையே மாற்றியமைத்ததெனலாம். இது மூன்றாவது ஜனாதிபதித்தேர்தலில் இருந்த ஓரளவு சூட்டையும்முற்றாகத் தணித்ததென்றே கூறமுடியும்;

## ஜனாதிபதித் தேர்தல் களம்

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது ஆறுபேர் களத்தில் குதித்தனர் இதில் நல்வர் அரசியற் கட்சிகளின் சார்பிலும், இருவர் சுயேட்சை என்ற ரீதியிலும் போட்டியிடுகின்றனா ஆனால் இவ் இரு சுயேட்சைகளும் ஐ. தே- கட்சியைச் சேர்ந்த வர்களாகும். இந்தவகையில் ஐ- தே- கட்சியில் இருந்து மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களும்- ஏனைய கட்சிகள் தொடர்பாக அரசாங்க கட்டுப்பாட்டில் இருந்த பிரசார சாதனங்கள் மூலம்முடுக்கிவிடப்பட்ட அதேவேளை, மறுபுறம் புதைகுழி தோண்டும் விவகாரம் உச்சகட்டம்வரை சென்றது.

தினமும் தொலைக்காட்சிக்கும், வானொலிக்கும் மாறிமாறி பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும், நீதி அமைச்சர் பேராசிரியர் பீரிசும், தகவல் துறை அமைச்சரும், அமைச்சரவை பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்காவும் பேட்டிகளையும், அறிக்கைகளையும் வழங்கிக் கொண்டும் கொடுத்துக் கொண்டும் இருந்தனர் பிரதமர் சந்திரிகாவும் தனது பங்கிற்கு பேட்டிகளையும் அறிக்கைகளையும் விடுத்துக் கொண்டிருந்தார்;

அத்தோடு இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் ஆரம்பித்த பேச்சுவார்த்தையும், அரசாங்கத்தரப்பினருக்கு உற்சாகம் அளிக்கும் ஒரு பிரசாரமாகவே இருந்தது சிறுபான்மையர்களின் வாக்குகளைக் கணிசமான வகையில் இவைபெற்றுத் தரும் எனவும் பொ. ஐ முன்னணியினரால் எதிர்பார்க்கப்பட்டது.

இந் நிலையில் பொ. ஐ. மு. தனது வெற்றியில் முழு நம்பிக்கை கொண்டிருந்தகாரணமாக தேர்தலை துணிவுடனும், நம்பிக்கையுடனும் எதிர்கொள் தயாராக இருந்தது ஆனால் இதற்கு மாறாக ஐ தே. கட்சியின் நிலை இருந்ததெனலாம்.

## ஐ. தே. கவும் தேர்தலும்

பொதுத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியானது ஐ. தே. கட்சிக்குப் பெரும் மனச்சோர்வை ஏற்படுத்தியிருந்தது கட்சியின் தலைவரான டி. பி- விஜேதுங்காவிடம் இது தெளிவாகவே தெரிந்தது தேர்தலில் தோல்வியின் பின் ஜனாதிபதி மாளிகைக்குள்ளேயே டி- பி- விஜேதுங்கா தனது ஆட்சிக்காலத்தின் நாட்களை எண்ணிக் கொண்டு முடங்கிக் கொண்டார்-

இவர் இவ்வாறு முடங்கிக் கொண்டமைக்கு தேர்தல் தோல்வி மட்டுமல்ல கட்சிக்குள் ஏற்பட்ட மோதல்களும் காரணமாகும் இதில் முன்னாள் பிரதமராக இருந்த ரணில் நிராகரிக்கப்பட்டு காமினி திசாநாயக்கா எதிர்க்கட்சித்தலைவராகவும் பிரதித் தலைவராக மாறியமையும் காமினி திசாநாயக்கா வளர்த்த கடா மார்பில் பாய்வது போன்று டி- பி- விஜேதுங்காவையே பொருட்படுத்தாமல் செயற்பட்டமையும் அவருக்குவேறுவழி இன்றி ஒதுங்கிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியதெனலாம்-

இதேசமயம் காமினி திசாநாயக்காவின் புரட்டுக்கள் கவிழ்ப்புக்கள் ஐ- தே- கட்சிக்குள்ளும் பெரும் நெருக்குதலை ஏற்படுத்தியது சிறிசேன கூரே போன்றவர்கள் அரசியலில் இருந்து புறந்தள்ளப்பட பிரதமர் ரணில் போன்றோரும் அரசியல் நடவடிக்கைகளில் தீவிர அக்கறை காட்டாது ஒதுங்கினர்- அதேவேளை காமினியில் வெறுப்புற்ற ஏ. சே- ரணசிங்கா கட்சன் சமரசிங்கா போன்றவர்கள் சுயேட்சையாக ஜனாதிபதி தேர்தல் களத்தில் இறங்கினர் உண்மையில் இவர்களின் தேர்தல் பிரவேசமானது- ஐ- தே- கட்சிகு எதிரானதல்ல- காமினி திசாநாயக்காவிற்கு எதிரானதே என்பதில் சந்தேகமில்லை-

மேலும், பொதுத்தேர்தல் கூட்டாளியான தொண்டமானின் நிலைப்பாடும் திருப்தி தருவதாக மட்டும் மாற்றத்தைக் கொண்டுவரவில்லை தேர்தல் வியூகங்கள் தேர்தல் யுத்திகள் என்பவற்றிலும் மாற்றத்தைக் கொண்டு வந்தது

ஏற்கனவே பொதுத் தேர்தலில் ஐதேகவின் தோல்வியானது தேர்தல் சூட்டினைக் குறைத்திருந்ததாயினும் காமினி திசாநாயக்காவின் மரணமானது தேர்தல் பரப்புரைகளில் தொய்வையும் பரஸ்பரக் கண்டனங்களையும் குறைத்ததெனலாம் குறிப்பாகத் தேர்தல் பிரசாரம் ஸ்தம்பித நிலையை அடைந்ததினால் தேர்தல் சூடு குறைந்தது அதேசமயம் பிரதான இருதரப்பினரும் தமது பழைய தேர்தல் வியூகத்தை மாற்றிக்கொள்ள கால அவகாசமும் தேவையாக இருந்தது

பொதுஜன ஐக்கிய முன்னணியை பொறுத்து காமினியின் மரணத்திற்கு முன்னர், அரசியலமைப்பு மாற்றம், கடந்த ஐ தே க ஆட்சியின்ஊழல் மோசடி மற்றும் படுகொலைகள், இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்வு என்றமுன்னைய தாக்குதல்வியூகங்களில்சில மாற்றப்படவேண்டிவந்தது. அதிலும் குறிப்பாக காமினிதிசாநாயக்காவிற்கு எதிராக தனிப்பட்டரீதியில் வைக்கப்பட்டிருந்த மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் இடம் பெற்றதான நிதி மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டு, யாழ். பொது நூலகம் எரிப்பு என்பவை வலுவற்ற தேர்தல் பிரசாரங்களாக மாறின;

அத்தோடு, காமினிதிசாநாயக்காவின் கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் மீது ஐ. தே. க. சுமத்திய பழியும் அதற்கு பொது ஐ. மு துணை போனதாக முன்வைத்த குற்றச்சாட்டும் இவ் விவகாரத்திலும் பொ. ஐ மு. அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்த மாற்றத்தை வேண்டிநின்றது.

இந்த நிலையில், மாறிய தேர்தல் காட்சியில், பொ ஐ மு ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றம் தொடர்பான விடயத்திற்கு, ஊழல் மோசடி தொடர்பான விடயத்திற்கும் முன்னுரிமை வழங்கிய வேளையில், ஏனைய விடயங்களில் சற்று தணிந்த குரலிலேயே பேசத் தீர்மானித்தது போன்று தெரிகின்றது இதே சமயம், இன்றைய சகல நிலைக்கும் ஜனாதிபதி ஆட்சிமுறையே காரணம் என்ற நிலைப்பாடே கொள்ளப்பட்டது

இதேசமயம், இனப்பிரச்சினை விவகாரத்திலும் அரசியற் தீர்வு பற்றிய தமது குரலை சற்றுக் குறைத்துக்கொண்டதோடு, பேச்சில் சில மாற்றங்களும் தென்பட்டன; இதற்கு இராணுவத் தரப்புடன் ஒத்துழைத்த போக்கை கடைப்பிடிக்க வேண்டும் என்ற முடிவா? அல்லது ஜனாதிபதி தேர்தலின்முன்னர் முரண்பாடுகளை தீவிரப்படுத்தக் கூடாது என்ற முடிவா? என்பதை தற்பொழுது உடன் கூறிவிட முடியாது. ஆயினும் காமினி திசாநாயக்காவின் கொலைக்குமுன்னர் இருந்த பொ ஐ மு. - இராணுவத்தரப்பு முரண்பாடு தற்பொழுது ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளதாகவே ஊகிக்க முடிகிறது.

ஆனால் எது எப்படி இருப்பினும், காமினி திசாநாயக்காவின் மரணத்தின் முன்னர் இருந்ததை விட பொ.ஐ.மு. சற்று தன்னம்பிக்கை இழந்த நிலையை அடைந்தது என்றே கூறவேண்டியுள்ளது; இதனை முற்போக்கு முன்னணி வேட்பாளர் நிகால் கலப்பதியின்- ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக உத்தரவாதம் அளித்தால் போட்டியில் இருந்து விலகுவது-

அடுத்ததாக இதுவரை ஐ தே கவிற்குள் இருந்த உட்கட்சிப் பூசலானது வீதிக்குக் கொண்டு வரப்பட்டது. இதற்கு ரணில் விக்கிரமசிங்காவின் கார் ஐ. தே. க. காரியாலயமான சிறிகோத்தாவின் முன் காமினியின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டமை எடுத்துக் காட்டாகும். இது ஐ.தே. கவினுள் உட்கட்சிப்பூசல் உச்சகட்டத்தை அடைவதை காட்டியது. காமினியின் ஆதரவாளர் திருமதி சிறிமா திசாநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதில் வெற்றிகொண்டிருப்பினும் அது இலகுவானதொன்றாக இருக்கவில்லை. சுமார் ஐந்து மணி நேர கடும் வாக்குவாதத்தின் பின்னரே இந்நிலை சாத்தியமாகியது; இதன் வெளிப்பாடே ஆகும்;



அத்தோடு காமினி திசாநாயக்க வின்மரணத்தின் பின்னர் தொண்டமான் பொ ஐ. முன்னணி அரசாங்கத்தில் இணைந்து கொண்டமை ஐ. தே கவைப் பொறுத்து பெரும் தாக்கத்தை விளைவிக்கக் கூடியதாகவே இருக்கும்.

இந் நிலையில் ஐ. தே கவைப் பொறுத்து தேர்தல் களத்தில் ஒரே ஒரு சாதகமான அம்சமாக இருப்பது காமினி திசாநாயக்காவின் கொலையால் ஏற்பட்ட அனுதாபமே ஆகும். தேர்தல் பிரசாரத்தில் பொ, ஐ. முன்னணிக்கு எதிரான வலுவான குற்றச்சாட்டுக்கள் எதையும் சுமத்த முடியாத நிலையில் இருந்த ஐ தே கவினருக்கு காமினி திசாநாயக்காவின் மரணம் அரசாங்கத்தைச் சாட ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளதெனலாம்.

இதனை ஏற்கனவே ஐ.தே.க செய்யத் தொடங்கி விட்டதெனலாம். இதன் ஒரு அம்சமே காமினி திசாநாயக்காவின் கொலையானது புலிகளும் அரசாங்கமும் கூட்டாக மேற்கொண்ட சதி என்ற குற்றச்சாட்டாகும். இதன் மூலம் இனவாத சக்திகளை உசுப்பிவிட்டு ஐ. தே. க சில ஆதாயங்களை ஈட்ட முற்படக்கூடும். இதைத் தவிர ஐ தே. கவிற்கு வேறு வகையான தேர்தல்யுக்திகள் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் சிறிலங்கா அரசியலில் அனுதாப வாக்குகளைத் திரட்டுவது என்பதும் இன்று அத்துணை இலகுவான காரியமல்ல ஏனெனில் ஐ தே- க வேட்பாளர் சிறிமா திசாநாயக்கா போன்றே அனுதாப

இந்நிலையில், கடந்த மாதம் 24ஆம் திகதி காமினி திசாநாயக்கா கொல்லப்பட்டதென்பது ஜனாதிபதித் தேர்தலின் அரசியற் சூழ் நிலையை அடியோடு மாற்றியதெனலாம் இக் குண்டுவெடிப்பானது ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரை அழித்தது மட்டுமல்ல. அரசியற்கட்சிகள் ஏற்கனவே வகுத்துக் கொண்ட தேர்தல் யுக்திகள், தந்திரங்கள் என்பனவற்றையே மாற்றியமைத்ததெனலாம். இது மூன்றாவது ஜனாதிபதித்தேர்தலில் இருந்த ஓரளவு சூட்டையும்முற்றாகத் தணித்ததென்றே கூறமுடியும்.

## ஜனாதிபதித் தேர்தல் களம்

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது ஆறுபேர் களத்தில் குதித்தனர் இதில் நல்வர் அரசியற் கட்சிகளின் சார்பிலும், இருவர் சுயேட்சை என்ற ரீதியிலும் போட்டியிடுகின்றனர். ஆனால் இவ் இரு சுயேட்சைகளும் ஐ. தே- கட்சியைச் சேர்ந்தவர்களாகும். இந்தவகையில் ஐ- தே- கட்சியில் இருந்து மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களும்- ஏனைய கட்சிகளான பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பிலும்: முற்போக்கு முன்னணி சார்பிலும் சிங்கள மஹா பூமி புத்திர தரப்பில் ஒவ்வொருவரும் களத்தில் இறங்கினர்.

ஆயினும் சிறிலங்காவின் கடந்த கால அரசியல் வரலாறு போன்றே ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையிலேயே பிரதான போட்டி இருந்தது இருப்பினும் அதற்கு முன்னர்நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலும் அதன் பின்னர் ஐ- தே- கட்சிக்குள் எழுந்த மோதல்களும் ஐ- தே- கட்சியை ஒரு பலவீனமான நிலையிலேயே இருக்க வைத்ததெனலாம்-

பொ. ஐ. முன்னணியைப் பொறுத்து ஜனாதிபதி வேட்பாளர் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட வேளையில் அதன் வெற்றிவாய்ப்பு சந்தேகத்திற்கு இடமானதாக இருக்கவில்லை என்றே அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்தனர். அதற்கு ஏற்றால் போல் பொதுஜன ஐக்கிய முன்னணியும் தெளிவான பிரசார யுக்திகளை வகுத்துக் கொண்டு செயற்படத் தொடங்கியது.

இதேவேளை பொ. ஐ மு. தனது பொதுத் தேர்தல் வாக்குறுதிகள் சிலவற்றை நிறைவேற்றியிருந்தவேளை, கடந்த கால ஆட்சியின் ஊழல் மோசடிகள், படுகொலைகள் என்பவற்றை வெளிப்படுத்திக் கொண்டே இருந்தது ஒருபுறம் ஊழல் மோசடி

வளர்த்த கடா மார்பில் பாய்வது போன்று டி- பி- விஜேதுங்காவையே பொருட்படுத்தாமல் செயற்பட்டமையும் அவருக்குவேறுவழி இன்றி ஒதுங்கிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியதெனலாம்-

இதே சமயம் காமினி திசாநாயக்காவின் புரட்டுக்கள் கவிழ்ப்புக்கள் ஐ- தே- கட்சிக்குள்ளும் பெரும் நெருக்குதலை ஏற்படுத்தியது சிறிசேன கூரே போன்றவர்கள் அரசியலில் இருந்து புறந்தள்ளப்பட பிரதமர் ரணில் போன்றோரும் அரசியல் நடவடிக்கைகளில் தீவிர அக்கறை காட்டாது ஒதுங்கினர்- அதேவேளை காமினியில் வெறுப்புற்ற ஏ. சே- ரணசிங்கா கட்சன் சமரசிங்கா போன்றவர்கள் சுயேட்சையாக ஜனாதிபதி தேர்தல் களத்தில் இறங்கினர் உண்மையில் இவர்களின் தேர்தல் பிரவேசமானது- ஐ. தே- கட்சிககு எதிரானதல்ல- காமினி திசாநாயக்காவிற்கு எதிரானதே என்பதில் சந்தேகமில்லை-

மேலும், பொதுத் தேர்தல் கூட்டாளியான தொண்டமானின் நிலைப்பாடும் திருப்தி தருவதாக இல்லை. தேர்தல் தோல்வியின் பின் தொண்டமான் - காமினி திசாநாயக்கா உயிருடன் இருக்கும் வரை - பொ. ஐ முன்னணிக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவிக்காது விட்டாலும் ஐ தே. கவிற்கு வழங்கி வந்த ஆதரவை விலக்கிக்கொண்டு விட்டிருந்தார் தனது நிலைப்பாட்டை 'நடுநிலைமை' என்ற ரீதியில் தொண்டமான் மாற்றிக்கொண்டார்.

இந்நிலையில் ஐ தே கட்சி நம்பிக்கை இழந்திருப்பினும் காமினி திசாநாயக்கா தேர்தலில் சற்றுச் சுறுசுறுப்பையே காட்டினார் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைந்தாலும் ஐ தே கவின் தலைமையை இதன் மூலம் உறுதிப்படுத்துவதே அவர் குறிக்கோளாக இருந்தது இந்த வகையில் ஐ தே கவிற்குள் இருந்த சில முரண்பாடுகளைக் களைவதிலும் அக்கறை காட்டினார் இதில் ஒன்றாக பிரேமதாசாவின் குடும்பத்தினருடன் தனக்கு இருந்த முரண்பாட்டை தீர்த்துக் கொள்வதில் வெற்றியும் பெற்றார்

## குண்டுவெடிப்புக் காட்சி மாற்றமும்

ஆயினும் ஜனாதிபதித் தேர்தல் ஒரு கடும்போட்டி அற்றதொன்றாகவே இருக்கும் என்ற நிலை காணப்பட்டபோதே காமினி திசாநாயக்காவும் ஐ தே கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் நால்வரும் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டனர்: இக்குண்டு வெடிப்பின் பின்னர் சிறிலங்காவின் அரசியற் தேர்தல் களத்தில் பெரும் காட்சிமாற்றம்ஒன்றுஏற்பட்டதெனலாம் இம்மாற்றமானது தனியாக வேட்பாளர் பட்டியலில்

இதேசமயம், இனப்பிரச்சினை விவகாரத்திலும் அரசியற் தீர்வு பற்றிய தமது குரலை சற்றுக் குறைத்துக் கொண்டதோடு, பேச்சில் சில மாற்றங்களும் தென்பட்டன; இதற்கு இராணுவத் தரப்புடன் ஒத்துழைத்த போக்கை கடைப்பிடிக்க வேண்டும் என்ற முடிவா? அல்லது ஜனாதிபதி தேர்தலின்முன்னர் முரண்பாடுகளை தீவிரப்படுத்தக் கூடாது என்ற முடிவா? என்பதை தற்பொழுது உடன் கூறிவிட முடியாது. ஆயினும் காமினி திசாநாயக்காவின் கொலைக்குமுன்னர் இருந்த பொ ஐ மு. - இராணுவத்தரப்பு முரண்பாடு தற்பொழுது ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளதாகவே ஊகிக்க முடிகிறது.

ஆனால் எது எப்படி இருப்பினும், காமினி திசாநாயக்காவின் மரணத்தின் முன்னர் இருந்ததை விட பொ.ஐ.மு. சற்று தன்னம்பிக்கை இழந்த நிலையை அடைந்தது என்றே கூறவேண்டியுள்ளது; இதனை முற்போக்கு முன்னணி வேட்பாளர் நிகால் கலப்பதியின்-ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக உத்தரவாதம் அளித்தால் போட்டியில் இருந்து விலகுவது - கோரிக்கையை பொ. ஐ மு. ஏற்பதில் காட்டிய அவசரமும், ஜனாதிபதி முறை ஒழிப்பிற்கு வழங்கியுள்ள காலவரையறையும், தொண்டமானை இணைத்துக்கொள்ள எடுத்த முடிவும் இவற்றையே ஆதாரப்படுத்துவதாகவுள்ளன.

## காட்சி மாற்றமும் ஐ. தே. கவும்

இதேசமயம், இக் காட்சி மாற்றம், ஐ. தே. கவை பலவகையிலும் பெரும்பாதிப்பிற்கு உள்ளாக்கியுள்ளது எனலாம். ஐ. தே. கட்சியில், குறிப்பிடத்தக்க வகையில் எஞ்சியிருந்த ஒரு தலைமையை இக் குண்டு வெடிப்புச் சம்பவம் அழித்துவிட்டதெனலாம். இதன் காரணமாக ஐ. தே. கட்சியின் தலைமை பெரிதும் பலவீனப்பட்டுப்போய்விட்டதென்பதற்கு பின்னர் நடந்தேறியுள்ள பல சம்பவங்களையே உதாரணமாக காட்டலாம்

முதலில் ஐ தே. கட்சியின் மரபையும் மீறி, கொல்லப்பட்ட காமினி திசாநாயக்காவின் மனைவிக்கு - ஐ தே. க. உறுப்பினர் அற்ற நிலையிலும் கூட - ஜனாதிபதி வேட்பாளர் பதவி வழங்கப்பட்டமையைக் குறிப்பிட முடியும் கடந்த காலத்தில் ஐ தே. க. தலைமைகளினால் - ஜே. ஆர். போன்றவர்களால் - பெரிதாக விமர்சிக்கப்பட்டதும், ஏற்றுக் கொள்ள முடியாததுமான இவ்விடயம் இன்று அவர்களின் விருப்பையும் மீறி ஐ தே. கவிற்குள் நிறைவேற்றப்பட்டுள்ளதெனலாம்.

த்தில் பொ, ஐ. முன்னணிக்கு எதிரான வலுவான குற்றச்சாட்டுகள் எதையும் சுமத்த முடியாத நிலையில் இருந்த ஐ தே கவினருக்கு காமினி திசாநாயக்காவின் மரணம் அரசாங்கத்தைச் சாட ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளதெனலாம்.

இதனை ஏற்கனவே ஐ.தே.க செய்யத் தொடங்கி விட்டதெனலாம். இதன் ஒரு அம்சமே காமினி திசாநாயக்காவின் கொலையானது புலிகளும் அரசாங்கமும் கூட்டாக மேற்கொண்ட சதி என்ற குற்றச்சாட்டாகும். இதன் மூலம் இனவாத சக்திகளை உசுப்பிவிட்டு ஐ. தே. க சில ஆதாயங்களை ஈட்ட முற்படக்கூடும். இதைத் தவிர ஐ தே. கவிற்கு வேறு வகையான தேர்தல்யுக்திகள் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் சிறிலங்கா அரசியலில் அனுதாப வாக்குகளைத் திரட்டுவது என்பதும் இன்று அத்துணை இலகுவான காரியமல்ல ஏனெனில் ஐ தே-க வேட்பாளர் சிறிமா திசாநாயக்கா போன்றே அனுதாப வாக்கிற்கு அத்துணை உரித்துடையவராக பொ. ஐ.மு வேட்பாளரான பிரதமர் சந்திரிகாவும் உள்ளனர்

அத்தோடு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதில்லை என்ற சிறிமா திசாநாயக்காவின் முடிவானது அனுதாப அலையை எழுச்சி பெற உதவப் போவதிலலை ஏற்கனவே வாக்காளர் முகமறியாத சிறிமா திசாநாயக்கா அனுதாப உணர்ச்சியினை மேடைகளில் தோன்றும் துயரான காட்சிகள் மூலமும் உணர்ச்சி ததும்பும் பேச்சின் மூலமுமே எழுச்சி பெறச் செய்ய முடியும். இந் நிலையில் அவர் பிரசார மேடைகளைத் தவிர்ப்பது ஐ தே. கவைப் பொறுத்து பெரும் நஷ்டம் என்றே கூற முடியும்

இந்த நிலையில் தேர்தல் களத்தில் காட்சி மாறினும் தேர்தல் முடிவுகள் மாற்றம் அடையும் என்று எதிர்பார்ப்பது கடினமாகவே உள்ளது. இருப்பினும் சிங்கள வாக்காளர்கள் யாரை தெரிவு செய்யினும் அரசியல் வன்முறைக்கு தமது கணவன்மார்களைப் பறி கொடுத்த பெண் ஒருவரையே ஜனாதிபதியாக்கப் போவது நிச்சயம். ஆனால் இதில உணர்ச்சிகளுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்போகின்றார்களா? அல்லது கடந்த கால வரலாற்றை மனதில் கொண்டு வாக்களிக்கப்போகின்றார்களா என்பதை தற்பொழுது அறுதியிட்டுக் கூறமுடியாது

-ஜெயராஜ்

---

## அண்ணா

''மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி'' என்ற கோஷமும், ''உறவுக்கு கை கொடுப்போம்'' ''உரிமைக்கு குரல் கொடுப்போம்'' என்ற வாசகமும் தமிழகத்தில் பிரபல்யம் பெறலாயிற்று என்பது வரலாறு.

## இந்தி எதிர்ப்பு

இந்தியாவில் அந்நியர் ஆதிக்கம் அகலுவதற்கு முன்பாகவே அதாவது 1938 முதலே இந்தி மொழிக்கான எதிர்ப்பு உணர்வு முளைவிட்டிருந்தது.

1947ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆதிக்கம் அகன்று சென்றதைத் தொடர்ந்து இந்தி மொழியின் ஊடுருவல் பற்றிய சந்தேகம் தோன்றிய போதெல்லாம் அதற்கு எதிரான நடவடிக்கைகளும் இடம்பெற்றன. நீறு பூத்த நெருப்பாக இருந்து வந்த இந்தி மொழி எதிர்ப்புணர்வுக்கு பேரறிஞர் அண்ணா 1965இல் செயல் வடிவம் கொடுத்தார் என்பதும், தமிழக மக்களின் ,குறிப்பாக மாணவர்களின் உணர்வுகளை பிரதிபலித்தார் என்பதும் அவரைத் தலைவராக உருவாக்கின.

இந்தி எதிர்ப்பு போராட்டம் தீவிரம் பெற்றதைத் தொடர்ந்து 1965இல் தமிழக காவல்துறை செயலிழந்தது. மத்திய அரசின் இராணுவம் தமிழக வீதிகளில் வலம வந்தது. அப்படியிருந்தும் காங்கிரஸ் தலைவர்கள் மக்கள்முன் தலைகாட்ட முடியாதிருந்தது. காங்கிரசின் பொறுப்பிலிருந்த தமிழக அரசு இயந்திரம் முற்றாக செயலிழந்தது. மத்திய அரசில் அமைச்சர்களாக இருந்த சி. சுப்பிரமணியம் ஒ வி. அழகேசன் போன்ற தமிழகத்தவர்கள் தமது பதவிகளைத்துறந்து போதும் நிலைமைசீர்திருந்தவில்லை. ஐம்பது நாட்கள் நீடித்த நிலைமை பேரறிஞர் அண்ணாவின் பெரும் முயற்சியால் பின்னர் கட்டுப்படுத்தப்பட்டது. 1967இல் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம்அண்ணா தலைமையில் முதன் முறையாக வெற்றியை ஈட்டியது;

இந்தப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த கால கட்டத்தில் மதுரை மாவட்டத்தில் ஆட்சித் தலைவராக இருந்தவர் தான் இப்போதைய தேர்தல் ஆணையாளர் டி என் சேஷன். ஆக.டி என் சேஷன், தமிழகத்தில் அண்ணாவின் பெயருக்குகளங்கம் கற்பிக்க எடுக்கப்படும் முயற்சி எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் புரியாமல் இருக்க முடியாது அப்படியிருந்தும் இத்தகைய ஒரு பெரிய குற்றச்சாட்டை சுமத்தியிருப்பது மூலம் சேஷன் அறுவடை செய்ய முயலும் பயன் என்ன என்பதே இப்போது முக்கியமானது

---

## பயிற்சி இன்று

க. பொ. த. (உயர்தர) சேவைக்காலப் பயிற்சி வகுப்பு இன்று தூயகணிதமும், நாளை பிரயோக கணிதமும் விலங்கியலும் நடைபெறவுள்ளன. 1994 ஓகஸ்ட் வினடத்தாள் மதிப்பீடு பற்றிய கலந்துரையாடல்கள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் காலை 9.00 மணி முதல் மாலை 4 30 வரை நடைபெறும்- மேற்படி பாடம் கற்பிக்கும் யாழ்- கல்வி வலயம்- 2 இற்குட்பட்ட சகல ஆசிரியர்களையும் கலந்து கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்-

---

# 5கோடி செலவில் திருத்திய காணி 15லட்சம் ரூபாவிற்கு விற்பனை

கொழும்பு

முன்னைய ஆட்சிக்காலத்தின் போது நகர அபிவிருத்தி சபை மேற்கொண்ட ஒரு நடவடிக்கையினால் பொது மக்களுக்கு சொந்தமான பல கோடி ரூபா நட்டம் மேற்பட்டுள்ள மற்றுமொரு சம்பவம் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

கொழும்பு ஆர் ஏ டி மெல் மாவத்தையில் இருக்கும் 217 பேர்ச் பரப்பளவு கொண்ட காணியே இவ்வாறு மோசடியான முறையில் விற்கப்பட்டுள்ளது இருபது கோடி ரூபா பெறுமானமுடைய இக் காணி தனியார் நிறுவனமொன்றின் வேண்டுகோளுக்கு இணங்க 1987இல் நகர அபிவிருத்தி சபையினால் பொறுப்பேற்கப்பட்டதுஇதன் பின் ஐந்து கோடி ரூபா செலவில் இக்காணி திருத்தப்பட்டது எனினும் பதினைந்து லட்சம் ரூபாவுக்கு இத்தனியார் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

---

## ஹட்சன் சமரசிங்கா இருதாரமணம் புரிந்தாரா?

### நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்ஜனாதிபதிதேர்தல் வேட்பாளருமான ஹட்மன் சமரசிங்க மீது இருதார மணம் புரிந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுஉளளது

# மின்னல் தாக்கி எண்ணெய்க் குதத்தில் தீ 500 பேர் கருகி சாவு; பலர் இடம்பெயர்வு

(கெய்ரோ)

தென் எகிப்தில் மின்னல் தாக்கத்தினால் ரொறன்கா கிராமத்திலுள்ள எண்ணெய் களஞ்சியமொன்று தீப்பற்றியதைத் தொடர்ந்து 500 பேர்வரை உயிரிழந்துள்ளனர்.

பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் அக்கிராமத்திலிருந்து வெளியேறி உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ரொறன்கா களஞ்சியத்திலுள்ள எண்ணெய்தாங்கி தொடர்ந்து எரிந்து கொண்டிருப்பதாகவும் கெய்ரோ நகரத்துக்கு தெற்கேயுள்ள நைல் பள்ளத்தாக்கில் கறுப்பு நிற புகை ஆகாயத்தை நிரப்பி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

நிவாரண பணியாளர்கள் பெருமளவு எரிந்த சடலங்களை மீட்டுள்ளனர் இந்த களஞ்சியத்தில் சுமார் ஐயாயிரம் தொன் எண்ணெய் சேமித்து வைக்கப்பட்டிருந்தது நூற்றுக்கணக்கான வீடுகள் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன 1992இல் பூமியதிர்ச்சியினால் 500 பேரளவில் கெய்ரோவில் உயிரிழந்ததை அடுத்து அங்கு ஏற்பட்ட மிகப்பெரிய உயிரிழப்பு இதுவாகும்எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

இறுதியாக கிடைத்த செய்திகளின் படி தீப்பற்றிய எண்ணெய்ரொறன்கோ கிராமத்து வீதியில் ஆறாக ஓடிக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது-

# ஆந்திரா, சென்னையில் சூறாவளியால் 86 பேர் பலி

(சென்னை)

தென்இந்தியாவின்சென்னை மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் கரையோரங்களைத் தாக்கிய சூறாவளியினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 86 ஆக அதிகரித்துள்ளது

ஆந்திரப் பிரதேசத்தில் சுமார் ஐம்பது கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன கடற்கொந்தளிப்பாலும் கடும் மழையினாலும் வெள்ள அதிகரிப்பு ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

அண்மையில் கரையைக் கடந்து சென்ற சூறாவளியின் காரணமாக இடம் பெற்ற சம்பவங்களில் திருப்பதி ஆலயத்தில் இடம்பெற்ற சம்பவம் மிகவும் மோசமானதாகும்

திருப்பதி ஆலய தரிசனத்திற்காக பயணித்த சுமார் 35 பேர் பஸ்வண்டியுடன் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டிருக்கிறார்கள்

### யாழ்

வாக நாவற்குழி லவனிதா குடியிருப்பில் முதல்முதலாக 32 பேருக்கு பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குடாநாட்டிலுள்ளசகலசனசமூக நிலையங்களுக்கும் அகதி முகாம்களுக்கும் மேற்படி எழுத்தறிவற்றவர்களை திரட்டுவது தொடர்பான அறிவுரைகள் யாழ். கல்வித் திணைக்களத்தால் அனுப்பப்பட்டுள்ளது. எழுத்தறிவூட்டும் பயிற்சி மூன்று மாதங்கள் அவ்வப் பகுதிகளில் தெரிவு செய்யப்படும் இடங்களில் நடாத்தப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (சி)

### ஒக்டோபர்

ளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

அத்துடன் இக் காலப்பகுதியில் நோய்களின் தாக்கம் அதிகமாகக்காணப்படும் என்பதினால் மக்கள் மிகவும் அவதானமாக நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் (பாநி)

### சீனியின்

முறையே 10 ரூபாயாலும் குறைக்கப்பட்டுள்ளன-

அரசு டீசல் எண்ணெயின் விலையைக் குறைத்துள்ளதால் கூட்டுறவு மொத்த ஸ் தாபனம் நன்மையடை

ஐ. தே. முன்னணி உறுப்பினரான

# சிறிமாவிற்கு ஐ.தே.கவினர் எவ்வாறு வாக்களிப்பர்

ரணசிங்கா கேள்வி

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான சிறிமா திசாநாயக்கா ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மத்திய மாகாண சபை உறுபபினராவார் அவர் எவ்வாறு யானைச் சின்னத்தில் போட்டியிடமுடியும் இதனால் ஐ, தே, க ஆதரவாளர்கள் அனைவரும் எனக்கே வாக்களிப்பர் இவ்வாறு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சுயேட்சை வேட்பாளரான ஏ,ஜே ரணசிங்க தெரிவித்துள்ளார்

பத்திரிகையாளர் மாநாடொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

# வெளிச்சம் சஞ்சிகை நாளை வெளிவருகிறது

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக இதழின் ஐப்பசி மாத இதழ் கவிதைச் சிறப்பிதழாக நாளை வெளிவருகின்றது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் சிந்திக்கத்தூண்டும் சில குறிப்புகளும் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களுடனான நேர்காணலும் இடம்பெறுகின்றன. அத்துடன் யாழ்ப்பாணச் சமூக அமைப்புப்பற்றியும் அதனுடன் இணைந்த சீதன முறையை பற்றியும் 'அடேல் ஆன்' எழுதிய 'உடையாத விலங்குகள்' தமிழ்த்தாய் வெளியீடான 51 கவிஞர்களின் கவிதைத் தொகுதியான 'காலம் எழுதியவரிகள்' ஆகிய நூல்களுக்கான மதிப்பீட்டுரைகளும், புதுவை இரத்தினதுரை, முருகையன், வீ. பரந்தாமன் மு. வே. யோ. வாஞ்சிநாதன், ச, வே பஞ்சாட்சரம், தில்லைச்சிவன், தா. இராமலிங்கம், இளையவன். செ.பொ. சிவனேஸ், விவேக், வவுனியா திலீபன், கருணாகரன், சபா. ஜெயராசா, என். கிருஷ்ண சிங்கம். இயல்வாணன், உதயலட்சுமி, நாமகள், இளந்திரையன் இன்னும் தமிழீழத்தின் தலைசிறந்த கவிஞர்கள் மற்றும் இளங்கவிஞர்கள் ஆகியோரின் நெஞ்சில் நிலைத்துநிற்கும் 35 கவிஞர்களின்

### பிரதிநிதிகள்

பாகவும் ஆராயவுள்ளனர்என தெரியவருகின்றது-

அத்துடன் இவர்கள் தமது

# இலங்கையில் தமிழரை ஒழிப்பதே இனப்பிரச்சினைக்கு தீர்வாகும்

## சிங்களச் சிப்பாயின் இனவெறிக் கூச்சல்

(கொழும்பு)

வடக்கிலுள்ள தமிழர்களை மட்டுமல்ல நாடு முழுவதுமுள்ள தமிழர்களை அடியோடு ஒழிக்க வேண்டும். இதுவே வடக்கு -கிழக்கு பிரச்சினைக்கான தீர்வாகும் என கொழும்பு தின சரி ஒன்றுக்கு கடிதம்எழுதியுள்ள இராணுவ கோப்ரல் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிமல் சுகதீப எனும் இராணுவ கோப்ரலே இவ்வாறு தெரிவித்துள்ளவராவார்- இவர் யாழ் கோட்டையில் விடுதலைப் புலிகளின் ஜொனி மிதிவெடியில் சிக்கி காலை இழந்தவர்என்பது குறிப்பிடத்தக்கது இந்த இராணுவ கோப்ரலின் கடிதத்தில் நான் இராணுவத்தின் ஐந்தாவது தொழிநுட்ப பொறியியல் றெஜிமென்டில் ஒன்பது வருடங்களாக பணியாற்றியுள்ளேன்- எனது சேவைக் காலத்தில் கூடுதலாகவடக்கு கிழக்கில் பணியாற்றியுள்ளேன்- இப்போது நான் ஊனமுற்றவனாகி வேலை பார்க்க முடியாதவனாக உள்ளேன்- 26-09-1990 இல் விடுதலைப்புலிகள் யாழ் கோட்டையை கைப்பற்றியபோது ஜொனி மிதிவெடியில் சிக்கியதால் எனது இடது கால் பாதத்தின் கீழ்ப்பகுதி துண்டிக்கப்பட்டது. தற்போது இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவெளியேறிஎனது வீட்டில் வசித்து வருகின்றேன்- வடபகுதி பிரச்சினைக்கு தீர்வு காண எனது அபிப்பிராயப்படி எதுவித அரசியல் பேச்சுக்களையும் நடத்தாமல் வடக்கு கிழக்கு மட்டுமல்ல நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள தமிழர்களை அடியோடு ஒழித்துக் கட்ட வேண்டும்- ஒவ்வொரு தமிழனும் புலிதான்- புலிகள் உட்பட எல்லா இயக்கங்களினதும் செயல் சிங்களமக்களை கொல்வதும் இராணுவத்தை தாக்குவதுமேயாகும்- எனதுகோரிக்கையை ஏற்று யுத்தத்தை யுத்தத்தின் மூலம் ஒழிப்பதே உடனடியாக செய்ய வேண்டியதாகும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது-

### தொல்லைகளிலிருந்து

தோறும் தனியான மகளிர் பொலிஸ் பிரிவுகள் நிறுவப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

ஆடைத் தொழிற்சாலைகளில் மற்றும்தனியார் ஸ்தாபனங்களில் வேலை பார்க்கும் பெண்கள் குறிப்பாக யுவதிகள் ஆண்களால் சொல்லொணாத இம்சைக்கு ஆளாவதாக பல்வேறு மட்டங்களிலிருந்து புகார்கள் கிடைத்து வருவதை அடுத்தே பொலிஸ் திணைக்களம் இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது;

### தேர்தலைக்

திருந்தது தெரிந்ததே

இதன் அடிப்படையில் இந்திய மத்திய அமைச்சரவையின் முன்னாள் செயலாளரும் முன்னாள் பஞ்சாப் ஆளுனருமான நிர்மன்முகர்தி, முன்னாள் வெளியுறவுச் செயலர் என். கே. ரத்கோத்ர முன்னாள் பாதுகாப்பு மற்றும் உள்துறை செயலர் என். என். கோரா ஆகியோர் அடங்கிய குழு ஒன்றே இலங்கை வரவுள்ளது.

சார்க் நாடுகளில் நடைபெறும் பொதுத் தேர்தல்களை பார்வையிடுவதற்காக தொண்டர் நிறுவனங்களை அழைப்பது வழக்கம். இதன் படியே இந்தக் குழுவும் தனிப்பட்டமுறையில் இலங்கை செல்கிறது என இந்தி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994 - 11- 04

**வெள்ளி இரவு**

08-01: கலை மஞ்சரி - நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம் அறிமுகமாவது ''உலக உலா'' சஞ்சிகை அதனை அடுத்து சிறுகதை- கை கூர்வேலன் எழுதிய ''உயர்ந்த உள்ளம்'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை - தூயவன் எழுதிய ''பசி தீர்கிறது, தாகம் தணிகிறது''

08-25: கணப்பொழுது- சி. கண்ணம்மா எழுதிய ''கப்டன் மலரவன்''

08-30: செய்திகள்

08-40: அரசியல் அரங்கம்

08-50: வாத்திய கானங்கள்

09-00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1994-11-05

**சனி காலை**

07-02: மாவீரவணக்கம்

07-15: நீங்கள் கேட்டவை

07-30: செய்திகள்

07-35: பத்திரிகைச் செய்திகள்

07-40: நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08-00: மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு

# விஞ்ஞானபாட செயன்முறை தேர்வு

யாழ்ப்பாண வலயம் ஒன்றிலுள்ள ஊர்காவற்றுறை, வேலணை, யாழ்ப்பாணம் நல்லூர், சாவகச்சேரி ஆகிய கோட்டங்களில் ஆண்டிறுதிப் பொதுத் தேர்வான முதனிலைக் கல்விச் சான்றிதழ் தேர்வுக்குரிய பாடங்கள் தவிர்ந்த அழகியல் ஆக்கம், தொடக்க விஞ்ஞானம், உடற் கல்வி ஆகிய நான்கு பாடங்களும் செயன்முறையாக மட்டும் தேர்வுக்குட்படுத்தி உரிய புள்ளிகள் மாணாக்கரின் ஆண்டிறுதித் தேர்ச்சி அறிக்கையில் பதிந்து கொடுக்கப்படவுள்ளது. தொடக்க விஞ்ஞான பாடத்திற்கு மட்டும் உரிய செயன்முறை வினா உருப்படிகளும் அறிவுறுத்தல்களும் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் வலயம் ஒன்றின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

## சதுரங்க சுற்றுப் போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் மாணவர் ஆசிரியர்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டி நாளை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கும் விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.


போஸ்கோ

இல. 3, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்,

ஆதரவில்

யாழ். மிட் - ரவுண் றோற்ரறக்ற் கழகம் நடாத்தும

## கராத்தே சுற்றுப் போட்டி

நவம்பர் 9ஆம். 10 ஆம் திகதிகளில் நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் முதல் சுற்றுக்கள் ஆரம்பமாக உள்ளன.

## இறுதிப் போட்டிகள்

கட்டட நிர்மாண நிதிக்காக 12ஆம், 13ஆம் திகதிகளில் மின்னொளியில் மாலை 6-00க்கு யா/பல்கலைக் கழக முன் மைதானத்தில் நடாத்தப்பட உள்ளன.

ரிக்கற்றுக்கள் விற்பனையாகும் இடங்கள்

1) பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
2) ராசி பட்டுச் சோலை (ராசி சில்க்ஸ்) நவீனசந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்;

பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக இதழின் ஐப்பசி மாத இதழ் கவிதைச் சிறப்பிதழாக நாளை வெளிவருகின்றது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் சிந்திக்கத்தூண்டும் சில குறிப்புகளும் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களுடனான நேர்காணலும் இடம்பெறுகின்றன. அத்துடன் யாழ்ப்பாணச் சமூக அமைப்புப்பற்றியும் அதனுடன் இணைந்த சீதன முறையை பற்றியும் 'உடையாத விலங்குகள்' தமிழ்த்தாய் வெளியீடான 51 கவிஞர்களின் கவிதைத் தொகுதியான 'காலம் எழுதியவரிகள்' ஆகிய நூல்களுக்கான மதிப்பீட்டுரைகளும், புதுவை இரத்தினதுரை, முருகையன், வீ. பரந்தாமன் மு. வே. யோ. வாஞ்சிநாதன், ச, வே பஞ்சாட்சரம், தில்லைச்சிவன், தா. இராமலிங்கம், இளையவன். செ.பொ. சிவனேஸ், விவேக், வவுனியா திலீபன், கருணாகரன், சபா. ஜெயராசா, என். கிருஷ்ணசிங்கம். இயல்வாணன், உதயலட்சுமி, நாமகள், இளந்திரையன் இன்னும் தமிழீழத்தின் தலைசிறந்த கவிஞர்கள் மற்றும் இளங்கவிஞர்கள் ஆகியோரின் நெஞ்சில் நிலைத்துநிற்கும் 35 கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி இந்த இதழ் வெளிவருகின்றது.

இது வெளிச்சத்தின் முப்பதாவது இதழ் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரதிநிதிகள்

பாகவும் ஆராயவுள்ளனர்என தெரியவருகின்றது-

அத்துடன் இவர்கள் தமது பயணத்தை முடித்துக்கொண்டு எதிர்வரும் 8ஆம் திகதி இங்கிருந்து கொழும்பு திரும்புவர் என மேலும் தெரியவருகின்றது- [பா]

தப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (சி)

## ஒக்டோபர்

ளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

அத்துடன் இக் காலப்பகுதியில் நோய்களின் தாக்கம் அதிமாகக்காணப்படும் என்பதினால் மக்கள் மிகவும் அவதானமாக நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் (பா நி)

## சீனியின

முறையே 10 ரூபாயாலும் குறைக்கப்பட்டுள்ளன-

அரசு டீசல் எண்ணெய்யின் விலையைக் குறைத்துள்ளதால் கூட்டுறவு மொத்தஸ்தாபனம் நன்மையடைந்துள்ளது என்றார்-

திருந்தது தெரிந்ததே

இதன் அடிப்படையில் இந்திய மத்திய அமைச்சரவையின் முன்னாள் செயலாளரும் முன்னாள் பஞ்சாப் ஆளுனருமான நிர்மன்முகர்தி, முன்னாள் வெளியுறவுச் செயலர் என். கே. ரதிகோத்ர முன்னாள் பாதுகாப்பு மற்றும் உள்துறை செயலர் என். என். கோரா ஆகியோர் அடங்கிய குழு ஒன்றே இலங்கை வரவுள்ளது.

சார்க் நாடுகளில் நடைபெறும் பொதுத் தேர்தல்களை பார்வையிடுவதற்காக தொண்டர் நிறுவனங்களை அழைப்பது வழக்கம். இதன் படியே இந்தக் குழுவும் தனிப்பட்டமுறையில் இலங்கை செல்கிறது என இந்திய வானொலி தெரிவித்தது

கம்

08-50: வாத்திய கானங்கள்

09-00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1994-11-05

சனி காலை

07-02: மாவீரவணக்கம்

07-15: நீங்கள் கேட்டவை

07-30: செய்திகள்

07-35: பத்திரிகைச் செய்திகள்

07-40: நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08-00: மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.


யாழ். மிட் - ரவுண் றோற்ரறக்ற் கழகம் நடாத்தும்

# கராத்தே சுற்றுப் போட்டி

நவம்பர் 9ஆம். 10 ஆம் திகதிகளில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் முதல் சுற்றுக்கள் ஆரம்பமாக உள்ளன.

# இறுதிப் போட்டிகள்

கட்டட நிர்மாண நிதிக்காக 12ஆம், 13ஆம் திகதிகளில் மின்னொளியில் மாலை 6-00க்கு யா/பல்கலைக் கழக முன் மைதானத்தில் நடாத்தப்பட உள்ளன.

**ரிக்கற்றுக்கள் விற்பனையாகும் இடங்கள்**

1) பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
2) ராசி பட்டுச் சோலை (ராசி சில்க்ஸ்) நவீனசந்தை. (உட்புறம்) யாழ்ப்பாணம்;
3) யாழ் (வெஸ்கோ) மருந்தகம் - மருத்துவ மனை வீதி - யாழ்ப்பாணம்.
4) சபாரிஸ் - சுண்டிக்குளியடி-

ரிக்கற்றுகளுக்கு முந்துங்கள்

செயல்திட்ட இயக்குனர்

(9980)



# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## வைரமுத்து அப்புத்துரை

அவர்கள்

(இளைப்பாறிய இ. போ. ச சாரதி)

எமது விளையாட்டுக்கழக வலை பந்தாட்ட அணி வீராங்கனை செல்வி அ. கௌரியின் தந்தையாரின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

தமது குடும்பத் தலைவனை இழந்து தவிக்கும் இவரின் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

கிறாஸ் கொப்பேர்ஸ்

தெல்லிப்பழை (சி-10644)



# தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

## உபபரிசோதகர்/காவலர் தரங்கள்

**கல்வித் தகைமைகள்:-**
(8-ம் வகுப்புத் தொடக்கம்
க. பொ. த. (உயர்தரம்) வரை

**உயரம்:-** 5' 6''

**வயது.-** 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் 1994-11-10 ஆந் திகதி வரை பழைய பூங்காவில் உள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாக சமுகந்தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாக சமுகந்தரவும்.

பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

(சி-10640)



# அறிவித்தல்

யா/ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி அபிவிருத்தி நிதிக்காக எதிர்வரும் 05-11-1994ம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த பருத்திநகர் அமரர்சான்டோ M துரைரத்தினத்தின் மாணவன் சான்டோ எஸ், செல்வராசா குழுவினரின்......

# வீர தீர சாகச விளையாட்டுக்கள்

தவிர்க்க முடியாத காரணத்தால் மறு அறிவித்தல் வரை பின் போடப்பட்டுள்ளது.
அசௌகரியத்திற்கு மனம் வருந்துகின்றோம்.

(9968) - கல்லூரி அபிவிருத்திக்குழு



தேசிய இன ஒடுக்குமுறை
விடுதலைப் போராட்டச் சூழல் சார்ந்த
வாழ்வனுபவங்களின் கவித்துவப்
பதிவுகள்

51 கவிஞர்களின் கவிதைத் தொகுதி

# காலம் எழுதிய வரிகள்



விலை: ரூபா 60-00

எல்லாப் புத்தகசாலைகளிலும்
விற்பனையாகிறது.

இது ஒரு தமிழ்த்தாய் வெளியீடு!

(9975)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 04-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.